# கடற்புலிகள்

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்

கடலிலே காவியம் படைப்போம்

**SEA TIGERS**

**OF LIBERATION TIGERS**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கடற்புலிகள்

இது,

தமிழீழ விடுதலைப்புலிகள்

வெளியீட்டுப்பிரிவின்


வெளியீடு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"புவியியல் ரீதியாகத் தமிழீழத்தின்
பாதுகாப்பு கடலோடு
ஒன்றிப்போயுள்ளது. எனவே
கடற்பரப்பிலும் நாம் பலம்
பொருந்தியவர்களாகி, எமது கடலில்
எதிரி வைத்திருக்கும் கடலாதிக்கத்தைத்
தகர்த்து, எமது கடலில் நாம் பலம்
பெறும்போதுதான், விடுவிக்கப்படும்
நிலப்பகுதியை நிரந்தரமாக
நிலைநிறுத்திக்கொள்வதுடன்,
தமிழீழத்தின் நிலப்பகுதிகளில் இருக்கும்
எதிரிப்படையையும்
விரட்டியடிக்கமுடியும்"

-தலைவர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தலைவர் அவர்களுடன் விடுதலைப்புலிகள் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை

கடற்புலிகள்

| | | |
|---|---|---|
| வெளியீடு | - | வெளியீட்டுப்பிரிவு,<br>தமிழீழ விடுதலைப்புலிகள்,<br>தமிழீழம். |
| முதற்பதிப்பு | - | மார்கழி 1993 |
| இரண்டாம்பதிப்பு | - | ஐப்பசி 1995<br>சர்வதேசச் செயலகம்.<br>தமிழீழ விடுதலைப்புலிகள், |
| அன்பளிப்பு | - | ரூபா 60/- |


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## நுழைவாயில்...

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்.

1984 ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பட்டு, தமிழீழக் கடலன்னையின் மடியில் தவழ்ந்த ஒரு செல்லக் குழந்தை இது.

இன்று-சுமார் 10 வருடங்களின் பின்-தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கைத் தீர்மானிக்கும் ஒரு நிர்ணய சக்தியாக பெருவளர்ச்சி கண்டுவிட்டது.

எமது தாயகத்தின் புவியியல் அமைப்பைக் கருத்திற் கொண்டு கடற்புலிகளின் வளர்ச்சியிலும் அதன் செயற்பாட்டிலும் தலைவர் அவர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.

'கடலிலே காவியம் படைப்போம்' என்ற உறுதிப்பாட்டைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டு வரும் கடற்புலிகளின் சாதனைகளும் தியாகச் செயல்களும் எமது

போராட்ட வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை.

இச்சிறுநூலானது, கடற்புலிகளின் வரலாற்றுச்சுருக்கத்தையும் அதன் சாதனைகளையும் விளக்கி நிற்கின்றது. அத்துடன் கடற்புலிப் போராளிகள் சிலரின் வீரச்செயல்களையும், அவர்கள் புரிந்த உன்னத தியாகங்களையும் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துகின்றது.

எமது இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழில் கடற்புலிகள் தொடர்பாக, காலத்திற்குக் காலம் வெளியாகியிருந்த கட்டுரைகளினது தொகுப்புடன், வேறுசில விடயங்களையும் கொண்டதாக இந்த நூல் அமைந்துள்ளது.

'விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்' பற்றிய ஒரு சிறந்த ஆவணமாக இத்தொகுப்பு நூல் அமைந்துள்ளது என்று கூறலாம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கடற்புலிகள்

### *தமிழீழக் கடல்*

தமிழீழத்தைப் பொறுத்தளவில், இது மிக மிகப் பிரதானமானது.

எங்கள் தாய்த்திருநாட்டில் நிலத்திற்கு நிகராகக் கடலும் இணைந்திருக்கிறது. தமிழீழ நிலப்பகுதியை எங்கள் கடல் மூன்று பக்கங்களில் அரவணைத்தபடி உள்ளது.

பலர் நினைப்பதைப்போல எமது பாரம்பரிய வாழிடமான நிலப்பகுதி மட்டும்தான் தமிழீழத் தாயகம் அல்ல. பெருமையும் பழமையும் செழுமையும் கொண்ட இந்தக் கடலும் நிலமும் இணைந்ததுதான் எமது தமிழீழத் தாயகம் ஆகும்.

### *இது எங்கள் கடல்*

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எமது முன்னோர்களின் சமூக, பொருளாதார வாழ்வோடு இது பின்னிப் பிணைந்து நிற்கின்றது.

எமது முன்னோர்களின் கட்டுமரங்களும் வாணிபக் கப்பல்களும் போர்ப்படகுகளும் இக்கடலன்னையின் மடியில்தான் தவழ்ந்து திரிந்தன.

தமிழீழக்கடல் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வெளி உலக வர்த்தகத் தொடர்புகளுக்காகவும் முக்கியம் பெறுகின்றது. ஆனால் அதைவிட முக்கியமாக தமிழீழத்தின் பாதுகாப்புக்கு இக்கடல் மிக மிகப் பிரதானமானது. இக்கடல் எமது கட்டுப்பாட்டில் உள்ள வரை மட்டும்தான் அதனால் வரும் பொருளாதார நன்மைகளையும் அரசியல் நன்மைகளையும் எமது மக்கள் அனுபவிக்கமுடியும். ஆகவே

Tamileelam Archive

எமது கடல் எமது தேசத்தின் பாதுகாப்போடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றது.

ஆசியாவிலேயே மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகமான திருகோணமலையைக் கொண்டிருப்பது எமது கடலின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். இது தவிர, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல துறைமுகங்களையும், பொருளாதார மையங்களையும் எமது கடல் கொண்டிருக்கின்றது.

தமிழீழத் தாயக மீட்பிற்கான ஆயுதப் போராட்டம் கருக்கொண்டு ஆரம்பமாகிய முன்னைய காலத்திலும்சரி, அது முனைப்புற்று வளர்த்துச்செல்லப்படும் நிகழ்காலத்திலும் சரி விடுதலைக்குப் பின் நிறுவப்படப்போகின்ற தனி அரசு ஆட்சியில் நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், அரசியல் ஆகிய விடயங்களைத் தீர்மானிக்கும் எதிர்காலத்திலும்சரி, எமது கடல் மிகப் பிரதான பங்கு வகித்தது - வகிக்கப் போகிறது.

இப்படியாகப் பல பரிமாணங்களில் முக்கியத்துவம் பெற்ற பல சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள எங்கள் கடலை நாம் சிறீலங்காவின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமெனில் தமிழீழக் கடற்பரப்பில் நாம் எதிரியைவிடப் பலம் பொருந்தியவர்களாக மிளிர வேண்டும். இந்த யதார்த்த உண்மையை அன்றே புரிந்து கொண்ட எமது தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் பல வருடங்களுக்கு முன்னரேயே அதற்கு வேண்டிய திட்டங்களைத் தயாரித்து, படிப்படியாக அதற்கு நடைமுறை உருவமும் கொடுத்துள்ளார்.

சிங்களப் பேரினவாத அரசிடமிருந்து எமது தாயகத்தை மீட்டெடுப்பதற்கான போராட்டம் என்னும்போது, தமிழீழத் தாயகத்தின் தரை எல்லைகளையும் கடல் எல்லைகளையும் விடுவிப்பது என்பதையே அது குறித்து நிற்கின்றது.

எனவே, தமிழீழத் தாயகத்தின் ஒரு பகுதியாகிய தரையில் பிரமாண்டமான வளர்ச்சியுடன் இருக்கும் எமது தரைப்படையைப் போன்று தமிழீழம் தனக்கென்று ஒரு கடற்படையையும் கட்டி எழுப்ப

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

வேண்டியது அவசியம்.

எமது மக்களின் சுதந்திர எழுச்சியை உற்று நோக்குவோமானால் அது புரட்சிகர ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தபின் எந்த அளவுக்குக் கடலோடு பின்னிப் பிணைந்திருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

தமிழீழம் தரைத் தொடரில் தனது எல்லையாக சிறீலங்காவை மட்டுமே கொண்டிருக்கின்றது. ஏனைய திசைகளில் கடலிலேயே எமது எல்லைகள் இருக்கின்றன. எமது ஆயுதப் போராட்டம் கடந்து வந்த ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் தமிழீழக் கடல் மிகப் பெரிய பாத்திரத்தை வகித்துள்ளது.

இச்சூழ்நிலையிலேயே 1984 ஆம் ஆண்டு, தலைவர் பிரபாகரன் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடற்புலிகள் படைப் பிரிவுக்கு அதன் வரலாற்றுரீதியான பிறப்பைக் கொடுத்து, ஆரம்பத்தில் அதற்கு 'கடற்புலிகள்' எனப் பெயரும் சூட்டினார்.

ஆரம்பத்தில் கடற்புலி அணியினருக்கு கடல் சம்பந்தமான அறிவு ஊட்டப்பட்டதுடன் கடற்சண்டைகளுக்குத் தேவையான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. ஆனாலும் கடற்புலி அணியினர் எதிரியிடம் வலிந்துசென்று கடற் சண்டைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் அந்தந்தக் காலங்களோடு ஒட்டிய தேவைகளை நிறைவு செய்யும் பல பணிகளை அவர்கள் ஆற்ற வேண்டியிருந்தது. கடற் பயணங்கள் போவதற்கும் அவற்றிற்குப் பாதுகாப்பு அளிப்பதற்குமான வேலைகளையே ஆரம்பத்தில் கடற்புலி அணியினர் செய்து வந்தனர்.

எனினும் சிறீலங்கா கடற்படையினரின் போர்ப் படகுகள் மீது, ஆங்காங்கே ஒருசில கடற்கண்ணித் தாக்குதல்களையும் நிகழ்த்தி யுள்ளனர்.

1984 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதிலிருந்து 6 வருடங்களாகப் பெரிய அளவிலான கடற் சண்டைகள் எதிலுமே ஈடுபடாதிருந்த கடற்புலி அணியினர், 1990 ஆம் ஆண்டு மீண்டும் சிறீலங்கா

Tamileelam Archive

இராணுவத்துடன் போர் ஆரம்பமாகிய போது கடற் சண்டைகளில் ஈடுபடத் தொடங்கினர். இக் கடற்போரிலும் கரும்புலித் தாக்குதல் வடிவம் புகுத்தப்பட்டு, கடற்போர் ஒரு புதிய பரிமாணத்திற்குள் சென்றது.

இந்த வகையில் சிறீலங்காக் கடற்படை மீதான தனது முதலாவது பாரிய தாக்குதலை 10.07.1990 அன்று வல்வைக் கடலில் வைத்துக் கடற் கரும்புலிகள் மேற்கொண்டனர். வெடிமருந்து நிரப்பிய படகொன்றுடன் சென்ற கடற் கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோர் சிறீலங்கா கடற்படையின் ஒரு போர்க் கப்பலைச் சேதமாக்கி இந்த வீர சாதனையைப் படைத்தார்கள்.

இதே போன்று 04.05.1991 அன்றும் வல்வைக் கடலில் வைத்து கட்டளைக் கப்பலொன்று கடற்புலிகளால் தகர்க்கப்பட்டது. இதுவும் ஒரு கரும்புலி நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோர் வீரச்சாவை அணைத்துக் கொண்டார்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் சுதந்திரமாக உலாவந்த சிங்களக் கடற்படையினருக்கு இவ்விரண்டு கரும்புலி நடவடிக்கைகளும் பீதியைக் கொடுத்திருந்தன. அத்துடன் தமிழீழக் கடற்பரப்பில் சிங்களக் கடற்படை வைத்திருந்த கடல் ஏகபோகம் உடைந்து சிதறியது.

தமிழ் மக்களாகிய நாம் ஒரு யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைக்கான போராட்டம் நிலங்களை விடுவிக்கும் அளவிற்கு முன்னேறியபோது சிறீலங்கா அரசானது கடல் மூலமே தனது படைப்பலத்தைப் பிரயோகித்து எமது முன்னேற்றத் தைத் தடுக்க முயன்று வருவதை, நாம் கண்டு வருகின்றோம். அதாவது தரையுத்தத்தை வெல்ல எதிரி கடலையே பயன்படுத்தி வருகின்றான்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியைக் கைப்பற்ற 'ஒப்பரேசன் லிபரேசன்' என்ற இராணுவ நடவடிக்கையைச் சிங்களப் படைகள் நடாத்திய போதும், 1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாமை நாம்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

வெற்றிகொள்ள முயன்ற சமயத்திலும், 1991 ஆம் ஆண்டு சிலாவத்துறை முகாமை நாம் கைப்பற்ற முயன்ற சமயத்திலும், 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரின் போது எம்மிடம் வீழ்ச்சியடையும் நிலையிலிருந்த ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாக்கும் போதும், சிறீலங்கா அரசு கடல்வழி மூலமே தனது பலத்தைப் பிரயோகித்து எமது முயற்சிகளுக்குக் குறுக்கே நின்றது.இதற்குப் பிரதான காரணம் எமது கடலில் எதிரி வைத்திருந்த கடல் ஏகபோகம்தான்.

தலைவர் பிரபாகரன் அவர்கள் அடிக்கடி கூறுவார்: "புவியியல் ரீதியாகத் தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றிப்போயுள்ளது. எனவே, கடற்பரப்பிலும் நாம் பலம் பொருந்தியவர்களாகி; எமது கடலில் எதிரி வைத்திருக்கும் கடல் ஆதிக்கத்தைத் தகர்த்து; எமது கடலில் நாம் பலம் பெறும் போதுதான் விடுவிக்கப்படும் நிலப் பகுதியை நிரந்தரமாக நிலை நிறுத்திக்கொள்வதுடன், தமிழீழத்தின் நிலப்பகுதிகளில் இருக்கும் எதிரிப் படையையும் விரட்டியடிக்க முடியும்."

ஒரு கடற்படையை நாம் கட்டியெழுப்ப வேண்டுமாயின் ஏராளமான பொருட் செலவைச் சந்திக்க நாம் தயாராக இருக்க வேண்டும். தரைச் சண்டைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள், உபகரணங்களின் பெறுமதியை விடக் கடற் சண்டைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுத உபகரணங்களின் பெறுமதி மிக மிக அதிகமாகும். எனவே ஒரு கடற்படையைக் கட்டி வளர்க்கப் பொருளாதாரப் பலமும் தேவை.

தமிழீழத்தைப் பொறுத்தவரை வெளியுலகத் தொடர்புகளுக்கும், போராட்டத்திற்குத் தேவையான விநியோகங்களுக்கும், அதற்குரிய செயற்பாடுகளுக்கும் கடலே பிரதான வழியாக இருக்கின்றது. எமது தரை எல்லையை (சிறீலங்காவுடனானது) இதற்கு நாம் பயன்படுத்த முடியாது. எனவே போக்குவரத்து, விநியோகங்கள், உலகத் தொடர்புகள் யாவுமே கடல்மூலமே உள்ளன.

எனவேதான் எதிரி வைத்ததிருக்கும் கடலாதிக்கத்தைத் தகர்த்து, கடற்பரப்பில் அவனது நடமாட்டத்தைத் தடுக்க வேண்டியது மிக மிக அத்தியாவசியமானது. அப்போதுதான் எமது தாயகப் போர்

வெற்றிபெற முடியும்.

1984 ஆம் ஆண்டிலிருந்து கடற் புலிகள் என்ற பெயரால் அழைக்கப்பட்ட எமது கடல் அணி, 1991 ஆம் ஆண்டு பிற்பகுதியில் ‘விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்’ என்ற புதிய பெயருடன் பெரியளவில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

இக்காலத்தில் இதன் சிறப்புத்தளபதியாக சூசை அவர்களும், தளபதியாக கங்கை அமரன் அவர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். இக் காலத்திலேயே சிறீலங்கா கடற்படையினர் மீது கடலில் வைத்தும், கடற்கரையோரங்களில் உள்ள காவல் அரண்கள் மீதும் பல வெற்றி கரமான தாக்குதல்களைக் கடற்புலிகள் நிகழ்த்தினர்.

இத்தொடரான தாக்குதல்களின் போது, கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட விசைப்படகுகள் சில பல்வேறு முனைகளிலும் தாக்கி அழிக்கப்பட்டன.

ஆனையிறவுக் கடல்நீரேரியில் வைத்து 41 அடி நீளமான அதிவேகச் சண்டைப் படகொன்று கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. அத்துடன், நடுக்கடலில் வைத்துச் சிங்களக் கடற்படையுடன் வெற்றி கரமான படகுச் சண்டைகளிலும் கடற்புலிகள் ஈடுபட்டுள்ளனர். இக் கடற் தாக்குதல்களிலும் கடற் சண்டைகளிலும் கணிசமான சிங்களக் கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

கடற் கண்ணித் தாக்குதல்களை நிகழ்த்துவதில் இருந்து, நவீனமயப்படுத்தப்பட்ட சிங்களக் கடற்படைக்கெதிராக நேரடித் தாக்குதல்களையும் கடற் சண்டைகளையும் நடாத்தக்கூடிய அளவிற்கு விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அணியினர் பெற்ற வளர்ச்சி சிறீலங்காவின் படைத்துறைத் தலைமையை திணறடித்துள்ளது. இதன் காரணமாக, கடற்படையின் பலத்தை நம்பிப் போராட்டத்தை நசுக்க அவர்கள் உருவாக்கிய நீண்டகால நோக்கிலான போர்முறைத் திட்டமும் கேள்விக்குறியாகி விட்டது.

அத்துடன் அண்மைக் காலத்திலிருந்து தமிழீழக் கடற்பரப்பில்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

சிறீலங்காக் கடற்படையின் மேலாதிக்கம் படிப்படியாகச் சரிந்து கொண்டிருப்பதையும் காணலாம். அதனால் தமிழீழம் மீதான தனது ஆக்கிரமிப்புப் போர் மிகப் பெரிய பின்னடைவை எதிர்நோக்கு வதையும் சிங்கள ஆளும்வர்க்கம் உணரத் தொடங்கியிருக்கும்.

தமிழீழக் கடலன்னை தியாகத்தாலும் சோகத்தாலும் உருவான ஒரு மகத்தான காவியத்தைத் தன்னுள் கொண்டிருக்கின்றாள்.

எத்தனை இனிய தோழர்கள்...

எவ்வளவு திறமையான கடலோடிகள்...

மீனுக்கு இணையான நீச்சற்காரர்கள்...

தியாகத்தின் உயர் வடிவமான கடற் கரும்புலிகள்!

சாவு வரும் என்பதைத் தெரிந்தும் இவர்கள் பயணம் போனார்கள். ஒவ்வொரு முறையும் அவர்கள் பயணம் போனபோது கரையிலே நின்று கைவீசி அனுப்பி வைத்தோம். ஆனால் நாம் பார்த்துக் கொண்டிருந்த போதே அந்தப் பரந்த கடலோடு கரைந்து போனவர்கள் பலர்.

தமிழீழக் கடலன்னையின் மடியிலேயே இரவும் பகலும் கிடந்து, பனியையும் குளிரையும் தம்முயிரையும் பாராது கடலோடிய தமிழீழத் தாயின் புதல்வர்களில் எத்தனையோ பேர் அந்த உப்பு நீருடனேயே சங்கமமானார்கள்.

இது எங்கள் கடல்; இது தமிழீழத் தாயகத்தின் இணை பிரியாத ஒரு அங்கம். அன்னியரின் ஆதிக்கத்திலிருந்து இது மீட்கப்பட வேண்டும். அதற்காகவே கடற்புலிகள் உயிரையும் மதியாது பயணம் போய், உன்னதமான தியாகங்களைப் புரிந்து, வீர காவியங்களைப் படைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நாள், நிச்சயமாக எங்களின் கடற்படைக் கப்பல்கள் எங்களின் கடலில் பவனிவரும்; அப்போது எங்களின் இளைய பரம்பரையினர் பயமின்றி, சுதந்திரமாக எங்களின் கடலிலே உலாவருவார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# மிதக்கும் மினிமுகாம் மூழ்கடிக்கப்பட்டது

எமது விடுதலைப் போரில் கடலைப் பொறுத்தளவில் 'டோரா' வகைச் சண்டைப் படகுகளைத் தரையிலுள்ள மினிமுகாம்களுக்கு ஒப்பிடலாம். அந்தளவிற்கு ஒரு டோரா அதிவேக சண்டைப்படகு சக்திவாய்ந்தது. 9-12 பேர் அப்படகில் இருந்தாலும் கூட, அதன் ஆயுதபலம் தரையிலுள்ள மினிமுகாமைவிட அதிகமானது என்று கூறலாம். இரண்டு ஐம்பது கலிபர் துப்பாக்கிகளும் ஒரு இருபது மி. மீ. ரக பீரங்கியும், ஒரு தொலைத் தொடர்புக் கருவியும் சக்தி வாய்ந்த ராடர் சாதனமும் ஒரு படகில் உண்டு.

இந்த 'மிதக்கும் மினிமுகாம்' அதிவேகமாக இடம்விட்டு இடம் மாறி, அகப்படும் மீனவர்களது படகுகளை-சிலவேளை புலிகளின் படகுகளையும்-தாக்கி மூழ்கடிக்கும். எமது விடுதலைப் போராட்டத்தில் கடலிலே புலிகள் இயக்கம் பறிகொடுத்த போராளிகளில் பெரும்பாலாரது இழப்பிற்கு இந்த 'டோரா' வகைப் படகுகளே நேரடிக் காரணிகளாக இருந்துள்ளன.

இந்தவகைப் படகுகளில் 'சுப்பர் டோரா' என்ற சண்டைப் படகே 29.08.1993 அன்று பருத்தித்துறைப் பெருங் கடலில் கரும்புலித் தாக்குதலுக்கு உள்ளாகி மூழ்கடிக்கப்பட்டதாகும். ஐந்து அதிகாரிகள் உட்பட பதின்மூன்று கடற்படையினர் இதில் கொல்லப்பட்டனர். மேஜர் புவீந்திரன், கப்டன் மணியரசன் என்ற இரு கடற் கரும்புலிகள் இச் சாதனையைப் படைத்து வீரச்சாவடைந்துள்ளனர்.

மூழ்கடிக் கப்பட்ட இந்த 'சுப்பர் டோரா', திருகோணமலை யிலிருந்து காரைநகர் வரையிலான கடற்பகுதியில் தனது வழமை யான கடல்ரோந்தில் ஈடுபட்டிருந்தபோதே இந்தச் சம்பவம் நடந்தது.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கொழும்புப் பத்திரிகைகளின்படி - இந்தச் 'சுப்பர் டோரா' சண்டைப்படகு, முப்பது வயதுடைய லெப். விமலவீர என்ற அதிகாரியின் தலைமையில் மேலும் எட்டுக் கடற்படை வீரர்களைக் கொண்டிருந்தது.

திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு வழியாக வெற்றிலைக் கேணியை இந்த 'சுப்பர் டோரா' வந்தடைந்தபோது, வேறு ஒரு டோரா படகின் கட்டளை அதிகாரி உட்பட மூன்று அதிகாரிகளும், 'மிட் சிப்மான்' என்ற தரத்திலான ஒரு தொண்டர்படை மாலுமியும் தத்தமது வேலைத்தளங்களுக்குச் செல்வதற்காக இந்த சுப்பர் டோராவில் ஏறிக்கொண்டனர். அவர்களின் விபரம் வருமாறு: லெப். யூ .ஜி. புஞ்சிகேவா (இவர் பிறிதொரு டோரா படகின் அதிகாரி), லெப். யூ. ஜி. ஏ. கே. திலகரட்ண (இவர் 'றணகஜ' என்ற தரையிறக்கும் கலத்தின் இரண்டாவது அதிகாரியாகக் கடமையாற்றியவர். அத்துடன் இருபது வருட கடல் அனுபவம்பெற்ற ஒரு அதிகாரி), லெப். யூ. எஸ். செனநாயக்கா (இவர் பருத்தித்துறைக்கு நேரே நிறுத்தப்பட்டிருக்கும் கட்டளைக் கப்பலான 'எடித்தாரா' வின் ஒரு இடைநிலை அதிகாரி), 'மிட் சிப்மான்' சீ. ஜி. புஞ்சிகேவா (இவர் தொண்டர்படை மாலுமி). ஆதாரம்: 'சண்டே ஐலண்ட்' - செப்.1993.

இப்போது வெற்றிலைக்கேணியிலிருந்து அந்த 'சுப்பர் டோரா' படகு, பருத்தித்துறைக்கு நேரே நடுக்கடலில் நிறுத்தப்பட்டிருந்த கட்டளைக் கப்பலான எடித்தாராவை (இதன் பணி என்னவென்று 52 ஆம் பக்கம் பார்க்கவும்) நோக்கிச் சென்றுகொண்டிருந்தது; அங்கு லெப். செனநாயக்காவை இறக்கிவிடச் சென்றது. அங்கே போகும் வழியிலேயே - பருத்தித்துறைக் கரையிலிருந்து சுமார் 8 மைல் தொலைவில் - 'சுப்பர் டோரா' கடற்புலிகளால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்து இரண்டு 'ஐம்பது கலிபர் துப்பாக்கிகளையும், இரண்டு இருபது மி.மீ. பீரங்கிகளையும் இவற்றிற்குரிய ரவைகள் சிலவற்றையும் கடற்புலிகள் கைப்பற்றினர்.

இதேபோன்று 1991 இன் இறுதிப் பகுதியில், மாதகல் கடலில் வைத்து ஒரு டோரா படகு மீது கடற்புலிகள் கடற்கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தியிருந்தார்கள். ஆனாலும் அப் படகு சிறிய

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

சேதத்துடன் தப்பிக்கொண்டது.

டோரா வகைப் படகுகளை விட சிங்களக் கடற்படையிடம் வேறுபல சண்டைப் படகுகள் இருந்தாலும்கூட, டோராவின் கடற்பயன்பாடு அதிகம் என்றே கூறவேண்டும். இஸ்ரேலில் கட்டப்பட்ட இந்த அதிவேகப் படகு பல நாடுகளின் கடற்படையில் இடம்பிடிக்கும் அளவிற்கு மதிப்புவாய்ந்தது. மணிக்கு 40 கடல்மைல் வேகம் கொண்டது இந்தச் சண்டைப்படகு.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கடலோடு கரைந்த கடற் கரும்புலிகள்

'மகனைப் பார்த்து எவ்வளவு காலமாகிவிட்டது! இப்ப எப்பிடி இருப்பானோ?'

அம்மாவுக்கு ஏக்கம். மூன்றாண்டுகளுக்கு முன்பு திரும்பவும் சிங்களவர்கள் தாக்கத் துவங்கிய போது, 'புலிக்கு...' என்று புறப்பட்டுப் போனவன்தான். அதன் பிறகு அவர்கள் ஒருநாள்கூடக் காணவில்லை.

இடையில் ஒரு நாள்...

சண்டை ஒன்றில் 'மைன்ஸ்' வெடித்து பிள்ளைக்குக் கால் போய்விட்டதாம் என்ற துயரச் செய்தி அம்மாவுக்கு எட்டியது.

அம்மாவின் கண்களில் அருவி வேதனையால் துடித்துக் கொண்டிருப்பானோ...? 'அம்மா...! என்று அழுவானோ...?' அவள் மகனையே நினைத்துக்கொண்டிப்பாள். கொஞ்ச நாட்களாக அம்மாவின் இரவுகள் தூக்கமற்று நீண்டு கழிந்தன.

காலம் அசைந்தது...

"பிள்ளை இப்ப யாழ்ப்பாணத்திலையாம்... கடற்புலியாக கிளாலியில நிற்கிறானாம்... சிங்கள நேவியிட்ட இருந்து சனங்களைக் காப்பாத்துகிற வேலையாம்..." அவர்கள் அறிந்தார்கள்.

'எவ்வளவு காலமாகிவிட்டது...? எப்படி இருக்கிறானோ...?' மகனைப் பார்க்க அம்மா ஆசைப்பட்டாள். பாசமும், ஆவலும் அவளை அவசரப்படுத்தின.

சோதனைச் சாவடிகள், இராணுவக் கெடுபிடிகள், கொச்சைத் தமிழில் துளைத்தெடுக்கும் கேள்விகள். கிரானில் துவங்கி தாண்டிக் குளத்தில் முடிந்த துயரப் பயணத்தின் இறுதியில் அம்மா யாழ்ப்

Tamileelam Archive

பாணம் வந்து சேர்ந்தாள்.

மட்டக்களப்பு தொடர்பகத்தில் பெயரைப் பதிந்து, பிள்ளைக்குத் தகவல் அனுப்பிவிட்டு ஆவலோடு காத்திருந்தாள். தங்கியிருந்த வீட்டின் வாசலையே பார்த்துக்கொண்டிருக்க ஒரு நாள் கடந்து போனது; ஆனால் மகன் வரவில்லை.

"கிளாலியில் நேவிக்கு கரும்புலித் தாக்குதல் நடந்ததாம்... கனக்க நேவியும் முடிஞ்சுதாம்..." என்று ஒரு செய்தி மட்டும் வந்தது.

எல்லோருக்கும் சோகம் கலந்த மகிழ்ச்சி. அம்மாவுக்கும்தான் மாலையானதும் பரபரப்பாகப் பேசப்பட்ட அந்தச் செய்தியைத் தாங்கி, 'ஈழநாதம்' விசேட பதிப்பு அம்மாவின் கைகளிற்கு வந்தபோது... அந்தப் படங்கள்...! அந்தப்படம்...! அம்மா உற்று உற்றுப் பார்த்தாள்... கண்கள் இருண்டன...! உடல் விறைத்துப்போனது. நம்பவே முடியவில்லை அம்மாவின் பிள்ளை...வரதன்...? அவன்தானா என்று பெயரை மீண்டும் மீண்டும் பார்த்தாள். ஆம்! அது அம்மாவின் பிள்ளையேதான் அள்ளி அணைத்து முத்தமிட ஆசையோடு ஓடோடி வந்தாளே... அதே பிள்ளைதான்.

கறியில்லாமல் காசுமில்லாமல் அடுப்பெரியாத நாட்களில்– "சோறு காய்ச்சணை கறியோட வாறன்" என்று துவக்கெடுத்துக் கொண்டு காட்டுக்குப் போவானே... அதே மகன்!

வீதியில் சிங்களப் படை மறித்து, கிறனைட்டைக் கையில் கொடுத்து "வாயுக்குள்ள போடடா..." என்றபோது "விருப்ப மெண்டா உன்ர வாயுக்குள்ள போடு..." என்று துணிவோடு திருப்பிக் கொடுத்துவிட்டு வந்தானே... அந்த மகன்!

சோகத்தோடு அணைத்து நிற்கும் தலைவனுக்கருகில் பூரிப்போடு சிரித்து நின்றான் அந்தக் கரும்புலி.

தாங்கமுடியாத பெரும் சுமையாய் துயரம் நெஞ்சை அழுத்த அம்மா அழுதாள். கவலையைத் தீர்க்க கண்ணீர் தீரும்வரை அழுதாள்.

* * *

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தலைவரோடு வரதன்

"...தலைவர் சொன்னதையே நான் திரும்பத்திரும்ப நினைச்சுக்கொண்டிருக் கிறன். எனது சிந்தனையெல்லாம் அதி லையே இருக்கு..."

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கந்தசாமி ஐயாவுக்கும் அம்மாவுக்கும் பிறந்த ஒன்பது குழந்தைகளுக்குள் நான்காவது வரதன். இராமச்சந்திரன் என்பது இயற்பெயர்.

1973 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒவ்வொரு வருடமும் தமிழ்ப் புத்தாண்டிற்கு இரண்டு நாள் முன்னதாக வரதனின் பிறந்த நாள் வந்து போகும்.

கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் ஆர்வம் மிகுந்தவனாக துடிப்புடன் பள்ளிக்குப் போனவனை, அப்பாவோடு வயலுக்குப் போகவைத்தது குடும்ப நிலை.

குடும்பச் சுமை பகிர்ந்து உழைத்து, 16 வயதுவரை வீட்டோடு இருந்தவனை இயக்கத்துக்குப் போக வைத்தது நாட்டுநிலை.

மன்னம்பிட்டிக்குக் கிழக்கே 15 மைல் தூரத்திலுள்ள கள்ளிச்சை வடமுனைதான் ஊர். ஆக்கிரமிப்பின் கொடிய வலியை அனுபவிக்கும் எங்கள் தாயகத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்று.

மட்டக்களப்பில் பயிற்சியை முடித்தவனுக்கு அங்கு கண்ணிவெடிப் பிரிவில் பணி.

சிங்களப் படையுடன் மீண்டும் போர் துவங்கி-வெடியோசைகளால் நிறைந்து, நகர்ந்துகொண்டிருந்த நாட்களுள் ஒன்று. கள்ளிச்சை வடமுனைக்கும்-பெண்டுகள்சேனைக்கும் இடையில் எதிரி விதைத்துவிட்டுப் போயிருந்த மிதிவெடிகளுள் ஒன்று, விநியோக வேலைகளில் ஈடுபட்டிருந்த வரதனின் வலது காலைப் பிய்த்தது.


காட்டு முட்கள் கீறிக் கிழிக்க நரக வேதனைக்கு நடுவில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டான் வரதன். சிகிச்சை முடிய புகைப்படப் பிரிவில் பணி.

* * *

கிளாலியிலிருந்த கடற்புலிகளின் தளம்.

எங்கள் அன்புக்கினிய மக்களை, இரத்தப்பசி கொண்டலையும்

Tamileelam Archive



தலைவர் அவர்களோடு கடற்கரும்புலிகள் கப்டன் மதன், மேஜர் வரதன்

இனவாதப் பேய்களிடமிருந்து காத்து நிற்கும் உன்னத பணியில் அவர்கள். இரவில் விழித்திருந்து அலைமடியில் காவல். பகலை இரவாக்கித் தூங்க முயலும் வாழ்வு.

முகாமில் எப்பொழுதும் கலகலப்பை நிறைத்திருப்பவன் மதன்தான். துடிதுடிப்பான சுபாவம் அவனுடையது.

வரதனும் மதனும் உற்ற நண்பர்கள். புகைப்படப் பிரிவில் ஒன்றாக வேலை செய்தபோது மெல்ல அரும்பிய உறவுதான் இன்று உயிருக்குயிரான சிநேகிதமாக இறுக்கம் பெற்றிருந்தது.

ஒன்றாகத் தலைவருக்கு கடிதம் எழுதி, ஒன்றாக கடற்புலிகளுக்கு வந்து, ஒன்றரைக் கால்களோடு நீந்திப் பழகி, பயிற்சி பெற்று, படகேறி, கடலில் களமாடி, ஒன்றாகக் கிளாலியிலும் பணி செய்தவர்கள் - ஒன்றாகக் கரும்புலிக்கும் பெயர் கொடுத்து - இறுதியிலும் ஒன்றாகவே போனார்கள்.

* * *

மதன் துடிதுடிப்பானவன். ஒற்றைக் காலில் நின்று கூத்தாடி... ஊன்று தடியோடு துள்ளியோடி... கும்மாளமடித்தபடி திரிந்து... அவன் ஓய்ந்ததேயில்லை.

திருமலைக் காட்டில் மிதிவெடி ஒன்று கழற்றிவிட்ட இடது காலுக்குப் பதிலாக மதனுக்கு ஜெய்ப்பூர் கால் கொளுவப்பட்டிருந்தது. பொய்க்காலைக் கழற்றிவிட்டு, ஒன்றரைக் காலில் மரத்திலேறி மாங்காயும் இளநீரும் பிடுங்கித்தந்து, எங்களோடு சேர்ந்திருந்து சாப்பிட்டு மகிழ்ந்த உயர்ந்த நண்பன் அவன்.

இரவெல்லாம் படகோடி கடலில் சமராடிவிட்டு, பகலில் ஓய்வெடுத்துத் தூங்கமுயலும் தோழர்களை ஊன்றுதடியால் தட்டிக் குழப்பித் தொந்தரவு செய்துவிட்டுத் துள்ளி ஓடி அவர்களுடைய அன்பான சினப்பிற்கும் ஆளாகின்றவன் அந்தக் குழப்படிகாரன். அவனும் தான் இரவுச் சண்டைக்குப் போயிருப்பான்; ஆனால் பகலிலும் ஓடித் திரிவான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சண்டைக்குத் தயாரான ஓடுபாடுகள் இல்லாத-ஓய்வான ஒரு மாலைப்பொழுதில் மதன் ஒரு தென்னைமர அடியில் சாய்ந்திருப்பான். கடற்காற்றோடு கலந்து ஒரு பாடல் விரியும். தன்னுடையது பாடுவதற்கு ஏற்ற ஒரு குரல் இல்லையென்பது தெரிந்திருந்தும் அவன் பாடுவான். அதில் ஒரு கவர்ச்சியிருக்கும்; அருகிலிருப்பவர்களை ஈர்க்கும்.

எப்போதும், எதிலும் கவனமில்லாத ஒருவனைப்போல பகிடி சொல்லித் திரிகின்ற மதன், தனது திறமையை வேலைகளின்போது செயலில் காட்டுவான். எங்களால் செய்யமுடியாமல் போகின்ற சில சில வேலைகளை, ஒரு காலை இழந்தவனாயிருந்தும் அவன் செய்து முடிப்பான். பெரும்பாலும் தவறுகள் செய்யாமலே இருக்கின்ற மதன், சக தோழர்கள் தவறு செய்யும் போது சொல்லித் திருத்துகின்ற போராளி.

மதனுக்கிருந்த இயல்பான குழப்படித்தனத்தால், வரதனோடு துவங்கிய ஒரு பகிடிச்சண்டை கடைசியில் சீரியசாக முடிந்தது. அந்த உயிர் நண்பர்கள் கதைக்காமல் பிரிந்துபோய்விட்டார்கள். அடுத்த 24 மணி நேரம் வெறுப்பூட்டுவதாகக் கழிந்தது. வரதன் குளிக்கப் போனான், எப்போதும் இருவரும் சேர்ந்தே போவார்கள்; இப்போது வரதன் தனியே. முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு மதன் ஒரு மரக்குத்தியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான். 'போ' என்று நட்புத் தூண்டவும் தன்மானம் தடுத்தது. ஆனாலும், அன்பே வென்றது. ஊன்றுதடியுடன் துள்ளிக்கொண்டு முந்தி ஓடிப்போய் வாளியை எடுத்து, வரதனுக்குக் குளிக்கவார்க்கத் தொடங்கினான் அவன். சேரனிடம் இதைச் சொல்லும்போது வரதனின் கண்கள் பனித்திருந்தன.

வரதன் அமைதியானவன். அதிகம் பேசத் தெரியாதவன். கதைகளைவிட செயல்களிலேயே அதிக ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்டவன். "கதைக்கும்போதெல்லாம் இயக்கத்துக்குப் பயன்படக் கூடியதாய் ஏதுங்கதையுங்கோடா" என்று எங்களுக்குப் புத்தி சொல்பவன். அது வெளியில் தெரியாமல் தனக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்த ஓர் எரிமலை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அம்மாவையும் அப்பாவையும் பிரிந்து, உறவுகளைப் பிரிந்து நீண்டகாலம். எங்கு இருக்கின்றார்களோ...? ஆமிப்பிரச்சனைகளால் ஓடுப்பட்டுத் திரிகின்றார்களோ...? வீட்டுக்கு ஒரு கடிதம் எழுதிப் பார்ப்பம் என்ற ஆவல் வரதனுக்கு எழுந்தது. வரதன் கடிதம் எழுதினான்; பதிலுக்காகக் காத்திருந்தான். அடுத்த தரம் எழுதினான்; காத்திருந்தான். பதிலில்லை. மூன்றாம்தரம் - பதிலில்லை. நான்காவது கடிதமும் போனது; பதில் வரவேயில்லை.

இடம்பெயர்ந்து வந்து கிளாலியில் இறங்கிய உறவினர்கள் சிலரை எதிர்பாராமல் வரதன் சந்திக்க நேர்ந்தது. "ஒரு இரவு ஊருக்குள்ள ஆமி புகுந்து வெட்டியும் சுட்டும் நூற்றுக்கணக்கில சனங்களைக் கொண்டவங்கள்... தம்பி... தப்பி ஓடிவந்த எங்களுக்குள்ள உன்ரை வீட்டுக்காரர் வரேல்லை... என்ன நடந்ததோ...? கடவுளுக்குத் தான் தெரியும்!" வானத்தைப் பார்த்து கைகளை விரித்துச் சொல்லிவிட்டு ஒரு பெருமூச்சோடு அவர்கள் போய்விட்டார்கள்.

காதுகளில் இடியென இறங்கிய செய்தியால் அவன் துடித்துப் போனான். ஏற்கனவே அவனுக்குள் வீசிக்கொண்டிருந்த புயல் ஆவேசம்கொண்டெழுந்தது. ஆனாலும் அது ஒரு வதந்தி மட்டுமே என்பது கடைசிவரை அவனுக்குத் தெரியாமலே போய்விட்டது.

* * *

கிளாலியின் விரிந்த கடல்.

தமிழர்களின் இரத்தமே அலைகளாய் அசையும் 20 மைல் நீளச் செந்நீர்ப்பரப்பு.

இரத்தப்பசிகொண்டு அலையும் சிங்களப் படை. உயிர் விழுங்கும் துப்பாக்கி வாய்களோடு காத்துநிற்கும் மரணவலயம். அந்த மரணவலயத்திலும் - கடலரண்களாய் கடற்புலிகள் காவல் நிற்க, எங்கள் மக்கள் துணிவுடன் பயணிக்கும் குடாநாட்டுக்கான தனியொரு பாதை.

நாகதேவன்துறையில் பொருத்தப்பட்டிருக்கும் சக்திவாய்ந்த ராடர்களின் திரைகளில் புள்ளிகளாய் அசையும் எங்கள் படகுகளை,

Tamileelam Archive

துல்லியமாக இனம்கண்டு தாக்கி மூழ்கடிக்க விரைந்து வரும் எதிரிப் படகுகளை, உள்ளங்கையைக்கூடப் பார்க்க முடியாத கும்மிருட்டிலும்கூட, கண்களை மட்டுமே நம்பி எதிர்கொண்டு விரட்டியடிக்கும் சாதனைக் களம்.

எதிரி தடைசெய்த வலயத்தை எதிரிக்குத் தடை செய்து வீரச் சாதனை படைக்கும் கடற்புலிகளின் போர்த்திறனையும், அதனைப் பிரமாண்டமான ஒரு வளர்ச்சி நிலையை நோக்கி உயர்த்திச் செல்லும் தலைவர் பிரபாகரனின் முயற்சியையும், ஆற்றலையும் உலக அரங்கில் பறைசாற்றிக்கொண்டிருந்த போர்முனை.

கிளாலிக் கடலில் மக்கள் போக்குவரத்துச் செய்யத்துவங்கிய நாளிலிருந்து அங்கு காவற் பணியாற்றிக்கொண்டிருக்கும் கடற்புலிகளின் அணி வரதனையும் மதனையும் கொண்டிருந்தது.

அந்தக் கடற்களத்தில் புலிகள் எதிரியைச் சந்தித்த ஒவ்வொரு சண்டையிலும், இவர்களின் கைகளிலிருந்து துப்பாக்கிகள் கனன்றிருக்கின்றன.

விடிகாலைகளில், பயணம்போன எம்மக்கள் செத்தபிணங்களாய்க் கரையொதுங்கிய போதெல்லாம், அவர்களுக்குள் ஒரு நெருப்பு கொழுந்துவிட்டெரியும்.

அவர்கள் துணிகரமான சண்டைக்காரர்கள். அவர்களுடைய வண்டிகளில், எதிரியின் படகுகளை மூக்குக்கு நேரே எதிர்கொண்டு அவனைத் திகைப்பிலாழ்த்துவார்கள். கண்ணைக் கட்டி இருளில் விட்டது போன்ற இருட்டிலும் எதிரியின் படகுகளை இனம் கண்டு - நல்ல வியூகங்களில் தளம்பலின்றி வண்டியைச் செலுத்தி, அவனைத் தாக்கித் திணறடிப்பார்கள். அந்த மயிர்க்கூச்செறியும் கணங்களில் எதிரி தலைதெறிக்க ஓட்டமெடுப்பான். அந்த நேரங்களில் அவர்கள் சொல்லுவார்கள் "இப்ப மட்டும் ஒரு சக்கை வண்டி இருக்குமென்டால், இவங்களின்ர கதை இதிலையே முடியும்."

அவர்கள் ஒரு கரும்புலித் தாக்குதலுக்காகக் காத்திருந்தார்கள். 'எங்களின் மக்களைக் கொன்றொழித்தவர்களை இதே கடலில்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வைத்துக் கொன்றொழிக்க வேண்டும்' என்ற வீர சபதம், அவர்களின் இதயங்களில் முழங்கிக்கொண்டிருந்தது. கரும்புலித் தாக்குதல் நடாத்தும் இரவை அவர்கள் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த் திருந்தார்கள்.

"ஏன் கரும்புலியாகப் போகின்றீர்கள்?" என்பதற்கு ஒரு தத்து வார்த்த விளக்கத்தை அளிக்கக்கூடிய அறிவை அவர்கள் பெற்றிருக்க வில்லையாயினும், அதன் தேவையை, அதன் முக்கி யத்துவத்தை அதன் பலத்தை, உளப்பூர்வமாகவும் தெளிவாகவும் உணர்ந்து கொண்டவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

வரதன் ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருப்பான். அருகில் போகிற நண்பனிடம் "தலைவர் சொன்னதையே நான் திரும்பத் திரும்ப நினைச்சுக்கொண்டிருக்கிறன். எனது சிந்தனையெல்லாம் அதிலையே இருக்கு. அந்த ஒரு நொடிப்பொழுதுக்காக நான் எவ்வளவு காலமும் காத்துக்கொண்டிருப்பன். "என்றோ ஒரு நாள் கிளாலிக் கடலில ஒரு 'வோட்டர் ஜெற்' நொருங்கும்" என்பான்.

மதனும் அப்படித்தான். அவன் அடிக்கடி சொல்லுவான், "எங்கட எவ்வளவு சனங்களின்ரை ரத்தம் இந்தத் தண்ணியோட கலந்திது. இதுக்கெல்லாம் ஒரு நாளைக்குப் பாடம் படிப்பிச்சே ஆகோணும். அதை நான் சாதிச்சே தீருவன். அவனுகளையும் இந்தக் கடலிலையே அழிக்கவேணும்"

மதன் மட்டக்களப்பைச் சேர்ந்தவன். சீனிவாசன் சிவக்குமார் என்பது அவனுடைய இயற்பெயர். 1975 ஆம் ஆண்டு செப்ரெம்பர் திங்கள் 7ஆம் நாள், அந்த வீர மைந்தனைப் பெற்றாள் ஒரு வீரத்தாய். குடும்பத்தில் மூன்று அண்ணன்களுக்கும் ஒரு தங்கைக்கும் இடையில் அவன். மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் 9 ஆம் வகுப்பில் படித் துக்கொண்டிருக்கும் போது 1989 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஒருநாள், பள்ளிக்கூடத்திற்கென்று புறப்பட்டுப்போனவன் திரும்பி வரவில்லை; "இயக்கத்துக்குத்தான் போயிருப்பான்..." என்ற வீட் டிலுள்ளவர்களின் ஊகிப்பும் பிழைத்துவிடவில்லை.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிளாலியின் கடற் போர்முனை.

ஏறக்குறைய 60 நாட்கள் அலைகள் போல அசைந்து கடந்து விட்டன.

அந்த உயரிய சாதனையை நிகழ்த்த அவர்கள் கடலுக்குப் போய்ப்போய்த் திரும்பி வரவேண்டியிருந்தது. நாட்செல்லச்செல்ல அவர்களுடைய உறுதி இறுகிக்கொண்டே போனதேயன்றி, இளகியதில்லை.

ஒவ்வொரு தடவையும் சண்டை துவங்கும். துப்பாக்கிக் குழாய்கள் சிவக்க எங்களது படகுகள் பகைவனை எதிர்கொள்ளும். 'சக்கை' வண்டி அவனை மின்னலென நெருங்கும். எதிரி ஓட்டமெடுப்பான். சக்கைவண்டி கலைக்க இடைவெளி குறுகும். எதிரியின் வேகம் கூடும். அதிகரித்த வேகத்தோடு சக்கைவண்டி அண்மிக்க, ஒரு அடி உயர நீரில் ஓடக்கூடிய தன் நவீன படகை எதிரி ஆழம் குறைந்த நீர்ப்பரப்பினூடு செலுத்துவான். சக்கைப் படகுகள் தரைதட்டும். தொடர்ந்தும் கலைக்க முடியாமல் கரும்புலிகள் திரும்பவேண்டியிருக்கும்.

மறுநாள் -

முகாமின் ஒரு மூலையில் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு இருப்பார்கள். இரவு தங்களால் இடிக்க முடியாமல் போய்விட்டதே என்பதற்காக அவர்கள் கவலைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். 61 நாட்களும் இப்படித்தான் நகர்ந்தன.

* * *

25.08.1993

வழமையான இரவு.

நிலா உலா வராத இருண்ட வானம்.

சிலிர்ப்பூட்டும் குளிர்.

உடலுக்கு அசதியைத் தந்தாலும் உள்ளத்துக்கு உற்சாகமூட்டும் உவர்க்காற்று. கடற்புலிகள் காவல் உலா வர, மக்களின் பயணம் துவங்கிவிட்டது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சக்கை நிரப்பிய 'புலேந்திரன்', 'குமரப்பா' வில் மதனும் வரதனும் தயாராக நின்றார்கள்.

கடந்துபோனவைகளைப் போல அல்லாமல் இந்த 62 ஆவது நாளின் இரவில், அவர்களின் முகங்களில் நம்பிக்கையின் தெறிப்பு; இனம்புரியாத பூரிப்பு.

அருகில் நின்ற கண்ணாளனிடம் குப்பியைக் கழற்றிக்கொடுத்து விட்டு மதன் சொன்னான்: "இண்டைக்கு இடிச்சே தீருவன். திரும்பி வரமாட்டன்."

நேரம் நடு இரவைத் தாண்டியிருந்தது. நாகதேவன்துறைத் தளத்திலிருந்து அலைகளைக் கிழித்துக்கொண்டு முன்னேறினான் எதிரி. இன்று அவனது தாக்குதல் வடிவம் வித்தியாசமானதாக இருந்தது.

ஒவ்வொரு தடவையும் மாறுபட்டதாக இருக்கின்ற போதிலும் இன்று அவன் அமைத்து வந்த வியூகம் புதுவிதமானது. இரண்டு அணிகள். ஒன்று ஒரு புறத்தில் புலிகளைத் தடுக்க, மற்றையது மறுபுறத்தில் மக்களைத் தாக்கும்.

ஆனால், பகைவன் சற்றும் எதிபாராத விதமாக அவனை இருமுனைகளிலும் எதிர்கொண்டனர் கடற்புலிகள். துப்பாக்கி முனைகள் தீ உமிழ, வானம் விழாக்கோலமானது.

சண்டை உக்கிரமடைந்துகொண்டிருந்த ஒரு கட்டத்தில், காத்திருந்த 'புலேந்திரன்' படகை 'வோக்கி' அழைத்தது. மதன் ஆவலோடு பதில் கொடுத்து, கட்டளைக்குக் காதுகொடுத்தான்.

மக்களைத் தாக்க வந்த எதிரி, புலிகளிடம் சிக்கிப்போயுள்ள முதலாவது சண்டை முனையில் - ஏற்கனவே விளங்கப் படுத்தப்பட்டிருந்த தாக்குதல் திட்டத்தின்படி-'வோட்டர் ஜெற்' படகொன்றைத் தாக்குமாறு வோக்கி கூறியது.

சுற்றியிருந்த தோழர்கள் கண்கலங்க, சிரித்த முகத்தோடு மதன் புறப்பட்டான். மின்னல் கீற்றென நெருங்கிய கரும்புலிப் படகைக்

Tamileelam Archive

கண்டு எதிரி தப்பி ஓட முயல, அதற்கு அவகாசமில்லாமல், மதன் அதன் மையப்பகுதியோடு மோதினான். பிரகாசித்தெழுந்த ஒளி வெள்ளம் மறைந்து, இருளோடு இருளாகக் கரும்புகை கரைந்து கொண்டிருக்கும் போது, இரண்டாகப் பிளந்து மூழ்கிக்கொண்டிருந்த 'P115' இலக்க 'வோட்டர் ஜெற்றிலிருந்து புலிகள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டிருந்தார்கள்.

தான் நேசித்த கடலோடும்... காற்றோடும்... எங்கள் மதனும்... அவனது 'புலேந்திர'னும்...

அந்தக் கடற்களம் நீண்டுகொண்டிருந்தது. கடற்புலிகள் கடலில் சந்தித்த முதலாவது பெருஞ்சமர் அதுவாகத்தான் இருக்கமுடியும்.

புலிகளைத் தாக்க வந்த அணியைப் புலிகள் தாக்கிக் கொண்டிருந்த இரண்டாவது சண்டை முனையிலிருந்து, 'குமரப்பா' படகிற்கு அழைப்பு வந்தது. காத்துக்கொண்டிருந்த வரதன், களத்திற்கு விரைந்தான்.

புலிகளின் சண்டைப்படகுகளால் வளைக்கப்பட்ட நிலையில் தப்ப வழியின்றி, தளத்துக்கு தகவல் அனுப்பிவிட்டு, உதவி வரும்வரை சண்டையிடத் தீர்மானித்துவிட்ட ஒரு 'வோட்டர் ஜெற்' படகு, வரதனின் இலக்கு. 'வோக்கி' அவனுக்குத் தாக்குதல் வழிமுறையை வழங்கியது. உதவி கிடைக்குமுன் அதனை உடைக்க வேண்டும்.

இருள். ஆளை ஆள் பார்க்கமுடியாத இருள். வளைத்து நிற்கும் புலிகளின் படகுகளை அவதானித்து - விலத்தி ஓடி, 'வோட்டர் ஜெற்' றை சரியாக இனம் கண்டு-அது அவனுடையதுதான் என்பதை உறுதிப்படுத்தி இடிக்க வேண்டும். தவறுதலாக எங்களுக்குள் முட்டுப் பட்டாலோ விளைவு விபரீதமானதாக மாறிவிடும்.

சரியான இலக்கை நோக்கி வரதன் நெருங்கினான்-அதிகரித்த வேகத்தோடு திகைத்த எதிரி எதுவுமே செய்ய முடியாமல் மலைத் துப்போய் நிற்க, அடுத்த கணப்பொழுதில்...! அந்தக் கண்ணிமைக்கும் நேரத்திற்குள்...! எதிரியின் படகு...

எங்கள் அன்பு வரதனும் 'குமரப்பா'வும் தான்...

Tamileelam Archive

நாகதேவன்துறையிலிருந்த கடற்படைத் தளத்தில் தகவல் தொடர்பு சாதனம், 'P121' என்ற தங்கள் போர்ப் படகை அழைத்துக் கொண்டிருக்க, மூழ்கிக்கொண்டிருந்த அந்தப் படகிலிருந்து, கடற்புலி வீரர்கள் ஆயுதங்களை எடுத்து முடித்துவிட்டார்கள்.

ஒரே பாயில் படுத்து, ஒரே கோப்பையில் சாப்பிட்டு, ஆளுக்காள் தண்ணி ஊற்றி-ஊத்தை தேய்த்து ஒன்றாகவே குளித்து, ஒரே இலட்சியத்தோடு வாழ்ந்த அந்த உயிர் நண்பர்கள்-கிளாலிக் கடலில் நடந்த ஒவ்வொரு சண்டையின்போதும், ஒன்றாகவே நின்று, சிங்களப் பிணந்தின்னிகளை நெருப்பெனச் சுட்டெரித்தவர்கள்-சாகும்போது கூட ஒன்றாகவே போனார்கள்.

எங்களுக்காக... மக்களுக்காக...!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கடலன்னையின் புதல்வர்கள்

புவீந்திரன்! அவன் ஒரு குழந்தை.

வயதுதான் பதினெட்டேயன்றி மனதால் அவன் பாலகன். மனித வாழ்வின் நெளிவு சுழிவுகள் அவனுக்குத் தெரியாது. சமூக அமைப்பின் ஏற்றத் தாழ்வுகள் அவனுக்குப் புரியாது. அவனுக்குத் தெரிந்த தெல்லாம் யாரோ எவரோ; அடுத்தவர்களுக்காகப் பாடுபடவேண்டும்; எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்பது மட்டும்தான்.

சின்ன வயதிலிருந்தே அவன் அப்படித்தான். இரக்க சிந்தையும் உதவும் குணமும் அவனது உயிரோடு ஒட்டிப்போயிருந்த இயல்புகள்.


பக்கத்து வீட்டு அம்மா வந்து "தம்பி, ஒருக்கா அந்தக் கடைக்குப் போட்டு வாறியா அப்பன்?" என்றால் சொந்த வீட்டு வேலையைப் பாதியிலேயே போட்டுவிட்டு எழுந்துபோய் விடுகின்றவன் அவன்.

ஊரில் எவருடைய வீட்டிலாவது ஒரு நல்லது கெட்டது என்றால் அங்கு அந்தச் சிறுவன் ஏதாவது எடுபிடி வேலைகள் செய்து கொண்டிருப்பான்.

சப்பாத்து கட்டாயம் அணிய வேண்டிய அவனது பள்ளிக்கூடத்தில்-ஏழை நண்பனொருவன், "அம்மா காசுக்கு கஸ்டப் படுறா..." என்று மனவேதனைப்பட்ட போது, அப்பா ஆசையாக வாங்கித் தந்த சப்பாத்தைக் கழற்றிக் கொடுத்துவிட்டு, வெறுங் காலோடு வீட்டிற்கு வந்தவன் அவன்.

குடும்பத்தின் ஏழ்மை நிலையைச் சொல்லி "காலையில கூடச்

Tamileelam Archive



தலைவரோடு புவீந்திரன்

சோகம் பரவிய முகத்தோடு, உன்னைக் கைதொட்டுத் தடவி, ''எந்தக் காலிலை யப்பன் வெடி பிடிச்சது......?'' என்று, அக்கறையோடு தலைவர் விசாரித்த போது - மெய்சிலிர்த்து நின்று சிரித்தாயாம்.

Tamileelam Archive

சாப்பிடேல மச்சான்...'' என்று விம்மிய உற்ற நண்பனிடம்-அவன் அடியோடு மறுக்கமறுக்க-கையில் கிடந்த தங்கச் சங்கிலியையே கழற்றிக் கொடுத்து விட்டு வந்தவன்தான் புவீந்திரன்.

ஒரு மென்மையான உள்ளம் அவனுடையது. அவன் கோபமடைந்ததை நாங்கள் கண்டதில்லை-அப்படித்தான் சுய கட்டுப்பாட்டை மீறிக் கோபம் வந்தாலும் அது விநாடிக் கணக்கில் கூட நீடித்ததில்லை. அவனுடைய உதடுகள் கெட்ட வார்த்தைகளை உச்சரித்ததை ஒரு நாள்கூட நாங்கள் கேட்டதில்லை.

வீட்டில் அக்கா தம்பியோடு என்றாலும் சரி, பிற்காலத்தில் இயக்க நண்பர்களோடு என்றாலும் சரி, சாதாரண சிறு சச்சரவு வந்தால்கூட அவன் தன்னைத் தானே நொந்துகொள்வானே தவிர, மற்றவர்களை அல்ல. சரி எது பிழை எது என்பதெல்லாம் அவனுக்குத் தெரியும்; ஆனால், நியாயம் கதைக்க மாட்டான். போய் ஒரு மூலையில் இருந்து விக்கி விக்கி அழுதுகொண்டிருப்பான்.

அது பாசத்தால் பிணைந்திருந்த ஒரு குடும்பம். அக்காவிலும் தம்பியிலும் அன்பு நிறைந்த சகோதரனாக அவன் இருந்தான். அப்பாவுக்கு எல்லாமே குழந்தைகள் தான், குழந்தைகளுக்கு எல்லாமே அம்மாதான்.

அவனுக்கு 12 வயதாய் இருக்கும்போது அந்தத் துயரம் நிகழ்ந்தது. திருகோணமலையிலிருந்த உறவினர்களிடம் போன அம்மா திரும்பி வரவில்லை; அந்தக் குழந்தைகள் பார்க்க முடியாத இடத்திற்கு இந்தியர்கள் அம்மாவை அனுப்பிவிட்டார்கள். இனி எப்போதும் அவள் வரமாட்டாள்.

புவீந்திரன் அழுதான். அப்போது அவனுக்கு அது மட்டும்தானே தெரியும்-ஆனால், அம்மாவின் இழப்பு அந்தப் பிஞ்சு உள்ளத்தில் ஆழமான ஒரு வடுவை ஏற்படுத்தியது.

ஓய்வாக இருக்கும் கருக்கல் பொழுதுகளில், அப்பா குழந்தைகளுக்கு ஆங்கிலப்படக் கதைகள் சொல்லுவார். சுதந்திரத்தை நோக்கிய எழுச்சிகளைத் தழுவியதாக அவை இருக்கும். வியட்நாம், கியூபா, தென்னாபிரிக்கா என அது நீளும். புவீந்திரன் மட்டும் ஆர்வத்தோடு

Tamileelam Archive

இருந்து கேட்பான். ஏற்கெனவே ஏழைகளுக்காகவும் பாதிக்கப் படுகின்றவர்களுக்காகவும் இரங்குகின்ற அந்த மனம், படக்கதை களைக் கேட்கும் போது, ஒடுக்கப்படும் மக்களினங்களை நினைத்துப் பரிதாபப்படும். அவர்களின் அவலங்களை மனத்திரையில் போட்டுப் பார்த்துக் கொதிக்கும். அந்தப் போராட்டங்களின் நியாயத் தன்மை யைப் புரியும். அடக்குகின்றவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை உணரும். அந்த மக்களோடு எங்களினத்தை ஒப்பிட்டுப் பார்த்து விழிக்கும்; எங்கள் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் தானும் ஈடுபடவேண்டுமென இறுகும்.

இந்த விழிப்புணர்வோடும் மனவுறுதியோடும், இதயத்தைப் பிழியச்செய்கிற அம்மாவினுடைய நினைவுகளும் சேர்ந்துதான் அவனை இயக்கத்திற்குப் போகவும் உந்தியிருக்கக்கூடும்.

புவீந்திரன் ஒரு நாள் வீட்டிற்கு வந்திருந்தான்; உறவினர் ஒருவரும் வந்திருந்தார். ஒரு தந்தைக்கு இயல்பாகவே இருக்கின்ற பிள்ளைப்பாசம் வெளிப்பாடு கண்டபோது-வந்தவர் அப்பாவிடம் சொன்னதை, அப்பா மகனிடம் கேட்டார்-''தம்பி... வெடிபட்டு உனக்கு காலும் ஏலாது... இனி வீட்டோட நிக்கலாம்தானே...'' அப்பா இழுக்க, மெல்லிய ஒரு சிரிப்போடு விழிகளை உயர்த்தி, ஓர் அரசியல் மேதையைப் போல அவன் விளக்கினான்: ''இயக்கத்திற்குப் போனது, விலத்திக்கொண்டு வாறதுக்கில்லை; நான் போனது நாட்டுக்காகப் போராட... திரும்பி வீட்டிற்கு வாறதுக்கில்லை. இந்தப் போராட் டத்திலை நான் சாகவும் கூடும், அதைப்பற்றி நான் கவலைப்படவும் இல்லை...'' வந்தவரும் அப்பாவும் மௌனித்துப் போனார்கள்.

கூடித்திரிந்த பழைய நண்பர்கள் நீண்ட காலத்தின்பின் சந்தித்தார்களாம். ஏதேதோவெல்லாம் கதைத்தபின் பிரிகின்ற நேரத்தில், ''நீ இப்ப நொண்டி தானேடா... இனி உனக்கு ஏன் மச்சான் இயக்கம்... விட்டிட்டு வாவன்ரா...'' கேலி செய்தார்களாம்.

ஒரு மணித்துளி திகைத்துப்போனவன் - நின்று, திரும்பி, நிதானமாகச் சொன்னானாம்: ''எனக்கு கால்தான் நொண்டி; என்ர மனம் நொண்டியாகேல்லை. ஒரு உறுப்புத்தான் ஊனமாப் போச்சுதே இல்லாம, உள்ளம் எப்பவும் உறுதியாய்த்தான் இருக்கிது. அங்கங்கள்

தமிழ் ஆவணக்காப்பகம் TamilEelam Archive



தலைவர் அவர்களோடும் தளபதி சூசை அவர்களோடும் கரும்புலிகள் புவீந்திரனும் மணியரசனும்.

"உங்கள் வாழ்வின் உச்ச உயர்நாள் அதுவாகத்தான் இருந்திருக்கும். உள்ளப் பூரிப்பின் சிகரங்களைத் தொட்டிருக்கக்கூடிய அந்த நாளில் - உங்கள் மன உணர்வுகள் எப்படியிருந்திருக்கும் என்பதை வார்த்தைகளால் வடித்தெடுக்கமுடியாது."

போறதைப்பற்றி எனக்குக் கவலையில்லையடா... மனசில உறுதிதான் வேணும். எனக்கு அது நிறைய இருக்கு. நான் சும்மா இருந்து சாகமாட்டன். பெரிய சாதனையொன்றைச் செய்துதான் சாவன்...''.

அந்த நண்பர்களுக்கு அப்போது அது புரியவில்லை; சிரித்துக் கொண்டு போனார்கள். ஆனால், இப்போது விக்கித்து நிற்கின் றார்கள்.

* * *

''பிரபல கரும்புலி போறார்'' இப்படித்தான் தோழர்கள் அவனுக்குப் பகிடி சொல்லுவார்கள்.

ஆனையிறவில் வெடிபட்டு நரம்பறுந்து சூம்பிப் போனதால் 'பெல்ட்' போட்டுக் கட்டியிருக்கும் இடது காலை இழுத்து இழுத்து ஒரு புன்சிரிப்போடு புவீந்திரன் போவான்.

அவனை ஒரு 'கரும்புலிப் பைத்தியம்' என்று சொல்லலாம். அவனது நினைவுகள் கனவுகள் எல்லாமே ஒரு கரும்புலித் தாக் குதலைச் சுற்றித்தான் இருந்தன.

எவருமில்லாத தனியறையொன்றில் -

ஏதாவது ஒரு கடற்கரையோர வரைபடத்தை விரித்து வைத்து விட்டு, நீண்ட மெல்லிய ஒரு தடியோடு புவீந்திரன் அருகில் நிற்பான். தன்னைத் தளபதியாகவும், அருகில் வீரர்கள் நிற்பதைப் போலவும் உருவகப்படுத்திக் கொண்டு வரைபடத்தைத் தடியால் தொட்டுக் காட்டி, அவன் காற்றுக்கு விளங்கப்படுத்திக் கொண்டிருப்பான்.

''...டோரா இதாலதான் வரும்...''

''...உங்கட வண்டியள் இந்தமாதிரி வியூகத்தில அதைக் குறுக்கால மறிச்சு அடிக்கும்...''

''...அந்த நேரம் இந்த விதமாகப் பக்கவாட்டில், உச்சவேகத்தில வந்து புவீந்திரன் இடிப்பான்...''

''... டோரா புக்கையாகும்...''

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஒளித்திருந்து பார்த்துக்கொண்டிருக்கும் எங்களுக்கு, அவனைப் பார்க்கச் சிரிப்பு வரும்.

புவீந்திரன்!

அவன் ஒரு வித்தியாசமான போராளி மட்டுமல்ல; வித்தியாசமான மனிதனும்கூட. அவன் அமைதியானவன்; ஆனால் சோம்பேறியல்ல. உற்சாக மானவன்; ஆனால் குழப்படிகாரனல்ல.

அவனோடு வாழக்கிடைத்த நாட்கள் எங்களுக்கு வரப்பிரசாதம்.

அவனுக்கு மட்டுமே உரிய சில உயர்ந்த பண்புகள் இருந்தன. இவற்றை அவனிடத்தில் மட்டும்தான் காணமுடியும்.

இயல்பாகவே அவனுக்கிருக்கின்ற இரக்க குணம், அடுத்தவர்கள் அவனில் இரக்கப்படும் விதமாக அவனை இயக்குவிக்கும்.

இயலாத காலோடும்கூட சில சமயங்களில் எங்களது நெஞ்சுருகும் விதமாக அவன் செயற்படுவான்.

கிணற்றடியில் உடுப்புத் துவைத்துக் கொண்டிருக்கும் நண்பன், அவசர வேலையொன்றிற்கான அழைப்பின் பேரில், துவைப்பதைப் பாதியில் விட்டு விட்டு அவதிப்பட்டு போனானென்றால் அவன் திரும்பி வரும்போது அவனது உடுப்புக்கள் முற்றத்து வெயிலில் உலர்ந்து கொண்டிருக்கும். அப்படிப்பட்டவன்தான் புவீந்திரன்.

முகாமிற்கு யாராவது வெளி ஆட்கள் வந்துவிட்டால் அவர்களை உபசரிக்க, அன்றைய 'முறை ஆளை'த் தேடித்திரிந்து, பின் மூலையில் போய்ப் பிடித்துவந்து விடுவதற்கிடையில் வந்தவர்களுக்குத் தேநீர் கொடுத்துவிட்டு, அவன் பேணிகளைக் கழுவிக்கொண்டிருப்பான். அதுதான் புவீந்திரன்.

ஆனையிறவில் வெடிபட்டுக் காயம் மாறி வந்தவனுக்கு, யாழ். மாவட்ட நிர்வாகச் செயலகத்தில் தட்டச்சுப் பொறிப்பது பணி. அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுத்துக்களைத் தேடித்தேடிக் குத்திக்கொண்டிருந்தவன் கொஞ்ச நாட்களில், மற்றவர்கள் மெச்சக் கூடிய அளவுக்கு அதில் தேர்ச்சி பெற்றான்.



கடற் கரும்புலிகள் மேஜர் புவீந்திரன், கப்டன் மணியரசன்

இது எங்கள் கடல். இது தமிழீழத் தாயகத்தின் இணைபிரியாத அங்கம், தரையோடு, இந்தக் கடலும் மீட்கப்பட்டே ஆகவேண்டும்.

அறிக்கைகள், கடிதங்கள், விபரக் கோவைகள், அது இது என்று, நாளாந்தம் அவனுக்கு வேலைகள் குவிந்துபோய்க் கிடக்கும். அப்படி இருக்கும் போதும் - கவிதை, கட்டுரைகளை எழுதிக்கொண்டு வந்து, "இதையும் ஒருக்கால்..." என்று கெஞ்சுகின்ற நண்பர்களிடமும் முகம் சுளிக்காமல் வாங்கி சட்டைப்பைக்குள் மடித்து வைப்பான். காலை மாலை இரவு என இழுபட்டு நள்ளிரவு கடந்து 1, 2 மணிவரை இருந்து கூட தனக்குரிய வேலையை முடிக்கின்ற அந்தப் போராளி, அதன் பிறகும் விழித்திருந்து - நண்பர்களுடையதையும் அடித்துக் கொடுக்கின்ற நண்பன்.

புவீந்திரன்!

புலிவீரர்களின் வாழ்வுக்கு நீ ஒரு பாடம்.

உன்னோடு வாழ்ந்த நாட்கள் எக்காலத்திலும் தேயாத பசுமையான நினைவுகள்.

சூம்பிக் கிடக்கும் காலோடும் உன்னைத் தூக்கிக்கொண்டுபோய் கடலில் இறக்கிவிடும் போதெல்லாம் சிறு பிள்ளை மாதிரி தத்தளித்து தத்தளித்து கையைக் காலை விசுக்கி விசுக்கி - ஓயாதமுயற்சியோடு அலைகளோடு போராடி நீ நீந்திப் பழகினாய்.

"பயிற்சிக் காலம் போதாது. ஒருத்தன்கூட சரியாய் அடிக்க மாட்டான்..." என்று சொன்னவர்களிடம் சவால் விட்டு, பயிற்சி முகாமிலிருந்த அத்தனை பேருக்கும் சாள்ஸ் அண்ணன் 'ரச்' தந்த போது - வெடிபட்ட காலை அவரே சரியாய் எடுத்து விட்டு, ரைபிள் பிடித்துச் சொல்லித்தர - நீ மட்டுமே ஒரு 'புல்' லும், ஒரு 'நைனும்' அடித்து, சாள்ஸ் அண்ணனின் பெயரைக் காத்தாய்.

எதுவுமே தெரியாத அப்பாவிக் குழந்தையான உன்னிடம், நல்லதற்ற ஒரு வார்த்தையைச் சொல்லி, "இன்னாரிட்டைக் கேட்டுப் பார் அர்த்தம் சொல்லுவார்..." என்று அனுப்பிவிட்டால் - அங்கு போய் நல்ல கிழி வாங்கிக்கொண்டு வந்து, விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு முன்னால் அசடு வழிய நிற்பாய்.

கால் இயலாமல் இருந்தும், மெல்ல மெல்ல படகோட்டப் பழகி

Tamileelam Archive

கிளாலிக்களத்தில் எதிரிகளைக் கலைத்து விரட்டும் சண்டைகளில், அலைகளைக் கிழித்துச் செல்லும் எங்களது சண்டைப்படகுகளிற்கு ஓட்டியாய் இருந்தாய்.

இன்னும்... இன்னும்...

இவையெல்லாம், எக்காலமும் ஓயாமல் எங்கள் இதயங்களில் நினைவலைகளாய் மோதும்.

புவீந்திரன்!

சாதனையொன்றைச் செய்துதான் சாவேன் என்றாயா? சாகும் போது நீங்கள் படைத்தது ஒரு சாதனையல்ல; அது சாதனைகளின் ஒரு குவியல்.

'கனன்' எடுத்தது சாதனை. அது இரண்டாக இருந்ததும் ஒரு சாதனை. ஒரே தாக்குதலில் இரண்டு 'பிப்ரி' எடுத்தது இன்னொரு சாதனை. டோரா ஒன்றை முழுமையாக நொருக்கியது அடுத்த சாதனை. ஒரு கடற்தாக்குதலில் அதிக படையினர் கொல்லப்பட்டது வேறொரு சாதனை.

"ஆசீரில ட்ரெயினிங் தரேக்கை நாங்கள் ஒரு டோரா அடிக்க வேணும் எண்டு சாள்ஸ் அண்ணன் சொல்லுறவர்..." என்று அடிக்கடி கூறும் நீ, "இப்ப நாங்கள் அடிக்கப் போறம். ஆனால், அதைப் பார்க்கிறதுக்கு அவர்தான் இல்லை" என்று கவலைப்படுவாய்.

அந்தத் தாக்குதல் திட்டம் உருவாக்கப்பட்டது.

கட்டைக்காட்டிலிருந்து பலாலிக்கு ரோந்து செல்லும் டோராவை, பருத்தித்துறைக்கு மேலே இடைமறித்து மூழ்கடிக்க வேண்டும். கட்டைக்காட்டிலிருந்து 18 மைல் தூரத்திலும், காங்கேசன்துறையிலிருந்து 16 மைல் தூரத்திலும் அந்தத் தாக்குதல் மையம் இருந்தது.

மணியரசனும் நீயும் தலைவரிடம் போனீர்கள்.

உங்கள் வாழ்வின் உச்ச உயர் நாள் அதுவாகத்தான் இருந்திருக்கும். உள்ளப்பூரிப்பின் சிகரங்களைத் தொட்டிருக்கக் கூடிய

Tamileelam Archive

அந்தநாளில், உங்கள் மனவுணர்வுகள் எப்படியிருந்திருக்கும் என்பதை, வார்த்தைகளில் வடித்தெடுக்க முடியாது.

சோகம் பரவிய முகத்தோடு, உன்னைக் கைதொட்டுத் தடவி, ''எந்தக் காலிலையப்பன் வெடி பிடிச்சது?...''என்று, அக்கறையோடு தலைவர் விசாரித்த போது மெய்சிலிர்த்து நின்று சிரித்தாயாம்.

எல்லாமே தயார்.

சக்கை வண்டி, சண்டைப் படகுகள், தாக்குதற்கருவிகள், தாக்கும் வீரர்கள், மணியரசன், நீ... எல்லாமே.

ஏறக்குறைய பதினைந்து நாட்கள். அவனுக்காகக் கடல் மடியில் நீங்கள் காத்திருந்தீர்கள். நள்ளிரவிலேயே நிலைக்குப் போய் விடவேண்டும். இருளை ஊடறுத்து உங்கள் விழிகள் பகைவனைத் தேடிக்கொண்டிருக்கும்.

மறுநாள் மதியமோ, மாலை வரையோ அந்தத் தேடல் நீடிக்கும்.

எதிரி வரமாட்டான். ஒவ்வொரு நாளும் ஏமாற்றத்தோடு திரும்பி வருவீர்கள்.

உற்சாகம் குன்றாமல், உறுதிகுலையாமல் நீங்கள் மீண்டும் மீண்டும் போனீர்கள்.

29.08.93. நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தவன் கடலில் வந்தான்.

பொங்கியெழும் எங்கள் கடலில் பகைவன் உலா வரவா?

காத்திருந்த வேங்கைகளின் ஆவேசமான பாய்ச்சல்.

தனியறையில் வரைபடத்தை விரித்துவைத்து நீ காற்றுக்கு விளங்கப்படுத்துகிற அதே தாக்குதல் திட்டம் எங்கள் கண்ணெதிரே கடலில் நடந்து முடிந்தது.

அப்போது நாங்கள் சிரித்தோம். இப்போது...

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

இரண்டு 'கனன் பீரங்கி' களையும், 2 'பிப்ரி கலிபர்'களையும் மூழ்கிக்கொண்டிருந்த 'டோரா' விலிருந்து தோழர்கள் எடுத்துக் கொண்டு வந்தார்கள்.

புவீந்திரன் வரமாட்டான்...!

மணியரசனும் வரமாட்டான்...!

* * *

மணியரசன்!

"பதினைந்தும் நிரம்பாத பாலக வயதில், தாயகத்துக்காய் தனையீந்த கரும்புலி, என் கருவில் விளைந்த பிள்ளை" என்று, தமிழீழத் தாயை தலைநிமிர்ந்து சொல்ல வைத்த அடலேறு அவன்.

அந்தத் துடியாட்டமும், துடுக்கான பேச்சுக்களும் எங்களது நெஞ்சுக் கூட்டுக்குள் அவனது நினைவுகளைப் புதைத்துவிட்டுப் போய்விட்டன.

இந்தச் சின்ன வயதிலும் பிறைச்சந்திரன் போல ஒரு மெல்லிய மொட்டை, அகவைக்கு ஏற்ற அளவில் குழந்தை வளர்ச்சி, குறும்புச் சிரிப்போடு ஓர் உருண்டை முகம். நிமிர்ந்த லாவகமான திடகாத் திரமான உடல்வாகு. எங்கள் கண்ணெல்லாம் அந்த வண்ணக்கோலம்.

மணியரசன் குறுகுறுத்தவன்.

பஜரோவில் வருகின்றவர், வீட்டிற்குள்போய் அலுவல் முடித்துவிட்டு, போன வேகத்திலேயே திரும்பி வந்தால்கூட, பஜரோ அடுத்த பக்கமாகத் திரும்பி நிற்கும். "ஆரடா தம்பி பஜரோவை திருப்பி விட்டது?"; வந்தவர் தேடினால், ஒதுக்குப் புறமாக மணியரசன் தலையைச் சொறிந்து கொண்டு நிற்பான். அது மோட்டார் சைக்கிளானால், ஒரு '8' அடித்து விட்டுத் திரும்பி நிற்கும். உள்ளே போனவர் வெளியில் வந்தால் ஏதோ முக்கிய வேலையில் மூழ்கியிருப்பவனைப் போல, தூரத்திலிருந்து ஓரக்கண்ணால் பார்ப்பான். முகாமிற்குப் புதிதாகக் கொண்டுவரப்படும் ஒரு பொருள், துண்டுகளாகப் பிரித்து மேசையில் வைக்கப்பட்டிருக்கும். யாருடைய

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

வேலை இது என்று யாருமே கேட்பதில்லை.

மணியரசன் குறுகுறுத்தவன்தான்: குழப்படிகாரன்தான். ஆனால் எவருடைய கோபத்திற்கும் ஆளாகின்றவனல்ல.

ஒரு தடவை அவனோடு பழகியவர்களுக்கு, இன்னொரு தடவை அவனை நினைவுபடுத்தத் தேவையில்லை. எல்லோருடைய நினைவுகளிலும் நிலைத்துவிடும் வசீகரம் அவனிடமிருந்தது. மிகக் குறுகியகாலத் தொடர்புசாதன வேலையில் அவன் சேர்த்து வைத் திருந்த முகம் தெரியாத நண்பர்கள் பலர்.

எந்த நிலையத்தில் தகவல் பரிவர்த்தனை வேலை செய்பவராக இருந்தாலும், அவனோடு கதைக்காமல் அவர்கள் அலைவரிசையை மூடிக்கொண்ட நாட்கள் மிகக் குறைவு. மணியரசா! உனது அன்பின் வீச்சுத் தூரம், தமிழீழத்தின் எல்லைகளைத் தொட்டிருந்ததடா!

மணியரசனுக்கு ஒரு பொழுது போக்கு, மற்றவர்களைக் கிண்டல் செய்துகொண்டிருப்பது. அவனிருக்குமிடத்தில் வாய்திறக்க அநேகமானவர்களுக்குப் பயம். ட்ரக் ஓடும் ஐம்பது வயது ஐயா விலிருந்து, புதிதாக இயக்கத்திற்கு வரும் சின்னப் பையன்வரை- வயது வேறுபாடின்றி-எல்லோருமே அவனுடைய அறுவைக்கு இலக்கு. ஆனாலும் மணியரசா! ''இயக்கம் பொம்மர் வாங்கினா, அதை இறக்க எங்களிட்டை ஒரு 'றண்வே' இருக்கு'' என்று மயிரில்லாத உன் முன்பக்கத் தலை அறுவைக்கு உள்ளாகும்போது கூட, மேல் மயிரைத் தட்டி விட்டு 'உருமறைப்பு'ச் செய்து கொண்டு, புன்னகையோடு அந்தக் கிண்டலை ஏற்றுக்கொள்ளும் உனது நட்பின் பண்பு உயர்ந்தது.

* * *

ஊரிலும் பள்ளிக்கூடத்திலும் கனியூட் என்று செல்லமாக அழைக்கப்பட்ட வேதநாயகம் ராஜரூபன்தான் எங்கள் மணியரசன்.

குடும்பத்தில் கடைசித் தங்கச்சிக்கு நேரே மூத்த இவன், 7 ஆவது பிள்ளை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மணற்காடு றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயத்தில் படிக்கும்போது, அதன் உதைபந்தாட்டக் குழுவொன்றில் சிறந்த ஒரு விளையாட்டு வீரனாக இருந்ததுடன், அவன் படிப்பிலும் கெட்டிக் காரனாம்.

அப்பா தொழிலுக்குப் போகும் போது, இடைக்கிடை அவரோடு கடலுக்குப் போகிறவன், திறமையான நீச்சல்காரனாகவும் ஆகி யிருந்தான்.

1991 இன் நடுப்பகுதியில் இவன் இயக்கத்திற்கு வரும்போது 8ஆம் வகுப்போடு படிப்பை இடையில் நிறுத்திவிட்டுத்தான் வந்தான்.

அவன், எல்லாத் திறமைகளும் ஒருங்கிணைந்திருந்த ஒரு போராளி. இந்தத் தேசம் அவனிடமிருந்து பெற்றுக்கொள்ள நிறையவே இருந்தது; அவற்றை வழங்கும் ஆற்றலையும் அவன் கொண்டிருந்தான். ஆனால், ஒரு கரும்புலித் தாக்குதல்தான் அவ னுடைய பிரதான குறியாக இருந்தது. கடைசியிலும் அதைத்தான் அவன் செய்தான்.

கடற்புலிகளின் முதலாவது பயிற்சி வகுப்பில் பயிற்சி எடுக்கும் போதே பயிற்சிகளில் ஆர்வம் நிறைந்தவனாகவும், பரீட்சைகளில் அதிக புள்ளிகள் பெறுபவனாகவும் திகழ்ந்தான்; சிறந்த ஒரு விடுதலை வீரனாக முளைவிட்டான்.

அவனுடைய தெளிவான பேச்சுவன்மையும், விடயங்களைக் கிரகித்துக்கொள்ளும் வேகமும்தான் அவனை தகவல் பரிவர்த்தனை வேலைக்கு ஏற்றவனாக இனம் காட்டின. தகவல் தொடர்புச் சாதனம் கற்பிக்கும் பாடத்திட்டமானது, பொதுவாக 'இவ்வளவு காலப்பயிற்சி' என வரையறுக்கப்பட்டது. ஆனால், மணியரசன் அதனைக் கற்றுக்கொண்டுவிட்ட நாட்களை விரல் மடிப்பிற்குள் அடக்கிவிடலாம்.

இரண்டே வருடகால அவனுடைய போராட்ட வாழ்வின் மிகப் பெரும்பாலான நாட்கள், தொடர்புசாதனம் இயக்கும் வேலையிலேயே அவனை ஈடுபடுத்தின. அந்தப் பணியின் முக்கியத்துவத்தையும் - இன்றியமையாமையையும் அவன் புரிந்துணர்ந்திருந்த போதிலும், சண்டைக்குப் போகவேண்டுமென்ற ஆதங்கமே அவனிடம்

மேலோங்கியிருந்தது. கங்கை அமரன் வன்னிக்குப் புறப்பட்டால் தானும் வரப்போவதாக நச்சரிப்பான்; பிருந்தன் மாஸ்ரர் கிளாலிக்கு வெளிக்கிட்டால், தன்னையும் கூட்டிச் செல்லுமாறு அடம்பிடிப்பான். தன்னோடு நிற்கும்போதே, சண்டைக்கு அனுப்பும்படி மணியரசன் தனக்கு எழுதும் கடிதங்களை வாசிக்கவேண்டிய வில்லங்கம் தளபதி சூசைக்கு இருந்தது.

அவனது ஆசை ஓரளவு பூர்த்தியாகிவர - வடமராட்சியிலுள்ள தலைமைத் தளத்தில் பகல் முழுவதும் 'செற்' கதைத்துக் கொண்டிருப்பவன், இரவுகளில் - கிளாலியின் சண்டைமுனையில் ஒரு எல். எம். ஜியுடன் வலம்வரத் துவங்கினான்.

இறுதிக்காலத்தில் - முழுமையாக, கிளாலியில் மக்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொழுதுகளிலும் - ஒரு கரும்புலித் தாக்குதலே மணியரசனுடைய பிரதான குறியாக இருந்தது. எங்களுக்குள் சுழன்று திரிந்த அந்த இனிய நண்பன் அதைத்தான் செய்து முடித்தான்.

அவனுடைய கடைசி நாட்களில் அவன் மிகுந்த உற்சாகமாக இருந்தான்.

தனது முகம்தெரியாத நண்பர்களிடம் வானலைகளினூடாக விடை பெற்றான்; அந்தத் தொடர்புசாதனத்திடமிருந்தும் விடைபெற்றான்.

கிளாலிக் கடலில் - சிதைந்து போன நிலையிலும் - மதன் அதிசயமாய் மிதந்து வந்தபோது. நாங்கள் பக்குவமாய் எடுத்து வந்து துயிலுமில்லத்தில் விதைக்கையில், கண்ணீரோடு மதனுக்கு மண்போட்டான். அந்த நேரத்தில் 'எனக்கு மண்போடும் பாக்கியம் ஒருவருக்கும் கிடைக்காது' என்று நினைத்திருப்பானோ...?

தோரணம் கட்டி, பந்தல் போட்டு - மதனுக்கும் வரதனுக்கும் அஞ்சலி செய்தபோது, வீதிவீதியாகத் திரிந்து பார்த்தான். இன்னும் நாலு நாளில் தனக்கும் இப்படித்தான் செய்வினம் என்று நினைத்திருப்பானோ...?

இப்போது அவன் போய் விட்டான்; எங்களால் எட்ட முடியாத

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தொலைவுக்கு. எங்களைக் கிண்டல் செய்துகொண்டிருக்க அந்த அறுவைக்காரன் இப்போது இல்லை; இயக்கம் 'பொம்மர்' வாங்கினால் இறக்கி ஓட அந்த 'றண்வே' யும் இப்போது இல்லை!



கரும்புலி கப்டன் மதன்



கரும்புலி கப்டன் மணியாசன்



கரும்புலி மேஜர் வரதன்



கரும்புலி மேஜர் புவீந்திரன்

தமிழீழ ஆவணகம்
Tamileelam Archive

# சிறீலங்கா கடற்படையின் பலம்

1990 யூன் 10 ஆம் திகதி தொடங்கிய போருடன் சிறீலங்கா அரசு தனது கடற்படையில் ஆட்பலத்தை, அப்போதிருந்ததைவிட ஏறக்குறைய இரண்டு மடங்காக அதிகரித்தது. ஆட்தொகையில் மட்டுமல்ல அதிவேகப் படகுகள், பீரங்கிப்படகுகள், பாரிய ரோந்துக் கப்பல்கள் என்று கடற்படையின் ஆயுதபலத்தையும் அதிகரித்தது.

1950 ஆம் ஆண்டு சுமார் இருநூறு மாலுமிகளுடன் இருந்த சிங்களக் கடற்படையின் ஆட்தொகை 1993 இல், பத்தாயிரத்து நானூறாக அதிகரித்துவிட்டது (வரைபடத்தைப் பார்க்கவும்).

15.11.1992 அன்று கொழும்பில் நடந்த ஒரு மனிதக்குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட, அப்போதைய கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோவுக்குப் பதிலாக, சிறீலங்கா கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் D. A. M. R. சமரசேகரா பதவியேற்றுள்ளார்.


கடற்படைத் தளபதியின் தலைமையின் கீழ் சிங்களக் கடற்படை நான்கு நிருவாகப் பிரிவுகளாக இயங்கிவருகின்றது.

1. பிரதம அதிகாரி (Chief of Staff)
2. கிழக்குப் பிராந்திய கடற்பகுதி (Com. East)
3. வடபிராந்திய கடற்பகுதி (Com. North)
4. கடல் நடவடிக்கைகளின் இயக்குனர் சபை (Dire. of Ops.)

இவை ஒவ்வொன்றுக்கும் 'கொமடோர்' தரத்திலான அதிகாரிகள் பொறுப்பாக உள்ளனர் ('பிரிகேடியர்' என்ற தரைப்படைப் பதவிநிலைக்கு இது ஒப்பானது).

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## சிறீலங்கா கடற்படையின் ஆட்பல வளர்ச்சி



பிரதம அதிகாரி என்ற பதவி நிலையில் கொமடோர் D. K. தசநாயக்க, கிழக்குப் பிராந்திய கடற்பகுதிப் பொறுப்பதிகாரியாக கொமடோர் D. W. சந்தசிறி, வடபிராந்திய கடற்பகுதி அதிகாரியாக கொமடோர் J. T. G. சுந்தரம், கடல் நடவடிக்கையின் இயக்குனர்சபைப் பொறுப்பதிகாரியாக கொமடோர் H. R. அமரவீர ஆகியோர் பதவி வகிக்கின்றனர்.

சிங்களக் கடற்படையின் கப்பற்பலத்தை பின்வரும் வகைகளுக்குள் அடக்கலாம்.

## 1. கட்டளையிடுவதும் துணையுமான கப்பல்

(Command and Support Ship)

இந்தவகைக் கப்பல்கள் கடற்படையிடம் மூன்று உண்டு. அபிதா, எடித்தாரா, விக்கிரம என்ற பெயருடன் களத்தில் உள்ளன. இவை மூன்றும் வடபிராந்திய கடற்பகுதியிலேயே சேவையில் உள்ளன. இவற்றின் பணி சதா கடலைக் கண்காணித்து, புலிகளின் படகுகள் தென்படுகின்றனவா என்று பார்ப்பதும், அவ்விதம் தென்பட்டால் அந்தத்தகவலை பீரங்கிப் படகுகளுக்கு அல்லது விசைப்படகுகளுக்கு அறிவித்து, குறித்த படகுகளை மூழ்கடிப்பதும் தான். அத்துடன் ஏனைய கடற்படைக் கப்பல்களுக்கு நீர், எரிபொருள் என்பவற்றை வழங்குவதுடன், வழிகாட்டியாகவும் செயற்படும். 150-175 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட இக்கப்பல்கள், மணித்தியாலத்திற்கு 9-12 கடல்மைல் வேகத்தில் செல்லக்கூடியவை.

இந்தவகைக் கப்பல் ஒன்றில் 60-65 மாலுமிகள் பணியாற்றுவர். தேவை ஏற்பட்டால் 1000 சிப்பாய்களை ஏற்றிச்செல்லும் சக்தி இதற்குண்டு.

இக்கப்பல்கள், 'கப்டன்' தரத்திலான அதிகாரிகளால் வழிநடாத்தப்படும். (இந்தப் பதவியை 'கேணல்' என்ற தரத்திலான தரைப்படைப் பதவிக்கு இணையானதாகக் கொள்ளலாம்).

இந்த மூன்று கப்பல்களில் 'எடித்தாரா' கப்பல் மீது 10.07.1990 அன்றும், 'அபிதா' கப்பல் மீது 04.05.1991 அன்றும் கரும்புலித்

தாக்குதல் நிகழ்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. சேதமடைந்த இக்கப்பல்கள் பின்னர் கொழும்பு 'டொக்யாட்' நிறுவனத்தினால் திருத்தியமைக்கப்பட்டு, இப்போது மீண்டும் வடபிராந்தியக் கடலில் சேவைக்கு விடப்பட்டுள்ளன.

இந்தக் கப்பல்களில் பொருத்தப்பட்டுள்ள 'செலஸ்மார்' வகை ராடார்கள், 85 மைல் தொலைவீச்சுக் கொண்டவை. இந்த ராடர் மூலம் ஒரு படகு அல்லது கப்பல் எந்தத் திசையில் சென்று கொண்டிருக் கின்றது, அதில் என்னவகையான ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருக் கின்றன, அப்படகினது அல்லது கப்பலின் வேகம் என்ன, குறித்த படகு அல்லது கப்பல் இந்தக் கடற்படையின் கப்பலிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதையும் அறிந்து கொள்ள அந்த ராடர்கள் உதவும். அத்துடன் 14.5 மி. மீ. ரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் மூன்று அல்லது 25 மி. மீ. ரக பீரங்கி ஒன்றும், 14.8 மி. மீ. ரக துப்பாக்கி இரண்டும் பொருத்தப்பட்டிருக்கும்.

## 2. பாரிய ரோந்துப் படகுகள்

(Large Patrol Craft)

இந்த வகைக் கப்பல்கள் கடற்படையிடம் இரண்டு உண்டு. ஜெயசேகரா, சாகரவர்த்தனா என்ற பெயர்களுடன் களத்தில் உள்ளன. ஏறக்குறைய 132 அடி நீளமும் 35 அடி அகலமும் கொண்ட இவை, 25 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியவை. இதில் முன்னுக்கும் பின்னுக்கும் ஒவ்வொரு 25 மி. மீ. ரக பீரங்கிகள் பொருத்தப்பட் டிருக்கும். இவை தவிர இயந்திரத் துப்பாக்கிகளும் உண்டு. இந்த ரோந்துப்படகில் 35-40 மாலுமிகள் பணியாற்றுவர். இதனுடைய பணி ஆழக்கடலில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் - வேவு பார்த்தலும், கடற்சண்டையில் பங்குபற்றுவதும் ஆகும். இந்த வகைப் படகுகள் 'கொமாண்டர்' தரத்திலான அதிகாரிகளால் வழிநடாத்தப் படும் (தரைப்படையில் இப்பதவியை லெப். கேணல் என்ற தரத்திற்கு இணையானதாகக் கொள்ளலாம்).

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## 3. மோட்டார் பீரங்கிப் படகுகள்

(Motor Gun Boats) 'சங்காய் வகை-2'

வீரயா, சூரயா என்று மக்கள் அறிந்து வைத்திருக்கும் பீரங்கிப் படகுகள் இந்த வகையைச் சாரும். இந்தவகைப் படகுகள் கடற்படையிடம் ஒன்பது உண்டு. ('சங்காய் வகை-2' இல் ஐந்து படகுகளும், 'சங்காய் வகை -3' இல் நான்கு படகுகளும் உண்டு).

'சங்காய் வகை-2' ஐச் சேர்ந்தவை சூரயா, வீரயா, றணகாமி, தக்சயா, பாலவந்த என்று பெயரிடப்பட்டுள்ளன. இந்த ஐந்து பீரங்கிப் படகுகளின் முதல் எழுத்துக்களை எடுத்தால் (S. W. R. D. B.) அவை பண்டாரநாயக்காவை ஞாபகப்படுத்தும் வகையில் சிங்களப் படையால் பெயரிடப்பட்டுள்ளமை தெரியும்.


இந்தப்பீரங்கிப் படகுகள் 70-80 அடி நீளமும் 30-35 அடி அகலமும் கொண்டவை. இவை மணிக்கு 20 கடல்மைல் வேகத்தில் செல்லக்கூடியவை. இதில் 37 மி. மீ. பீரங்கிகள் இரண்டும், 25 மி. மீ. பீரங்கிகள் இரண்டும் பொருத்தப்பட்டிருக்கும். இப் பீரங்கிப் படகுகளில் 30-35 மாலுமிகள் கடமையாற்றுவர். இதன்பணி பாரிய கப்பல்களுக்குப் பாதுகாப்பளிப்பதும், கடற்சண்டையில் ஈடுபடுவதும், தரைப்படைக்கு ஆதரவாகக் கடலிலிருந்து குண்டுகளை வீசுவதும், கடலைக் கண்காணிப்பதும் ஆகும். இந்தப் பீரங்கிப் படகுகள் 'லெப். கொமாண்டர்' தரத்திலான அதிகாரிகளால் வழிநடாத்தப்படும். (இப் பதவியை 'மேஜர்' என்ற தரைப்படைப் பதவிநிலைக்கு இணையான தாகக் கொள்ளலாம்).

## 4. தரையிறக்கும் கலங்கள்

(Landing Craft)

இந்தவகைக் கலங்கள் நான்கு சிங்களப் படையிடம் உண்டு. கந்துல, ரணகய, பப்பத்த, பந்துல என்ற பெயர்கள் இவற்றிற்குச் சூட்டப்பட்டுள்ளன. 100 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட இக்கலங்கள், மணிக்கு 7 கடல்மைல் வேகத்தில் செல்லக்கூடியன. இவற்றின் பணி கடலிலிருந்து துருப்புக்களைத் தரையிறக்குவதுதான்.

Tamileelam Archive



*சிறீலங்கா கடற்படையிடமுள்ள "சங்காய்-2" வகையைச் சேர்ந்த ஒரு மோட்டார் பீரங்கிப்படகு. 'வீரயா - சூரயா' எனப் பொதுவாக மக்களால் பேசப்படும் பீரங்கிப்படகு இந்த வகையைச் சேர்ந்தது. ஆனால் வீரயா சூரயா என்பது ஒரு பீரங்கிப்படகின் பெயரல்ல; அது இரு வேறு பெயர்களைக் கொண்ட இரு வேறு பீரங்கிப்படகுகளாகும்.*

கடற்கரை வரை வந்து துருப்புக்களை இறக்கக்கூடிய வசதி இவற்றுக்குண்டு. வெற்றிலைக்கேணியில் இவ்வகைக் கலங்கள்தான், கடலிலிருந்து படையினரைத் தரைக்குக் கொண்டுவரப் பெரிதும் உதவின. ஒரே தடவையில் சுமார் 600 படை வீரர்களை ஒரு கலம் கொண்டு வந்து இறக்கும். இந்தக் கலங்களின் கட்டளை அதிகாரிக ளாக 'லெப். கொமாண்டர்' தரத்திலான அதிகாரிகள் பணியாற்றுவர். இக் கலங்களில் 20 மி. மீ. 'ஓவர்லிக்கண்' ரகப் பீரங்கிகள் இரண்டும், 12.7 மி. மீ. ரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் மூன்றும் மற்றும் இயந்திரத் துப்பாக்கிகளும் இருக்கும்.


கடல்வழி தரையிறக்க நடவடிக்கைகளில் இக்கலத்தினது பங்கு முக்கியமானதாக இருக்கும்.

## 5. அதிவேக ரோந்துப் படகுகள்

(Fast Petrol Craft)

இந்த வகைப் படகுகளில் பதினைந்து சிங்களப்படையிடம் உண்டு. 'டோரா' வகைப் படகுகள் பத்தும், 'டாபுர' வகைப் படகுகள் இரண்டும், தென்கொரியாவில் செய்யப்பட்ட படகுகள் (பெயர் அறியமுடியவில்லை) மூன்றும் அடங்குகின்றன. இப் படகுகளின் பணி, சந்தேகத்துக்கிடமான கப்பல்களை அல்லது படகுகளைத் துரத்தி அடிப்பதும், இரவு நேரங்களில் ரோந்தில் ஈடுபடுவதும், வேவு வேலைகளில் ஈடுபடுவதும், பாரிய கப்பல்களுக்குப் பாதுகாப் பளிப்பதும் ஆகும். 41 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட இந்த வேகப் படகுகள், மணிக்கு 35-40 கடல்மைல் வேகத்தில் ஓடக் கூடியவை. இதில் 20 மி. மீ. 'ஓவர்லிக்கண்' ரக பீரங்கிகள் இரண்டும், 12.7 மி. மீ. ரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளும், மேலும் இயந்திரத் துப்பாக்கிகளும் உள்ளன. இப் படகில் 9-12 மாலுமிகள் பணியாற் றுவர். 'லெப்ரினன்ட்' தரத்திலான அதிகாரி பொறுப்பாகச் செயற் படுவார். (தரைப்படையில் இப்பதவியை 'கப்டன்' தரத்திற்கு இணை யானதாகச் சொல்லலாம்).

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



மிதக்கும் மினிமுகாம்: சிறிய ரக போர்க்கப்பல் என வர்ணிக்கக்கூடிய 'டோரா' அதிவேகப் பீரங்கிப்படகு

## 6. கரையோர ரோந்துப் படகுகள்

(Inshore Patrol Craft)

இந்த வகைப் படகுகள் இருபத்தெட்டு சிங்களக் கடற்படையிடம் உண்டு. இதில் நீருந்து விசைப் படகுகளும் (Water Jet) அடங்கும். இந்த வகைப் படகுகளை சிறிலங்கா அரசு தானே தயாரித்துக் கொள் கின்றது. ஆழங்குறைந்த கடற்பகுதிகளில் கண்காணிப்புச் செய்ய, இவ்வகைப் படகுகள் பயன்படுத்தப்படும். 50 கலிபர் துப்பாக்கி ஒன்று பொருத்தப்பட்ட இப் படகுகளில், சாதாரண ரக சுரி குழல் துப்பாக் கிகளும் பயன்படுத்தப்படும். கிளாலிக் கடல் நீரேரியில் இவ்வகைப் படகுகளையே சிங்களக் கடற்படை பயன்படுத்துகின்றது.

தற்போது 'டெக்கா' ரக ராடர் ஒன்றும் இதில் பொருத்தப் பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள வகைப் படகுகள், கப்பல்கள் கடற் புலிகளின் வளர்ச்சிக்கு எதிராகப் போரிடப் போதுமானவையல்ல என்பதையறிந்த சிறிலங்கா கடற்படையின் தலைமையலுவலகம், தற்போது பிரான்ஸ் நாட்டு உதவியுடன் மேலும் பல்வேறு போர்க் கப்பல்களையும், அவற்றிற்குரிய பயிற்சிகளையும் கடற்படைக்கு உடனடியாக வழங்குகின்றது. இதன் முதற் கட்டமாக பிரான்ஸ் நாட்டு யுத்தக்கப்பலான 'கொமான்ட் போரே' கொழும்புத் துறைமுகத்தில் சென்ற மாதம் தரித்துநின்று, இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தற்போதைய யதார்த்த நிலைமையைப் புரிந்த சிறிலங்கா கடற்படை, தனது பலத்தை வட பகுதியில் ஒருங்கு குவிக்க வேண்டியதோர் நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பது வெளிப்படை. ஏற்கனவே வடபகுதிக் கடற் பிராந்தியத்தில் பின்வரும் தளங்கள், பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

01. காரைநகரில் உள்ள 'எலாற' கடற்படைத்தளம்.

02. காங்கேசன்துறையிலுள்ள 'காபர்வியூகொட்டேல்'.

03. கடற்படைத் தொண்டர்படை அலுவலகம்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

04. நயினாதீவு கடற்படைத்தளம்.

05. நாகதேவன்துறை கடல் ரோந்துப் படைத்தளம்.

இவை மட்டுமன்றி சிறிலங்காக் கடற்படையின் மூன்று கண்காணிப்புக் கட்டளைக் கப்பல்கள் வடபகுதி கடற்பிராந்தியங் களிலேயே நிரந்தரமாகத் தரித்துள்ளன. அதே போல அதிவேக ரோந்துப் படகுகள், பீரங்கிப் படகுகள் என்பனவும் பெரும்பாலும் வட பிராந்தியக் கடற் பகுதிகளிலேயே ரோந்தில் ஈடுபடுகின்றன.

வடபகுதியைப் போன்று பலமுள்ளதாக இல்லாது - மேற்குப் பிராந்தியக் கடற்பிராந்தியமானது, கடற்படைச் சிப்பாய்களது நலன்களைப் பேணுவது, மற்றும் கடற்படை தொடர்பான சகல நிர்வாக வேலைகளைக் கவனிப்பதற்கும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கட்டளையதிகாரியாக கப்டன் எ. எச். என். ராஸிக் தற்போது பணியாற்றுகின்றார்.

இவ்வளவு பலத்தையும் ஒரே கட்டுப்பாட்டு மையத்தின்கீழ் வைத்திருக்கும் முகமாக சிறிலங்கா கடற்படை, தற்போது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையுடன் கூடிய துறைமுகத்தையே வடபகுதியின் பாரிய கடற்படைத் தளமாக அமைக்கப்போவதாகவும், காரைநகர் கடற்படைத்தளத்திலும் பார்க்க இதுவே பாரியதாக அமையும் எனவும், வடபகுதியில் கடற்புலிகட்கு எதிராகப் போரிட புதிய கடற்படையணியாகிய 'கடற்சிங்கங்களை' உருவாக்கப்போவதாகவும் அறிவித்துள்ளது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கடற்புலிகளின் வளர்ச்சியும் போரில் திருப்புமுனைகளும்

சிங்கள தேசத்துப் படைத்துறையின் முதுகெலும்பாக இன்று விளங்குவது அதன் கடலாதிக்கம் தான். வடதமிழீழத்தில் கடற்கரையோரமாக அமைக்கப்பட்டிருக்கும் படைமுகாம்களுக்கான சகலவிதமான விநியோகங்களையும், ஆபத்துக்காலகட்டங்களில் அவசர உதவிகளையும் கடற்படையே வழங்கி, படைமுகாம்களைப் பாதுகாத்துப், பராமரித்து வருகின்றது.

சிங்களப் படைத்துறைக்கும் வடதமிழீழக் கரையோரமுள்ள படைமுகாம்களுக்குமிடையே தொப்புள் கொடிபோல நின்று செயற்படும் சிங்களக்கடற்படையின் பலம் சிதைக்கப்பட்டால், எமது விடுதலைப் போராட்டம் பாரிய திருப்புமுனை ஒன்றைச் சந்திக்கும். ஈழத் தமிழினம் ஆவலுடன் எதிர்பார்க்கும் திருப்புமுனைக்குரிய காலம் கனிந்து வருவதைத்தான், கடந்த மாதம் வெற்றிகரமாக நடந்து முடிந்த கிளாலிக் கடல் நீரேரித் தாக்குதலும் பருத்தித்துறைப் பெருங்கடற் தாக்குதலும் கோடிகாட்டியுள்ளன.

கடற்புலிகளின் வளர்ச்சியால் ஏற்பட்டுவரும் இத்திருப்புமுனை, எமது விடுதலைப்போரின் பரிணாமத்தை - தமிழினத்திற்குச் சார்பான முறையில் - மாற்றியமைக்கும் என்பது திண்ணம்.

எமது விடுதலைப்போரில் ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்துக் கொண்டிருக்கும் கடற்புலிகள் அமைப்பைக் கட்டி வளர்ப்பதில் தலைவர் பிரபாகரன் அவர்கள் பேரார்வம் காட்டிவருகின்றார்.

சிங்களக் கடற்படையுடன் ஒப்பிடும்போது, பலமும் வளமும் குறைந்த நிலையிலும், எதிரியை வெற்றிகொள்வதற்குரிய தந்தி

Tamileelam Archive

ரோபாயங்களையும் தாக்குதற் திட்டங்களையும் வரைந்து கடற் புலிகளின் பலத்தைப் பெருக்குவதில் தலைவர் தீவிர கவனம் செலுத்து கின்றார்.

ஆனையிறவுச் சமரையடுத்து 1991 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் என்ற பெயர்மாற்றத்துடன் வேகங் கொண்ட கடற்புலிகளின் செயற்பாடுகள், இந்த இரண்டு வருடத்தில், போரின் போக்கையே தீர்மானிக்கும் அளவுக்கு ஒரு நிர்ணய சக்தியாக வளர்ந்துவிட்டது.

அதுவும் கடந்த மாதம் கிளாலிக் கடலேரியிலும், பருத்தித்துறைப் பெருங்கடலிலும் - நான்கு நாள் இடைவெளிக்குள் - கடற்புலிகள் மேற்கொண்ட இரண்டு தாக்குதல்களின் வெற்றிகளும் அத்தாக் குதல்களின் தன்மைகளும் கடற்புலிகளின் பலத்தை எடுத்துக் காட்டியுள்ளன.

இலங்கைத் தீவில் இரண்டு இராணுவங்கள் என்ற கருத்துடன், இரண்டு கடற்படைகள் என்றும் மதிப்பிடத்தூண்டும் அளவுக்குக் கடற்புலிகள் ஒரு சக்தியாக உருவாகிவிட்டனர்.

கடற்புலிகளின் இந்த வளர்ச்சி சிங்களப் பேரினவாதிகளைக் கலக்கமடையச் செய்துவிட்டது. அவர்களது கலக்கத்திற்குக் காரணம் உண்டு.

ஈழப்போர்-2 சிங்கள அரசுக்குப் போதித்த பாடங்களுள் ஒன்று, கடல்வழித்தொடர்பு இல்லாத படைமுகாம்கள் (எல்லைப்புறங்கள் தவிர) நிலைத்திருக்க முடியாது என்பதுதான் (கொக்காவில், மாங் குளம், ஆனையிறவு அதற்கு உதாரணங்கள்).

ஆனால், இன்று அந்தக் கடல் வழித் தொடர்புக்கு ஆதாரமாக இருந்துவரும் சிங்களக் கடற்படைக்கே சோதனைக்காலம் தொடங்கி விட்டது.

ஆனையிறவுச் சமரின் பின், குடாநாட்டுடனான சகல தரைப் பாதைகளையும் துண்டித்து, யாழ் குடாநாடு மீது ஒரு முழுமையான இராணுவ முற்றுகையை இட்டு, பொருளாதாரத் தடையைப்

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பூரணமாக அமுல்படுத்தி - பொதுமக்களைப் பட்டினி போட்டு - அவர்களின் உறுதிப்பாட்டை உடைப்பதுடன் புலிகள் இயக்கத்தையும் அழித்து, விடுதலைப் போராட்டத்தையும் ஒடுக்க அரசு பெருமுயற்சி செய்தது. இதனைக் கண்ட குடாநாட்டு மக்களில் ஒரு பகுதியினர் இடிந்துபோய் பீதியில் இருந்தனர். புலிகள் இயக்கத்தின் இறுதிக் காலம் நெருங்கிவிட்டது எனப் பேரினவாதிகள் அகமகிழ்ந்திருந்தனர். அப்பொழுதுதான், கடற்புலிகள் கடலிலே காவியம் படைக்கத் தொடங்கினர். கிளாலிக் கடல்நீரேரி பிரதான பொருது களமாகவும் போராட்டத்தின் தலைவிதியையே தீர்மானிக்கக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் மாறத்தொடங்கியது.

படையினரின் பயமுறுத்தல்களையும் அரசின் தடைச்சட்டங் களையும் புறந்தள்ளிவிட்டு, கடல்நீரேரி ஊடாக மக்கள் பயணம் போகத்தொடங்கியபோது, அதனைத்தடுக்கச் சிங்களக் கடற்படை செயலில் இறங்கியது. கடல்நீரேரியைக் கட்டுப்படுத்துவதற்கென சங்குப்பிட்டி இறங்குதுறைக்கருகிலுள்ள நாகதேவன்துறையில் (ஞானிமடம்), ஒரு கடற்படைத்தளத்தை அது அமைத்துக்கொண்டது. '50 கலிபர்' துப்பாக்கியுடன் 'ராடர்' கருவிகள் பொருத்தப்பட்ட நீருந்து விசைப்படகுகளைக் கடற்படையினர் கடல் ரோந்திற்குப் பயன்படுத் தினர். உல்லாசப் பயணம் போவதுபோல, நாகதேவன்துறையி லிருந்து ஆனையிறவு இராணுவத்தளத்திற்கு, கடல்நீரேரி வழியாக அடிக்கடி கடற்படையினர் ரோந்துசென்றனர்.

இவ்விதம் பல விசைப்படகுகள் சேர்ந்து கடல்நீரேரியில் ரோந்து போகத் தொடங்கின.

இத்தகைய ரோந்துத் தொடர் ஒன்றை 29.12.1991 அன்று தாக்கிய கடற்புலிகள் 9 கடற்படையினரைக் கொன்று, அவர்களது ஆயுதங் களையும் கைப்பற்றினர். இவ்வாறான தாக்குதல்கள் கடல்நீரேரியில் தொடர்ந்தன.

அதன்பின் ஆனையிறவுக்கான கடல் ரோந்து தடைப்பட்டது.

இரவு நேரங்களில் மக்களின் படகுப்பயணத்திற்குப் பாதுகாப் பளித்துவந்த புலிகளின் விசைப்படகுகளுக்கும் சிங்களக்கடற்படையின்

Tamileelam Archive

விசைப்படகுகளுக்கும் இடையே, நேரடிக் கடற்சண்டைகள் நடை பெறத் தொடங்கின. இந்தச் சண்டைகளில் கடற்புலி வீரர்கள் காட்டிய வீரமும் அபாரத் துணிச்சலும் சிங்களக் கடற்படையைக் கதிகலங்கச் செய்தன. இறுதியில், 26.08.93 அன்று நடந்த கடற்சண்டையும் கரும்புலித் தாக்குதலும் கடல்நீரேரியில் சிங்களக் கடற்படையைத் தூரவிலகியிருக்கச் செய்துவிட்டன.

இவ்விதம் கிளாலிக் கடல்நீரேரி ஊடாக ஒருபோக்குவரத்துப் பாதையைத் திறந்த கடற்புலிகள், சிங்களக் கடற்படையுடன் இடை விடாது மோதி, வீரச்சாதனைகள் பல புரிந்து, இறுதியில் கிளாலிக் கடல்நீரேரியில் மேலாதிக்கம் பெற்றுவிட்னர். இந்தவகையில் கிளாலிக் கடல்நீரேரியில் கடற்புலிகள் நிகழ்த்திய கடற்சண்டைகள், எமது போராட்ட வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுக்கொள்ளும்.

கடற் சண்டைகளைப் பொறுத்தளவில், கிளாலிக் கடல்நீரேரியைப் போன்று ஆழங்குறைந்த கடல்களில் நடைபெறும் படகுச் சண்டைகள் ஒரு பரிமாணத்திலும், ஆழக்கடலில் நடைபெறும் சடற் சுண்டைகள் இன்னொரு பரிமாணத்திலும் இருக்கும். ஆழங்குறைந்த கடலில் அலைகள் குறைவாக இருக்கும். எனவே சாதாரணப் படகுகளையும் சண்டைப்படகாகப் பயன்படுத்தமுடியும். அத்துடன் 'டோரா' போன்ற சக்திவாய்ந்த பீரங்கிப்படகுகளை ஆழங்குறைந்த கடலில் ஓட்டமுடியாது. இவை கடற்புலிகளுக்குச் சாதகமான விடயங்கள். ஆனால் ஆழக்கடலில் பாரிய அலைகள் இருக்கும். அந்த அலைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவுக்குப் படகுகளும் பாரம்கூடியதாகவும் பாரியதாகவும் வலிமை உடையதாகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் பொங்கும் அலைகளின் மத்தியிலும் குறிபிசகாது எதிரிப்படகுகளுடன் மோதமுடியும். இவ்விதமான பாரிய படகுகளைக் கொள்வனவு செய்யும் வசதிகளோ அல்லது கட்டும் வசதிகளோ தற்போது கடற்புலிகளிடம் இல்லை. இதற்கு நிறைந்த தொழில் நுட்பத்துடன் பெருமளவில் பணமும் தேவை. ஆனாலும் ஆழக் கடலிலும் அதிரடித் தாக்குதல் செய்வதற்குரிய சக்தியுடனேயே கடற்புலிகள் உள்ளனர். அவ்விதம் பல அதிரடி நடவடிக்கைகளைச் செய்து, சிங்களக் கடற்படைக்கு கணிசமான இழப்புக்களையும் இடை விடாத தலையிடியையும் கொடுத்துவருகின்றனர்.

சிங்களக் கடற்படையைப் பொறுத்தளவில், ஆழக்கடலிலும் கடற்புலிகள் ஆதிக்கம் பெற்றுவிடுவார்களோ என்ற அச்சம்தான் தற்போது மேலோங்கியுள்ளது. ஆயினும் சிங்களக் கடற்படைக்குச் சவாலாக ஆழக்கடலில் நேரடிச் சண்டைகளில் ஈடுபடக்கூடிய அளவுக்கு கடற்புலிகளின் சக்தி பெருகினாலே போதும். அது போரின் போக்கையே தலைகீழாக மாற்றிவிடும் என்பது இராணுவ ஆய்வாளர்களின் எதிர்பார்ப்பு.

இன்றைய நிலையில், வடதமிழீழத்தில் உள்ள அனைத்துப் படைமுகாம்களின் பாதுகாப்பும் (எல்லைப்புறத்தைத் தவிர) சிங்களக் கடற்படையின் பலத்திலேயே தங்கியுள்ளது. கடற்படையின் உதவி இல்லாமல் வடதமிழீழத்தின் படைமுகாம்களைப் பராமரிப்பது என்பது சிங்கள அரசுக்கு இயலாத ஒன்று. படைமுகாம்களுக்குத் தேவையான உணவு, ஆயுதத்தளபாடங்கள் மற்றும் அனைத்துப் பொருட்களும் கடற்படை மூலமே விநியோகிக்கப்படுகின்றன. அத்துடன் படை முகாம்கள் புலிகளால் தாக்கப்படும்போதும் கடல்வழியேதான் சிங்களப் படைகளுக்கு உதவிகள் வந்துசேருகின்றன.

இந்த விநியோகங்களுக்கும் உதவிகளுக்கும் ஊறுவிளைவிக்கக் கூடிய அளவுக்குக் கடற்புலிகளின் நடவடிக்கைகள் ஆழ்கடலில் தொடர்ச்சியாக அமையுமாயின், கடலோரப் படைமுகாம்கள் சிலவற்றை அகற்ற வேண்டிய நிர்ப்பந்தம் சிங்கள அரசுக்கு எழலாம்.

பருத்தித்துறைப் பெருங்கடலில் 29.8.93 அன்று 'டோரா' சண்டைப்படகு மூழ்கடிக்கப்பட்டபின், இந்த அச்சம் சிங்களப் படைத்துறையினரின் மத்தியில் எழுந்துள்ளது. கடற் கரும்புலிகளின் பாய்ச்சலுக்கு சிங்களக் கடற்படையின் பாரிய கப்பல்களும் உள்ளாகலாம் என்ற பயம், சிங்களக் கடற்படையையும் ஆட்கொண்டு விட்டது. அத்துடன் கடற்படையிடம் இருக்கும் ஒவ்வொரு சண்டைப்படகும் பலகோடி ரூபா பெறுமானமுள்ளது. பருத்தித்துறைக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட 'டோரா' சண்டைப்படகின் பெறுமதி 30 கோடி ரூபா என சிங்கள தேசத்துப் பத்திரிகை ஒன்று கூறியுள்ளது.

இவ்விதமாக, பெருங்கடலிலும் சிங்களக் கடற்படை தொடர்ச்சியான இழப்புக்களைச் சந்தித்து, தனது கடல் ஆதிக்கத்தை

Tamileelam Archive

இழக்குமாக இருந்தால், படைமுகாம்களுக்கான விநியோகங்களைக் கடற்படை முழு அளவில் செய்யமுடியாது போக வாய்ப்புண்டு. இந்தப் பொறுப்பை சிறிலங்காவின் வான்படையால் பிரதியீடு செய்யமுடியாது. எனவே படைமுகாம்களில் ஆட்குறைப்புச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் படைத்துறைத் தலைமைக்கு ஏற்படலாம். இதன் பொருள், ஒன்றில் படைமுகாம்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் அல்லது சிங்களப் படைகள் தாம் கைப்பற்றிவைத்திருக்கும் நிலப்பகுதியிலிருந்து கணிசமான பகுதியைவிட்டுப் பின்வாங்க வேண்டிவரும்.

'சமிந்ர பெர்னாண்டோ' என்ற சிங்கள விமர்சகர், செப். 5 'ஐலன்ட்' வார இதழில் இப்படி எழுதுகின்றார்:

"விநியோக வசதிகளுக்காகக் கடற்படையையே நம்பியிருக்கும் கரையோர இராணுவ முகாம்களை அப்புறப்படுத்தும் வகையில் அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பது தான், கடற்புலிகளின் செயற் பாடுகளின் பிரதான இலக்காக இருக்கின்றது. தொடர்ச்சியான முறையில் கடற்படைமீது அழிவுகளை ஏற்படுத்தினால் கரையோர இராணுவ முகாம்களை அகற்றுவதைத் தவிர அரசுக்கு மாற்று வழியில்லாது போகும் என புலிகளின் தலைமை நம்புகின்றது."

தமிழீழக் கடலிலே கடற்புலிகள் மேலாதிக்கம் பெற்றால் அது கரையோரச் சிங்களப் படைமுகாம்களுக்குச் சாவுமணி அடிக்கும். அதனால் கணிசமான பகுதி நிலமும் சிங்களப் படைகளிடமிருந்து விடுவிக்கப்பட்டுவிடும். அத்துடன் சிங்கள அரசு தமிழீழ மக்கள்மீது திணித்துள்ள சகலவிதமான பொருளாதாரத் தடைகளையும், - மீன்பிடி மற்றும் போக்குவரத்துத் தடைகளையும் - பிசுபிசுக்கச்செய்து விடும்.

இந்தப் பொற்காலத்தை தமிழீழ மக்களின் கைகளுக்கு விரைவாகக் கிடைக்கச்செய்யும் இலட்சியத்தோடு, கடற் கரும் புலிகளின் துணையுடன் கடற்புலிகள் அயராது பாடுபடுவர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# ஓயாத அலைகளில் எழுதிய காவியம்

அன்றொரு காலம் -

சிங்களக் கடற்படையின் படகுகளைக் கண்டால் எங்களது சாதாரணப் படகுகள் கடலில் நிற்காது; நிற்கமுடியாது.

சண்டைகளுக்கென்றே தயாரிக்கப்பட்ட நேவிப் படகுகளின் வேகத்திற்கும், அவற்றில் பொருத்தப்பட்டிருக்கின்ற சக்தி வாய்ந்த ஆயுதங்களின் தாக்குதலுக்கும் ஈடுகொடுக்க, எங்களது சாதாரண படகுகளால் முடியாது என்பதால் தூரத்தில் கண்டவுடனேயே ஓடி மறைந்துவிட வேண்டும்; வேறுவழியில்லை. எங்கள் படகுகளை அழிப்பது அவர்களின் இலக்கு என்பதுடன் கலைப்பது அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்காகவும் இருந்தது.

ஆனால், இன்று அந்த நிலை நேர்மாறாக மெல்ல மெல்ல மாறிவந்துவிட்டது.

தரையைப் போல கடலிலும் சிங்களப் படையைத் துரத்தித் தாக்கி அழிக்கலாம் எனச் சொல்லித் தந்தவனும், முதன் முதலாக மட்டுமல்ல, தொடராகவும் அதனைச் செய்து காட்டியவனும்தான் எங்கள் சாள்ஸ்.

1991 இன் இறுதியில் அது ஆரம்பித்தது.

நயினாதீவிலிலிருந்து ஊர்காவற்துறைக்குக் கடல்ரோந்து புரிகின்ற நேவிப்படகுகளை வழிமறித்துத் தாக்க சாள்ஸ் முடிவெடுத்தான்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தளபதி கங்கை அமரனின் துணையோடு - 'றெக்கி' பார்த்து, தாக்குதல் திட்டம் வகுத்து, தாக்குதல் குழுக்களை ஒழுங்கு படுத்தி, ஆயுதங்களோடு படகுகளைத் தயார்செய்து, தானே 'கொமாண்டராகி' வியூகம் அமைத்துநின்று - அந்தக் கடற்சண்டையை வழிநடாத்தினான் சாள்ஸ்.

'கனன்' பீரங்கிகளுக்கும், 'பிப்ரிகலிபருக்கும்' மிகையான கனரகத் துப்பாக்கிகளுடன், அதிவேகம் கொண்ட நேவியின் சண்டைப் படகுகளை - 'பிப்ரி', ஜி. பி எம். ஜியுடன், சாதாரண ரைபிள்களை மட்டுமே கொண்ட எங்களது மீன்பிடிப் படகுகள் துரத்தித்தாக்கின.

சிங்களக் கடற்படையைப் புலிகளின் படகுகள் கலைத்து விரட்டிய முதல் வரலாறு அது.


எதிரியின் போர்ப்படகொன்று மூழ்கடிக்கப்பட்டதுடன், எல். எம். ஜி ஒன்றும் கைப்பற்றப்பட்டபோதும் - இழப்பு ஏதுமில்லை எங்களுக்கு.

இதற்கு முன்னர், நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானிற்கும் இடையிலுள்ள கடலில் சாள்ஸ் நடத்திய ஒரு கண்ணி வெடித் தாக்குதல் குறிப்பிடத்தக்கது.

இரவு முழுவதும் ஆழக்கடலுக்குள் இறங்கி நின்று, அலைகளின் நடுவில் அவன் கண்ணிவெடியை விதைத்துவிட்டுவர - மறுநாள் காலை - அதில் சிக்கிய எதிரியின் படகொன்றை அலைகள் விழுங்கிக் கொண்டன என்பதுடன், சிங்களக் கடற்படையின் வடபிராந்தியத் தளபதி கொமடோர் அமரவீர படுகாயமடைந்தார் என்பதும் 7 படையினர் கொல்லப்பட்டதும் முக்கியமானது. உடைந்த படகையும், ஆயுதங்களையும் கடலுக்கடியில் இருந்து மீட்ட பின்னர்தான், சாள்ஸ் அடுத்த வேலைக்குப் போனான்.

1992 இன் துவக்கத்தில் தாளையடிக் கடலில், எதிரியின் 'சவட்டன்' விசைப்படகு மீது தானே கொமாண்டராக நின்று ஒரு பகற்பொழுதுத் தாக்குதலை நடாத்தினான் சாள்ஸ். எங்களது நான்கு வீரர்களை நாம் இழந்ததுடன், அவனுக்கும் காலில் காயம் ஏற்பட்ட அந்தச் சண்டை.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



**லெப். கேணல் சாள்ஸ்**

[ஆனந்தராசா-தவராஜன்]

பிறப்பு: 15.12.1960

வீரச்சாவு: 24.06.1993

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

-ஆனையிறவுக் கடல்நீரேரியில் எதிரியின் நீருந்து விசைப்பட கொன்றை மூழ்கடித்து 'பிப்ரி' உட்பட - ஆயுதங்களையும் கைப்பற்றிய கடற் கண்ணித் தாக்குதல்

-அதே நீரேரியில் எதிரியின் ரோந்துப் படகுத் தொடரைத் தாக்கிப் பல ஆயுதங்களையும் கைப்பற்றிய இன்னொரு சண்டை

-மாதகல் கடற்பிரதேசத்தில், விசைப்படகொன்றை மூழ்கடித்த மற்றொரு கண்ணிவெடித் தாக்குதல்

-பூநகரி கல்முனைக்கருகே உள்ள மான்தீவில், சிங்களப் படையின் கரையோரக் காவலரணைத் தகர்த்து, றைபிள்களோடு எதிரியின் சடலங்களையும் எடுத்து வந்த அதிரடித் தாக்குதல்-

இவ்வாறாக கடற்புலிகளின் கடற் சண்டைத்திறன் வளர்ந்த ஒவ்வொரு தாக்குதலுக்குப் பின்னாலும் இருந்த உந்து விசை அவன்.

அவனிடம் ஒப்படைக்கப்படுவது என்ன வேலையாகத்தான் இருந்தாலும், அந்த வேலையோடு தன்னையே கலந்து செய்து முடிக்கும் தன்மை அவனுடையது.

களைப்பில்லாத, சலிப்பில்லாத, ஊக்கம் நிறைந்த, உற்சாகமான மனது அவனுடையது.

வெற்றிகரமான கடற் சண்டைகளின் முன்னோடித் தளபதி மட்டுமல்ல, அவனொரு சிறந்த தொழில்நுட்பவியலாளனுமாவான்.

வேலையில்லாத வேளையில்லாதவன் அவன். ஓய்வுக்கு ஓய்வு கொடுத்திருந்த அந்த உழைப்பாளி ஓய்வு நேரங்களில் மூளைக்கு வேலை கொடுத்து எதையாவது ஆய்வு செய்து கொண்டிருப்பான்.

கைவசம் உள்ள வளங்களைக் கொண்டு புதிது புதிதாக எதையாவது கண்டுபிடிக்கவேண்டுமென்றோ, அல்லது கஸ்ரப்பட்டு சிரமத்துடன் நாம் செய்கின்ற வேலைகளை இலகுவாகவும் வேகமாகவும் செய்துமுடிக்கக்கூடிய வழிகளைப் பற்றியோ, அல்லது இப்படியான ஏதோ ஒரு விடயத்தைப் பற்றியோதான், அவனது 'ரெக்னிக்கல்' மூளை எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கும்.

Tamileelam Archive

"முயற்சி செய்து பார்த்துவிட்டோ அல்லது முயற்சி செய்து பாராமலேயோ ஏதோ ஒரு சாட்டுச் சொல்லிக் கொண்டு, 'இது சாத்தியப்படாது' என்று நாங்கள் ஒதுக்கி வைத்துவிடுகின்ற வேலைகளைத் தானாகவே பொறுப்பெடுத்து, வெற்றிகரமாகச் செய்து முடித்துவிடுவான் அந்தப் பொறியியலாளன்" என்றான், ஒரு கடற்புலித் தோழன்.

கடற் புலிகளின் தொழில்நுட்ப வளர்ச்சியும் சாள்சின் அறிவாற்றலும் ஒன்றோடொன்று இறுகப் பிணைக்கப்பட்டிருந்தன.

வோக்கி கதைக்க 'குறொஸ்' செய்யவேண்டுமென்றாலும் சரி, 'கொம்யூனிக்கேசன் செற்'றுக்கு தேவையான உதிரிப்பாகம் என்றாலும் சரி, என்னவாகத்தான் இருந்தாலும் - 'அது வேண்டும் இது வேண்டும்' என்று எதிர்பார்க்காமல், உள்ளூரில் கிடைக்கக்கூடியவற்றைக் கொண்டே செய்து முடித்துவிடுவதுதான், மற்றைய தொழில்நுட்பவியலாளர்களுக்கும் அவனுக்கும் இடையிலுள்ள வேறுபாடு.

கடற்புலி வீரர்களுக்கான படகுப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்தான் அந்தச் சிறந்த படகோட்டுனன். புயலுக்கும் சூறாவளிக்கும் இடையில், ஆர்ப்பரித்தெழும் கடல் அலைகளுக்கு நடுவில் - படகை மிக நீண்ட தூரத்திற்குச் செலுத்தக்கூடியதான பயிற்சியை அளித்து, பெண்புலிகள் உட்பட திறமையான ஓட்டிகளை சாள்ஸ் உருவாக்கித்தந்தான். இப்போது அவன் இல்லை; ஆனால், அந்தப் பட்டறை இனி எப்போதும் புதியவர்களைத் தயார் செய்து கொண்டே இருக்கும் - அவனது நினைவோடு.

சண்டை முனைகளில் நிலவும் போர்ச்சூழ்நிலைகளினால் தடங்கல்கள் ஏற்பட்டு, எமக்கு உணவு வராமல் விட்டுவிடுவது அடிக்கடி நடக்கும் ஒரு விடயம். ஆனால், சாள்சுடன் நின்று களங்களில் சமரிட்ட தோழர்கள் சாப்பாட்டுக்காக காவல் இருந்த நாட்கள் குறைவு. உடனடியாகவே அடுப்பில் சட்டியையோ வாளியையோ வைத்து எட்டியவற்றைக் கொண்டு சுவையாகக் கறி சமைத்துத் தோழர்களுக்குக் கொடுத்துவிடுவான் அந்த அட்டகாசமான சமையல்காரன். அவன் தயாரிக்கும் கோழி சூப் இயக்கத்தில் பிரபலமானது - தலைவரிடமே பாராட்டுப் பெற்றது. சாள்சின் சூப் பருகவென்று

Tamileelam Archive

நண்பர்கள் தேடிவந்த நாட்கள்கூட உண்டு. எம்மைப்பிரிவதற்குச் சிலநாட்களுக்கு முன்கூட-மூர்த்தி மாஸ்ரர் வீட்டில் கோழி சூப் விருந்து படைத்துவிட்டுத்தான் அவன் போனான். அவன் ஆக்கித் தந்த சுவைகள் அவனது நினைவைத் தந்து கொண்டே இருக்கின்றன.

தோழர்களில் அவன் கொண்டிருந்த அன்பும் பாசமும் அலாதியானது. மற்றெல்லோரையும்விட வித்தியாசமான விதத்தில் பழகுகின்ற இவன் - எல்லாப் போராளிகளாலும் கவரப்பட்டு அவர் களின் நெஞ்சங்களில் நீக்கமற நிலைத்துவிட்ட ஓர் உற்ற நண்பன்.

கிளாலியிலிருந்து வேலையாக வந்து எங்காவது நிற்கும்போது கோவில் திருவிழா பார்க்க நண்பன் அழைத்தால், "பொடியளை விட்டிட்டு வந்திட்டன்: நான் வரேல்ல" என்று போக மறுக்கும் சாள்ஸ், என்ன நிகழ்ச்சி பார்ப்பதற்கென்றாலும் - அது சரியோ தவறோ - தன்னோடு நிற்கும் போராளிகள் எல்லோரையும் அழைத்துச் செல்லாமல் ஒரு நாள்கூட போயிருக்காத உயிர்த்தோழன்.

"எந்த மாவட்டத்திற்குப் போனாலும், அங்கு நிற்கும் யாராவது ஒரு போராளி வந்து, 'சாள்ஸ் அண்ணையிட்ட சுகம் கேட்டதென்று சொல்லுங்கோ' என்பான்" என்று சொன்னார் பிருந்தன். அந்தளவுக்கு வியாபித்திருந்தது அவன் நட்பு.

தவறிழைக்கும் போராளிகளைத் தண்டிக்கும் போது அர வணைத்து, அன்பாகப் பேசிப் பிழைகளைத் தெளிவுபடுத்தும் விதம், அவனில் வேறுபட்ட ஒன்றாகவே கண்டோம்.

வகுப்பு எடுக்கும்பொழுது - பகிடியாகவும் செல்லமாகவும் கதைத்து, தான் சொல்வதை அவர்கள் மனவிருப்போடு கேட்டுப் படிக்கக்கூடியதாக விளங்கப்படுத்திக் கற்பிப்பது அவனுடைய பாணி. தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துவிடும் தன்மை அவனுடையது. கடலிலும் தரையிலும் தான் பெற்ற அனுபவங்கள், பட்ட துயரங்கள், திறமையான செயற்பாடுகள் என எல்லாவற்றையும் சொல்லிக்கொடுப்பான். "புத்தகத்தில் படித்த அறிவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை; அனுபவம் மூலம் படிக்க நிறைய இருக்கு. அனுபவம் பல தரப்பட்ட பாடங்களையும் எங்களுக்கு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கற்பிக்கின்ற வழிகாட்டி" என்று சொல்லி, தான் வளர்ந்ததைப் போலவே - பட்டறிவு மூலம் - போராளிகளை வளர்க்கும் வழிமுறை அவனுடையது.

ஒவ்வொரு கடற்சண்டையின் முடிவிலும், அந்தக் களநிகழ்ச்சிகளின் போக்குகளை ஆழமாக நோக்கி, சரி பிழைகளை ஆராய்ந்து, அந்தப் பட்டறிவுகளின் அடிப்படையில் அடுத்த சண்டையை நெறிப்படுத்துகின்ற அவன், ஓர் அனுபவசாலியான படைத் தளபதி. எப்போதும் தானே நேரடியாகக் கடலில் இறங்கி, சண்டைகளை வழி நடாத்தி, வீரர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது அவனுடைய பாணி. சிரிப்பூட்டும் பகிடிகளாலும் பம்பல்களாலும் எங்களை இன்பத்திலாழ்த்தும் அவனுடைய கதைகள், ஒரு தனித்துவமான கலாரசனை. எப்போதும் கலகலப்பாக, மகிழ்ச்சியாக பொழுதுகள் அவனோடு கழியும்.

போராட்டத்தைப்பற்றியும், இயக்கத்தைப்பற்றியும், தலைவரைப் பற்றியும் சொல்லிச் சொல்லி எங்களை எப்போதும் உற்சாகத்தோடு வைத்திருப்பான் சாள்ஸ்.

என்றுமே மறக்கமுடியாத பசுமை நினைவுகள் அவனுடையவை. இன்று எங்களோடு அவன் இல்லை - ஆனால் எல்லோருக்குள்ளும் அவன் நிறைந்திருக்கின்றான்.

சமர்முனைகளில் சண்டைகளை வழிநடாத்திக்கொண்டிருக்கும் அந்தத் தளபதி, மக்களை எங்களோடு இணைப்பதற்கு ஆற்ற வேண்டிய பணிகளைப்பற்றியும் சிந்திப்பான். ஒவ்வொரு தாக்குதலையும் தனியே இராணுவ வெற்றியாக மட்டும் வைத்துக்கொண்டிராமல், மக்களைத் தாயகப்பணிக்காக உள்வாங்கும் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றவும் அவ் வெற்றிகளைப் பயன்படுத்தினான். ஆனையிறவு கடல்நீரேரியில் பயனற்ற விதத்தில் கடலுக்குள் மூழ்கிய நீருந்து விசைப்படகைக்கூட இரவிரவாகச் சுழியோடிக் கட்டி இழுத்து வந்து, வடமராட்சியில் மக்கள் பார்வைக்கு வைத்ததும், ஊர்காவல்துறையில் கடலில் சேதப்பட்ட நேவிப்படகையும் எடுத்த எல். எம். ஜியையும் யாழ்ப்பாணக் கரையில் சனத்துக்குக் காட்டியதும் - அவனது அரசியல் சிந்தனைக்குச் சான்றுகள். புலிகளின் வெற்றிக்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

களிப்புகளை மக்களோடு பகிர்ந்துகொண்டான் அந்தக் கடற் தளபதி.

ஆனையிறவுக் கடல் நீரேரியில் சாள்ஸ் நடத்திய ஒரு தாக்குதல், மேனி சிலிர்க்க வைக்கும் கதை.

மதியத்திற்குப் பிந்திய பகற்பொழுது அது. எட்டு விசைப் படகுகளில் கடல் ரோந்து வந்துகொண்டிருந்த சிங்களக் கடற் படையின் நீருந்து விசைப்படகு ஒன்று, ஏற்கனவே சாள்ஸ் வைத்து விட்டுக் காத்துக்கொண்டிருந்த கண்ணிவெடியில் சிதறி மூழ்கியது.

திகைத்துப் போன நேவியின் ஏழு படகுகளும் அவ்விடத்தைச் சூழ்ந்துவிட - படகையும் ஆயுதங்களையும் தங்கள் ஆட்களையும் மீட்க அவர்கள் முயன்றுகொண்டிருந்தனர். பூநகரிப் பக்கமிருந்து அவசரமாக வந்த 'ஹெலி' வட்டமிட்டபடி பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்தது.

சாள்சுக்கு ஏமாற்றம். படகையும் ஆயுதங்களையும் மீட்க முன்னர் அவர்களைத் தாக்கி விரட்டத் தயாரானான் அவன். கைவசமிருந்தது ஒரே ஒரு படகு; அதிலிருந்ததும் ஒரே ஒரு கனரகத்துப்பாக்கிதான். அவர்களோ ஏழு சண்டைப்படகுகளில்; 'ஹெலி' வேறு மேலே. சமாளிக்கமுடியுமா என்று கூடி நின்றவர்கள் சிந்திக்க, இன்னும் சில புலிகளுடன் படகைக் கடலில் இறக்கினான் அந்த வீரன்.

கரையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த பிருந்தன் சொன்னான் -

"ஜி. பி. எம். ஜி ரவைகளைப் பொழிய மின்னலெனத் தங்களை நெருங்கிய தனித்த ஒரு படகைக் கண்ட நேவி அதிர்ந்து போனான். அவிழ்த்து விட்ட பட்டி மாடுகள் வரிசையாக ஓடுவது போல, நேவிப் படகுகள் ஏழும் ஓட்டமெடுக்க, மேலே நின்று சுட்டுக்கொண்டிருந்த 'ஹெலி'யாலும் சாள்சைத் தடுத்து நிறுத்த முடியவில்லை."

அன்று கடலுக்குள்ளிருந்து படகையும் ஆயுதங்களையும் மீட்டுத்தான், சாள்ஸ் வடமராட்சியில் மக்கள் பார்வைக்கு வைத்தான்.

திருகோணமலையின் கடற்கரையோரமுள்ளது திருக்கடலூர் - அந்த வீரனைப் பெற்றுத்தந்த பெருமை அதற்குத்தான் சேரும். 1960 இன் 15 ஆம் திகதி கடைசி மாதத்தில் அழுகுரலுடன் அது நடந்தது.

Tamileelam Archive

அப்பா ஆனந்தராசாவிற்கும், அம்மா விஜயதேவிக்கும் மகனாக-இரண்டு அக்காமாருக்கும் நான்கு தம்பிமாருக்கும் இடையில் பிறந்தவனுக்கு, அவர்கள் ஆசையோடு வைத்த பெயர் தவராஜன்.

கடற்தொழில் அந்தக் குடும்பத்திற்கு மட்டுமல்ல, அந்தக் கிராமத்திற்கும் சொந்தமானது.

புனித ஜோசேப் கல்லூரியில் 10 ஆம் வகுப்புவரை படித்து விட்டு அப்பாவோடு தொழிலுக்குப் போனவன், சின்ன வயதிலேயே திறமைமிக்க படகோட்டியாகத் தேர்ச்சி பெற்றான். மட்டக்களப்புத் தொழில்நுட்பக் கல்லூரியில் அவன் பாடத்திட்டம் ஒன்றைப் பூர்த்தி செய்வதற்கு இயற்கையாகவே அவனிடமிருந்த 'ரெக்னிக்கல் மூளை' துணையாக இருந்தது. தடங்கலின்றி சிங்களத்தில் உரையாடுவதோடு, ஆங்கிலத்தில் பேசும் ஆற்றலையும் சாள்ஸ் கொண்டிருந்தான்.

சிங்கள இனவாதப்புயல் எங்கள் தாய் நிலத்தில் வீசியபோது, எல்லோரையும் போலவே இந்தக் குடும்பத்தின் அமைதியான வாழ்வும் குலைந்தது.

பச்சைப் பேய்களின் பவனி. இராணுவ வண்டிகளின் வலம். சிங்களக் காடையர்களின் அட்டூழியம். திருக்கோணமலை எரிந்தது; தமிழர்கள் பிணங்களாய்க் குவிந்தார்கள். எங்கள் கடலில் அவர்கள். விடிகாலையில் கரையொதுங்கும் பிணங்கள். அந்த எரிமலை தனக்குள் குமுறும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அன்புத் தம்பி ஜெயராஜனை சிங்களத் துப்பாக்கிகள் குரூரமாகக் கொன்றபோது அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

தாயகத்திற்குச் செய்ய வேண்டிய பணி, சொந்த வாழ்வையும் தாக்கிய பேரினவாதம், அவன் இயக்கத்திற்குப் போக முடிவெடுத்தான்.

புலிகள் இயக்கத்தின் தொடர்பைத் தேடி, சந்துபொந்தெல்லாம் அலைந்து திரிந்தவனுக்கு, நீண்டகாலத்தின் பின் - 1985 இன் நடுப்பகுதியில் - அது கிடைத்தது. சந்தோசம் மாஸ்ரரைத் தேடிப் பிடித்து இயக்கத்தில் சேர்ந்தவன், திருமலையில் இரண்டாவது பயிற்சி

முகாமில் பயிற்சி எடுக்கும்போதே புலேந்தி அம்மானின் கவனத்தை ஈர்க்குமளவிற்கு ஆற்றலை வெளிப்படுத்தித் திறம்படச் செயற்பட்டான்.

திருமலைக்கான கடல்மார்க்க விநியோகத்தைச் செய்வதே அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலை. ஆனால், மிகச் சிரமமான அந்தப் பணியில் வண்டி ஓட்டிவிட்டுக் களைப்போடு வந்தாலும், ஆமிக்குச் சக்கை அடிக்க சுரேந்திரன் வெளிக்கிட்டால் தானும் சேர்ந்து போவான்.

இப்படிப் போகத் தொடங்கியவன்தான், பின்பு கண்ணிவெடி வைக்கப் போகின்றவர்கள் ஆலோசனை பெற்றுச் செல்லும் அளவிற்குச், 'சக்கையில எக்ஸ்பேட்' ஆகினான்.

திருகோணமலையில் சிங்களப்படை தனது முற்றுகையை இறுக்கிய ஒரு காலகட்டத்தை நினைவுகூர்ந்தார் பதுமன்: ''அது இக்கட்டான சூழ்நிலை; உணவுக்கே பஞ்சமான நெருக்கடி, விநியோக வழிகள் எல்லாமே தடைப்பட்டுவிட்ட அந்த நாட்களில், புலிகளின் உணவுக்கால்வாயாக இருந்தவன் சாள்ஸ்தான். நிலமெல்லாம் ஆமி, கடலெல்லாம் நேவி. சாள்ஸ் படகெடுத்துப் போவான். அடிக்கடி நேவி கலைப்பான். ஆனாலும் உணவோடு வந்து சாள்சின் வண்டி கரையைத்தொடும். 'இன்று வண்டி ஓடமுடியாது; கடலில் நேவி கூடுதலாக நிற்கிறான்' என்று வோக்கி அறிவிக்கும். அப்போதும் தோழர்களுக்கு உணவு தர வண்டியோடு கடலில் இறங்குவான் இந்த உயிர்த் தோழன்.''

ஒரு நாள்-சிங்களப்படையின் முற்றுகையொன்று; காயப்பட்ட புலி வீரர்களைக் காவிக்கொண்டு அவனது படகு புறப்படும்போது, அமைதியாக இருக்கும் கும்புறுப்பிட்டிக் கடல் திடீரென வழமைக்கு மாறாய் மாறியது. கொந்தளித்த கடல் வண்டியைக் கவிழ்க்க, அலைகளுள் தவித்து, புண்ணுக்குள் பட்ட உப்புத்தண்ணீரால் துடித்த தோழர்களைப் பாதுகாப்பாக அவன் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தது கண்ணுக்குள் நிற்கிறது.

1986 இன் இறுதி. சுற்றிவளைப்பொன்றில் காயமடைந்து

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

யாழ்ப்பாணம் வந்த பின், தமிழகத்திற்கு வண்டி ஓட்டுவது அவனுக்கு ஒப்டைக்கப்ட்ட வேலை. அந்தப் பணியின்போது அவன் நேவியிடம் கலைபடுவது மூன்றுநேர உணவைப்போல நிகழும் சம்பவம்.

அப்படியான ஒரு நாளில்-

முன் இரவு நேரம், பொருட்களோடும் போராளிகளோடும் வந்து கொண்டிருந்தது சாள்சின் படகு. திடீரென எதிர்ப்பட்ட நேவிப்படகு கலைத்துக் கலைத்துத் தாக்க, இயலுமான வரை வேகத்தைக்கூட்டி சாள்ஸ் ஓட முயல, பீரங்கிக்குண்டு பட்டு வெடித்துச்சிதறிய படகிலிருந்து அவன் தூக்கி வீசப்பட்டான். முகம்மது மாத்திரம் கண்ணுக்குத் தெரிந்தான்.

கரையை நோக்கி நீந்தத் தொடங்கினார்கள். மைல் கணக்கான தூரம். நேரம் செல்லச் செல்ல களைத்துப்போய் பின்தங்கிய முகம்மது, கண்ணுக்கு முன்னாலேயே அலைகளுக்குள் காணாமல் போய் விட்டான்.

எல்லாம் போய்விட்டது. தோழர்களை இழந்த துயர்; நடுச்சமுத்திரம்; உள்ளிளுக்கும் கடல்; தனித்த ஒருவன்; தளராத உறுதி. 17 மணி நேரம் நீந்தி, மறுநாள் மாலை வடமராட்சிக் கரையில் ஒதுங்கும்வரை, மயக்கம் தன்னை ஆட்கொள்ள அனுமதிக்கா திருந்தான் அந்த வேங்கை என்பதை, மற்றவர்கள் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. அது அவனது மன வைராக்கியத் துக்குச் சான்று.

அந்த நினைவுகளெல்லாம் 'நாங்களும் ஒரு நாளைக்கு நேவிப்படகுகளைக் கலைத்து அடிக்கவேண்டும்' என்ற வேட்கையை, அந்த வீரனுக்குள் வளர்த்துக் கொண்டிருந்திருக்கும்.

இந்தியப்படையின் ஆக்கிரமிப்புக் காலம். இப்போது அவனது பணி, மணலாற்றில் தலைவரின் நிழலில்-போர் மையம் கொண்டிருந்த முனையில்-மிக மிக இன்றியமையாத கடல்வழி விநியோகம்தான் இங்கும் அவனது வேலை. வண்டி ஓடிவிட்டு வந்து நிற்கும் போது, களைப்போடு எங்காவது படுத்திருப்பான் என்று

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முகாமில் பயிற்சி எடுக்கும்போதே புலேந்தி அம்மானின் கவனத்தை ஈர்க்குமளவிற்கு ஆற்றலை வெளிப்படுத்தித் திறம்படச் செயற்பட்டான்.

திருமலைக்கான கடல்மார்க்க விநியோகத்தைச் செய்வதே அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலை. ஆனால், மிகச் சிரமமான அந்தப் பணியில் வண்டி ஓட்டிவிட்டுக் களைப்போடு வந்தாலும், ஆமிக்குச் சக்கை அடிக்க சுரேந்திரன் வெளிக்கிட்டால் தானும் சேர்ந்து போவான்.

இப்படிப் போகத் தொடங்கியவன்தான், பின்பு கண்ணிவெடி வைக்கப் போகின்றவர்கள் ஆலோசனை பெற்றுச் செல்லும் அளவிற்குச், 'சக்கையில எக்ஸ்பேட்' ஆகினான்.

திருகோணமலையில் சிங்களப்படை தனது முற்றுகையை இறுக்கிய ஒரு காலகட்டத்தை நினைவுகூர்ந்தார் பதுமன்: "அது இக்கட்டான சூழ்நிலை; உணவுக்கே பஞ்சமான நெருக்கடி, விநியோக வழிகள் எல்லாமே தடைப்பட்டுவிட்ட அந்த நாட்களில், புலிகளின் உணவுக்கால்வாயாக இருந்தவன் சாள்ஸ்தான். நிலமெல்லாம் ஆமி, கடலெல்லாம் நேவி. சாள்ஸ் படகெடுத்துப் போவான். அடிக்கடி நேவி கலைப்பான். ஆனாலும் உணவோடு வந்து சாள்சின் வண்டி கரையைத்தொடும். 'இன்று வண்டி ஓடமுடியாது; கடலில் நேவி கூடுதலாக நிற்கிறான்' என்று வோக்கி அறிவிக்கும். அப்போதும் தோழர்களுக்கு உணவு தர வண்டியோடு கடலில் இறங்குவான் இந்த உயிர்த் தோழன்."

ஒரு நாள்-சிங்களப்படையின் முற்றுகையொன்று; காயப்பட்ட புலி வீரர்களைக் காவிக்கொண்டு அவனது படகு புறப்படும்போது, அமைதியாக இருக்கும் கும்புறுப்பிட்டிக் கடல் திடீரென வழமைக்கு மாறாய் மாறியது. கொந்தளித்த கடல் வண்டியைக் கவிழ்க்க, அலைகளுள் தவித்து, புண்ணுக்குள் பட்ட உப்புத்தண்ணீரால் துடித்த தோழர்களைப் பாதுகாப்பாக அவன் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தது கண்ணுக்குள் நிற்கிறது.

1986 இன் இறுதி. சுற்றிவளைப்பொன்றில் காயமடைந்து

Tamileelam Archive

யாழ்ப்பாணம் வந்த பின், தமிழகத்திற்கு வண்டி ஓட்டுவது அவனுக்கு ஒப்டைக்கப்ட்ட வேலை. அந்தப் பணியின்போது அவன் நேவியிடம் கலைபடுவது மூன்றுநேர உணவைப்போல நிகழும் சம்பவம்.

அப்படியான ஒரு நாளில்-

முன் இரவு நேரம், பொருட்களோடும் போராளிகளோடும் வந்து கொண்டிருந்தது சாள்சின் படகு. திடீரென எதிர்ப்பட்ட நேவிப்படகு கலைத்துக் கலைத்துத் தாக்க, இயலுமான வரை வேகத்தைக்கூட்டி சாள்ஸ் ஓட முயல, பீரங்கிக்குண்டு பட்டு வெடித்துச்சிதறிய படகிலிருந்து அவன் தூக்கி வீசப்பட்டான். முகம்மது மாத்திரம் கண்ணுக்குத் தெரிந்தான்.

கரையை நோக்கி நீந்தத் தொடங்கினார்கள். மைல் கணக்கான தூரம். நேரம் செல்லச் செல்ல களைத்துப்போய் பின்தங்கிய முகம்மது, கண்ணுக்கு முன்னாலேயே அலைகளுக்குள் காணாமல் போய் விட்டான்.

எல்லாம் போய்விட்டது. தோழர்களை இழந்த துயர்; நடுச்சமுத்திரம்; உள்ளிளுக்கும் கடல்; தனித்த ஒருவன்; தளராத உறுதி. 17 மணி நேரம் நீந்தி, மறுநாள் மாலை வடமராட்சிக் கரையில் ஒதுங்கும்வரை, மயக்கம் தன்னை ஆட்கொள்ள அனுமதிக்கா திருந்தான் அந்த வேங்கை என்பதை, மற்றவர்கள் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. அது அவனது மன வைராக்கியத் துக்குச் சான்று.

அந்த நினைவுகளெல்லாம் 'நாங்களும் ஒரு நாளைக்கு நேவிப்படகுகளைக் கலைத்து அடிக்கவேண்டும்' என்ற வேட்கையை, அந்த வீரனுக்குள் வளர்த்துக் கொண்டிருந்திருக்கும்.

இந்தியப்படையின் ஆக்கிரமிப்புக் காலம். இப்போது அவனது பணி, மணலாற்றில் தலைவரின் நிழலில்-போர் மையம் கொண்டிருந்த முனையில்-மிக மிக இன்றியமையாத கடல்வழி விநியோகம்தான் இங்கும் அவனது வேலை. வண்டி ஓடிவிட்டு வந்து நிற்கும் போது, களைப்போடு எங்காவது படுத்திருப்பான் என்று

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேடினால், போராளிகளுக்கு பாடம் சொல்லிக் கொண்டிருப்பான் அல்லது 'கொம்யூனிக்கேசன் செற்'றில் ஏதாவது செய்துகொண் டிருப்பான். எதுவுமே இல்லாவிட்டால், சமையற் கட்டில் கறிக்கு உப்புப் புளி சரிபார்த்துக்கொண்டாவது இருப்பான்.

இந்தியர்கள் வெளியேற்றப்பட்டபின் - சசிக்குமாரோடும் பிருந்தனோடும், யாழ்ப்பாணத்திலிருந்த பயிற்சி முகாம்களில் புதிய போராளிகளுக்குத் துறை சார்ந்த வகுப்புக்கள் எடுத்துக் கொண்டிருந்த சாள்ஸ்-சிங்களப்படையுடன் மீண்டும் போர் தொடங்கிய பின் அவன் கடற் புலிகள் பிரிவோடு இணைக்கப்பட்டான்.

சாள்சின் எல்லாத் திறமைகளும், அனைத்து அம்சங்களும் முழுமையாக வெளிப்பட்ட காலம் அது

'விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்' புதிய பரிமாணம் பெற்ற போது, தளபதி சூசையின் உற்ற தோழனாக நின்று, கடற்புலிகளின் வளர்ச்சிக்காக ஓய்வில்லாமல் அவன் உழைத்தான்.

சாள்ஸ் ஒரு கடற்காவியம்!

''விடுதலைப்புலிகளின் வரலாற்றில் கடற்புலிகள் முக்கியமான ஓர் அத்தியாயம்'' என்று தலைவர் அவர்கள் சொல்கின்றார். ''கடற்புலிகளின் வளர்ச்சியில் சாள்ஸ் ஒரு பிரதான உந்துவிசை'' என்கிறார் தளபதி சூசை.

சாள்ஸ்!

ஒரு சிறந்த மனிதனாக, தேசப்பற்றும் உறுதியும் மிக்க போராளி யாக, நட்புக் கொள்கிறவர்களுக்கு இனிய நண்பனாக, எதிரி அதிர சண்டைகளை வழிநடத்தும் தளபதியாக, புதியனவற்றைப் படைக்க முயலும் ஒரு தொழில்நுட்ப நிபுணனாக, போராளிகளுக்கு அறிவூட்டவிழையும் ஆசானாக, அலைகளைத் தோற்கடிக்கும் படகோட்டியாக, அட்டகாசமான சமையல்காரனாக, மக்களுக்குப் பணிசெய்து நிற்கும் சமூகப்பற்றாளனாக... இன்னும் இன்னும்... எல்லாவற்றுக்கும் பொருத்தமானவன் அந்த விடுதலைப்புலி.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

சின்னக்குழந்தையாகத் தவழும் கடற்புலிகளை, பெரும்படை அமைப்பாகக் கட்டி எழுப்பும் கனவுகளோடு வாழ்ந்தானே அந்த வீரன்! தன்னையே உருக்கி அதன் அடி வேரில் பாய்ச்சியல்லவா அதனை நெடிதுயரச் செய்து கொண்டிருந்தான். ஏன் திடீரென எங்களை விட்டுப் போனான்?

கண்ணுக்குள் சுழல்கிறது அந்த நிலவு முகம். இறுதி நாட்களில் கிளாலிக் கடலில், எதிரிக்கு முன்னால் அது செஞ்சூரியனாய்ச் சுட்டெரித்தது.

24-6-1993. அன்றிரவு-

20 மைல் நீளப் பெருங்கடல். படகோட்டம் தொடங்கி விட்டது.

ஏக்க விழிகளோடு படகுகளில் மக்கள். தமிழரின் பிணந்தின்னக் காத்திருக்கும் சிங்களச் சுறாக்கள். மக்களைக் காக்கும் பணியில் அவர்களின் குழந்தைகள். அவர்களை வழிநடாத்தியபடி களத்தில் சாள்ஸ்.

ரவைகளைப் பொழிந்தபடி விரைந்து வருகின்றன எதிரியின் படகுகள். நேருக்கு நேர் எதிர்கொள்கின்றன புலிகளின் படகுகள். 'பிப்ரியும்', எல். எம். ஜியும் தணல் கக்கிய ஒரு படகில் சாள்ஸ். இருள் வானைக் கிழித்தன ஒளிக்கோடுகள். அதிர்ந்துபோனான் எதிரி!

எதிர்பாராத கணம்! திடிரென எல். எம். ஜி. இயங்க மறுத்தது. அது கைவிட்டுவிட்டது. சாள்ஸ்சின் கையிலிருந்து முழங்கிய பிப்ரியை மட்டும் நம்பி எதிரியை 'நெத்திமுட்ட' நெருங்கியது படகு! இடைவெளி நன்றாகக் குறுகிவிட்ட நிலையில் இன்னொரு எதிர்பாராத கணம். பிப்பிரியும் இயங்க மறுத்துவிட்டது. சாள்ஸ் திரும்பத் திரும்பக் 'கொக்' பண்ணி 'கொக்' பண்ணி அடிக்கவும், அது பிசகிக் கொண்டேயிருந்தது. எதுவுமே செய்யமுடியாத சூழ்நிலையில் படகை பக்கவாட்டகத் திருப்பி எடுக்கமுயல, நேவியோடு போராடப் 'பிப்ரி'யோடு போராடிக் கொண்டிருந்த சாள்சின் உடலைத் துழைத்துச் சென்றன ரவைகள். உடனடியாகக் கரையை நோக்கித் திருப்பப்பட்டது படகு.

இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. நீளக்கடல், ஓட ஓடக்

Tamileelam Archive

கடலும் நீண்டு கொண்டேயிருக்க, இரத்தப் பெருக்கு அதிகமாகிக் கொண்டே போனது. சண்டையின் துவக்கத்திலேயே நாங்கள் மகானை இழந்துவிட்டோம். படகு கரையைத் தொடும்போது எங்கள் சாள்சும் எங்களை விட்டுப்போய்விட்டான்.

மக்களின் படகுகள் பாதுகாப்பாக மறுகரையை அடைந்து கொண்டிருந்தன.

ஓ... சாள்ஸ்! எங்களின் கடற் போர்த் தளபதியே! உனது நினைவுகளையும் கனவுகளையும் எங்களோடு விட்டுச்சென்று விட்டாய். நீ சுமந்த இலட்சியத்தை நாங்களும் சுமக்கின்றோம். அதை அடையும்வரை நாங்கள் ஓயமாட்டோம்! உன்னைப் போலவும்- கடலின் அலையைப் போலவும்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கடலில் கலந்த கவிதை: டேவிட்

தமிழீழத்தின் திசைகளில் மோதும் காற்றில் கலந்து விட்ட தென்றல்.

விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்களையும் தன்காலத்திலேயே நேரடியாகக் கண்ட மிகச் சில போராளிகளில் ஒருவன்.

தமிழீழத்தின் விடுதலைப் போராட்டம் எல்லாக் காலங்களிலும் கடல் பிரயாணங்களை முதன்மைப்படுத்துவதாகவே அமைந்தது. எத்திசையும் கடலால் சூழப்பட்ட எம் தாயகத்தின் தாக்கமுள்ள நகர்வுகள் கடல் மூலமே மேற்கொள்ளப்பட்டன. எமது விடுதலைப் போராட்டத்தில் கடற் பயணங்கள் பிடித்திருந்த இடத்தின் அதே அளவு இடத்தை எமது கடற் சரித்திரத்தில் டேவிட் பிடித்திருந்தான்.

அவனது இளமையிலேயே கடல் அவனை அழைத்தது. அவனது குடும்ப நிலை அவனைக் கடலுக்கு அனுப்பியது.

'இயக்கம் கடலிலும் பிரயாணம் செய்யவேண்டிவரும்' என்ற காலம் போய், 'இயக்கத்தின் பிரயாணம் கடலில்தான்' என்று வந்துவிட்ட 83-இல், இயக்கத்திற்காய் கடலில் இறங்கினான்.

தமிழீழத்தின் ஒவ்வொரு கரையிலும் கால் பதித்தான். நீண்ட பெரும் கடற்பரப்பு, கடற்பரப்பில் புள்ளியாய் நகரும் படகு, படகினைப் போல் பல மடங்கு விரிந்து, எழுந்து, விழுங்க வரும் அலைகள். சமுத்திர ராட்சதனின் அலைவாய் மூடமுதல், விரைந்து, தத்திப் பாய்ந்து வெளியேறி, திரும்பிப்பார்க்கும் லாவகம். திரும்பியபார்வை நேரே நோக்க அடுத்த பெரும் அலை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

படகினை பல்மடங்கு வேகத்துடன் துரத்தி தீ உமிழும் பீரங்கிவாய்கள். அவற்றின் பன்முக நகர்வுகளிலும் தப்பித் தத்திச் செல்லும் வேகம், பின்னால் வரும் எதிரியின் கை அதிகமாய் நெருங்கின், நின்று நிதானித்து இயந்திரத் துப்பாக்கியை இயக்க ஆணையிடும் உறுதி, அந்தக் கணத்தில் எதிரி அடையும் அதிர்ச்சி டேவிட்டை பல தடவைகள் கரை சேர்த்துள்ளது.

அவனது கடற்பயணங்கள் மெய்சிலிர்க்கும் பல அனுபவங்களைக் கொண்டது. அவனது ஆசான்களும் நல்ல நண்பர்களும் கடலிலேயே கலந்து விட்டனர். அப்போதெல்லாம் கூட, அவன் கடலில் நிலைத்து நின்றான். அவனது தப்பியோடும் லாவகமும், தேவையின் போது எதிர்த்து நின்று எதிர்கொள்ளும் நெஞ்சுறுதியுமே அவனை நிற்கவைத்தன.

இன்று இயக்கத்தின் வசமுள்ள பெருமளவு ஆயுதங்களுக்கு டேவிட்டைத் தெரியும்.

ஆம்!, அவை எமது கைகளுக்குக் கிடைப்பதற்கு இடையில் டேவிட் இருந்திருப்பான்.

அநேகமாக எப்போதுமே நாம் கரையில் காணும் டேவிட்டைக் சடலில் சந்திக்க முடியாது. ஒருங்கிணைந்த சிந்தனையுடன் தன்னை நம்பி படகில் ஏறிய 'நீந்தத் தெரியாத சுமைகளுக்கு' உத்தரவிடும் டேவிட், கடுமையான வசைகளால் ஓட்டிமாரைக் கட்டுப்படுத்தும் மாலுமி. கடலில் டேவிட்டை, டேவிட்டாகப் பார்ப்பது கடினம்.

எப்போதாவது மிக அபூர்வமாக, சீரான, நேவியில்லாத, ஒதுக்குப்புறக் கடலில், நல்ல நிலவும் சேர்ந்தால் அவனது படகு நிற்கும். இயந்திரச் சத்தத்தை மேவி அவன் குரல் ஒலிக்கும். "கடல் மேல் பிறக்க வைத்தான்..." அவனது குரல் இனிய சங்கீதம் இல்லைத் தான், ஆனாலும் அவன் பாடினால், நின்று நிதானித்துக்கேட்க வைக்கும் வசீகரம். அந்த வசீகரம் அவனது குரலுக்கா அல்லது அவன் பாடும் பாடல்களுக்கா?

அவனது குரலில் பாடல் கம்பீரம் பெறுவது தெரியும். அந்தக்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



# லெப். கேணல் டேவிற்

[கிறிஸ்தோபர் அன்ரன் மரியதாஸ்]

பிறப்பு: 22.12.1966

வீரச்சாவு: 09.06.1991

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

குரலுக்கு அவன் தெரிவு செய்யும் பாடல்களை விட வேறு பாடல் எடுபடாதென்பதும் புரியும்.

அவனைத் தெரிந்த, அவனுடன் பழகாத எல்லோராலும் கூறப்படும், எண்ணப்படும் எண்ண வடிவங்களுக்கு அப்பாற்பட்ட போராளி. அநேக போராளிகளைப் போல் அவனுக்கும் 'பழஞ்சோறு குழைத்துக் கொடுக்கும் அம்மா; ஆமியின் வெடி கேட்டும் சிறுபற்றை சரசரக்காமல் தேத்தண்ணிச் செம்புடன் அண்ணனை, அண்ணனின் தோழர்களைத் தேடும் தங்கைகள்' வீட்டின் நிலையை எண்ணுவதா, நாடா என்ற கேள்விக்கு எப்போதுமே குழப்பமில்லாத பதிலைத் தன்வசம் வைத்திருந்த போராளி. மிக நெருக்கமான நண்பர்களிடம் மட்டும் "தங்கச்சியவை" என்று கூறிக் கண்கலங்கும் அண்ணன்.

எப்பேர்ப்பட்ட வேலையாக இருந்தாலும் அவ் வேலையின் முக்கியத்துவம் விளங்கவைக்கப்பட்டால், அந்த வேலையைச் செய்து முடிக்கும்வரை அவன் ஓய்வது அபூர்வம். அவனது நினைவுகள் மீட்டப்படும் போது திரும்பத்திரும்ப அவனது அக் குணநலனே எவருக்கும் முன் நிற்கும்.

தமிழீழத்தின் கடற்பரப்பில் மட்டுமல்ல, தமிழீழத்தின் தரைப்போர் வாழ்க்கையிலும் அவன் சாதித்தவை அதிகம். அதிலும் வடமராட்சியில் நடைபெற்ற அநேகமான சண்டைகளில் அவனது சுவடுகள் பதிந்திருந்தன.

இந்திய இராணுவத்திற்கு முந்தைய போர்வாழ்வில், 'ஒப்பிறேசன் லிபறேசனுக்கு' முன்பும் பின்பும் வடமராட்சியில் அவன் பங்கு அதிகம். ஒப்பிறேசன் லிபறேசனுக்கென ஆமி புறப்பட்டதிலிருந்து, நெல்லியடி முகாமுக்குள் மில்லர் புகுந்தது வரை அவன் ஓயவில்லை.

இந்திய இராணுவ யுத்தம் ஆரம்பித்த காலத்தில் தமிழ் நாட்டில் தங்கியிருந்தவன் யுத்தம் ஆரம்பித்துக் கொழுந்து விட்ட நேரத்தில் தள்ளியிருக்க முடியாமல் ஒரு கட்டுமரத்தில் வந்து சேர்ந்தான். இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் வடமராட்சியில் இயக்கத்தை உயிர்த் துடிப்புடன் வைத்திருந்ததில் அவன் பங்கு மிகப் பெரியது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அநேகமாக இயக்கத்தின் எல்லாத் துறைகளிலும் தனது முத்திரை பதித்தவன். அரசியல்? அவன் அரசியல் வித்தகன் இல்லைத்தான் எனினும், தான் ஏந்திய துப்பாக்கி எதற்காக என்பதில் குழப்ப மில்லாதவன். மக்களுடன் பழகும் போதினில் அந்த மக்களில் ஒருவனாக நின்று சிந்திக்கத் தெரிந்தவன்.

எல்லாத் தலைமறைவுக் கால வாழ்க்கையிலும் மக்களால் பாதுகாக்கப்பட்டவன். டேவிட் நின்றால் ஆமி பார்த்துச் சொல் வதற்கென ஒரு முதியோர் படையே திரளும்.

அவன் உலவும் ஊர்களில் சிறுகுழந்தைக்கும் அறிமுகமாகிவிடும் முகராசி. சிறுவர்களை ஒருதடவை சந்தித்தால் மறுதடவை சந்திக்கும் போது அவர்களைப் பெயர் சொல்லி அழைக்கும் நட்புணர்வு; அல்லது அவர்கள் வெட்கத்தில் முகம் சிவக்க இவன் ஒரு பெயர் வைத் திருப்பான். சிறுவர்கள் என்றல்ல; எவருடனுமே நட்பைப் பேணுவதில் தனித்துவமானவன். பழைய நண்பர்களை மீண்டும் சந்திப்பதில் தனியான ஆர்வமுள்ளவன்.

எப்போதோ ஒரு முறை 'வண்டி விட்ட கரையில்' லாம்பு வெளிச்சத்தில் சாப்பாடு கொடுத்த அவரை யாழ்ப்பாணத்தில் கண்டு, "என்னைத் தெரியேல்லையே? களுவன்கேணியில் றால் கறியோடை புட்டுச் சாப்பிட்டனாங்கள் எல்லே!" என்று கேட்டு அசத்துவான்.

பழைய நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்தால் மறந்துவிட்ட, திரும்பக்கிடைக்காத நினைவுகளை மீட்டுவது டேவிட்தான். இவனது நட்பைப் பேணும் பண்பால் பலராலும் விரும்பப்பட்டவன். சில வேளைகளில் வேலை நேரங்களிலும் 'நட்பைப் பேணப்போய்' வாங்கிக்கட்டிக்கொண்டு தலையைச் சொறிவான்.

இயக்கம் மிக அரிதாகச் சந்தித்த, எல்லா வேலைகளிலும் வல்லுனர்களாக விளங்கக்கூடிய சிலரில் டேவிட்டும் ஒருவன். ஆனால் கடல் என்பது 'பெரிய கடலாக' இருந்தது. அதில் இயக்கத்தின் கடற்பிரிவு மிகச் சிறியதாக இருந்ததால் அவனால் கடலை விட்டுவிட்டு வரமுடியவில்லை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவனது குறைந்த பாடசாலைக் கல்வியின் போதும் கூட பெரிய திட்டமிடல் திறன் இருந்தது. அது புரிந்தவர்கள் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

அவனது எதிர்பார்ப்புகளுக்கெல்லாம் அவனுக்குக் களம் கிடைக்கவில்லை. கடல் அவனை மறித்து வைத்திருந்தது.

ஒரு மிக முக்கிய கடற்பயணம். தேவை பெரியது. டேவிட் தேவையான ஒழுங்குகளை வழமைபோல் சரிபார்க்கிறான். கடல் தெரிந்தவர்கள் கடலில் ஓடத் தயங்கும் காலநிலை. ஆனாலும், பிரயாணம் அவசியமானதாகவும் ஒத்திவைக்க முடியாததாகவும் இருந்தது.

கடலைத் தவிர எல்லாமே வழமைபோலத்தான். வழமையான தடபுடல், வேகமான பிக்கப்..., பெரிய நம்பிக்கை விதையை நெஞ்சில் விதைத்துவிட்டு டேவிட் ஆயத்தமாகிறான். வழமையாக ஓடித்திரியும் நேவியையும் காணவில்லை. எல்லாமே நம்பிக்கையுடன் இருக்கிறது. வண்டி புறப்படும் - அதுவும் வண்டியுடன் டேவிட் நேரில் புறப்படும் - காரணம் சொல்லப்படாவிட்டாலும், வழமைபோலவே ஊகித்துக்கொண்டு டேவிட்டை அன்புடன் வளர்த்துப் பாதுகாத்த மக்கள் வழியனுப்புகிறார்கள். அவனுடன் மிக அன்பாகப் பழகியவர்களில் நல்லாய்க் கடல் தெரிந்தவர்கள் அன்று கரைக்கு வரவில்லை.

படகு நீரில் இறங்குகிறது. குழந்தைப் பிள்ளையை கையிலே பிடித்துக் கூட்டிச் செல்லும் வாஞ்சையுடன் இரு கரையிலும் ஆட்கள் வரிசையாய் நின்று படகினை கடலுள் இழுத்துச் செல்கிறார்கள். இடுப்பளவு தண்ணீரில் இறங்கிய பின்னர் அணியத்தில் நின்ற அரி தடியால் ஊன்ற படகு தள்ளாடி நகர, அண்ணாந்து நின்ற என்ஜின்வால்கள் தண்ணீரில் குளிக்க; எல்லாம் வழமைபோலவே.

'நல்லாய் சேவிஸ் போட்ட என்ஜின் ஒரு இழுவையில் ஸ்ராட் வர', இருட்டில் நின்ற தோழர்களும் மக்களும் வண்டியில் நிற்பவர்களுக்கு 'தெரியாது என்று தெரிந்தும்' கையை உயர்த்தி மெல்ல அசைக்கிறார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

வண்டியில் நின்றவர்களும் கையசைத்திருப்பார்கள்...?

ஒரு என்ஜினில் கொஞ்சத்தூரம் ஓடிப்போய் நின்று தயாராகையில், 'துணியில் பொத்தி ரோச்லைட் அடிப்பது' தெரிகிறது.

"அல்பா, அல்பா..., என்னமாதிரி?"

"பிரச்சினையில்லை, குதிரைக்குச் சாப்பாடு கொடுக்கினம்..."

கரிகாலனின் பதில் வோக்கியில் கேட்கிறது.

பின் ஒவ்வொரு என்ஜினாக சத்தமிட படகு நகராமலே என்ஜின் சத்தம் அதிகரித்து, குறைந்து, மிக அதிகரித்து, தணிவது கேட்கிறது.

படகு வழமைபோல் வலப்புறமாய் வட்டமிட்டு நிழலாய் நகர்கிறது-எப்போதும் போல். 'தேவையும் கடலும் தவிர' மற்ற எல்லாம் வழமைபோல்.

நீரைக்கிழித்து, வெண்நுரை கிளம்ப அலையில் எழும்பிப் பாய்ந்து... படகு புறப்பட்டு விட்டது. அதிகரித்த சத்தமும் கரையில் கூடிய கூட்டமும் சிறிது சிறிதாய் மறைய, கடல் தெரியாதவர்களின் திருப்திப் பெருமூச்சுடன் கடலைத் தெரிந்தவர்களின் கனத்த பெருமூச்சு கலந்தபோது வண்டி வெளிக்கிட்டு விட்டது.

என்ஜின் சத்தம் கரைவதற்கு முன்னரே, கரையிலுள்ள வோக்கி "அல்பா... அல்பா..." என அழைத்தது.

"தண்ணியடிக்குதுதானே... வோக்கியை அது தான் 'லொக் ரீயூப்பிலை' வைத்திட்டினம் போல" எனக் கூறிவிட்டு, முயற்சியைக் கைவிடும்போது கூட என்ஜின் சத்தம் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது.

நேரம் கரைய, முகாமுக்குத் திரும்ப நினைக்கும் வேளையில் தூரத்து முகாம் வோக்கியில் ஒரு அவசர அழைப்பு: "வோக்கியில் அல்பா தொடர்பெடுத்தது..."

"என்னவாம்?"

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

''கிளியரில்லை, சரியாக விளங்கேல்லை, பிறபோ... பிறபோ... என்று அவையள் கூப்பிட்டமாதிரியிருந்தது...''

''சொல்லு...''

''போட் வெடிச்சிட்டுது, வண்டி அனுப்புங்கோ' எண்ட மாதிரிக் கிடந்தது. அவையளின்ரை கிளியரில்லை, ஒண்டும் விளங்கேல்லை...''

''ஆர் கதைச்சது...''

''டேவிட் அண்ணை மாதிரித்தான் கிடந்தது, ஒண்டும் விளங்கேல்லை...''

அடுத்த படகினை ஆயத்தம் செய்த வேளை... என்ஜின் எடுக்க 'பிக்கப்' விரைந்த வேளை... உறுதியற்ற வோக்கிச் செய்தியை நம்புவதா இல்லையா என்று யோசித்த வேளை... நேரம் நகர்ந்து கொண்டிருந்தது... அலை விரித்துக் கொண்டிருந்தது...

சன்னதம் கொண்டு நின்றது கடல். தேடப்போகும் படகினைத் தேடப்போகவென மற்றப்படகினைத் தயாராக்க வைக்கும் கடல்!

நேரம் செல்லச் செல்ல 'வோக்கிச் செய்தி பிரமையோ?' என நினைக்கவைக்கும் வெறுமையுடன் காத்திருக்கும் வேளையில், தேடப்போன படகின் வோக்கி அழைக்கிறது.

''அரியைக் கண்டிட்டம், தூரத்தில் இன்னுமொரு ஆள் தெரியுது...''

''என்னமாதிரி... என்னமாதிரி'' என்ற வோக்கிக்குப் பதில் சொல்லாமல் தேடும் படகு கரை நோக்கி வர, படகில் அரியுடன் ரட்ணா.

''என்ன நடந்தது?''

''போட் பிரிஞ்சுட்டுது, நடுவாலை முறிஞ்சு அணியம் தனிய, கடயால் தனிய, ரெண்டாப்போச்சுது.''

''மற்றாக்கள் என்ன மாதிரி? டேவிட் அண்ணை என்ன மாதிரி?''

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

"இருட்டுக்கை எல்லாரையும் கூப்பிட்டு டேவிட் அண்ணை ஒண்டாக்கினவர், எல்லாரையும் நீந்தச் சொல்லிப் போட்டு, அவர் கரிகாலனைக் கூப்பிட்டுத் தன்னட்டை எடுத்தவர்."

முழுவிடயங்களையும் சொல்ல முடியாமல் அரியும் ரட்ணாவும் மயங்கி விட்டார்கள். மீட்கப்பட்ட இருவரும் உப்பு நீரால் உதடுகள் வெடித்து, முகம் புண்ணாகிக் கோலம் கெட்டுப்போய் இருந்தார்கள்.

படகுகள் போயின... வந்தன... செய்தி கேள்விப்பட்ட சனமெல்லாம் கரைமுழுக்க கூடி நின்று தேடினர். படகுகளின் தேடுதலுக்கு மேலாக டேவிட்டின் திறமையில் எல்லோரும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

"முதலும் இரண்டு நாள் கடலுக்கை கிடந்து வந்து சேர்ந்தவன் தானே!"

"மன்னாரிலை ஒருக்கா இரண்டு பொம்பிளைப் பிள்ளையளைத் தனியக்கொண்டு வந்து சேர்த்தவனெல்லே!" டேவிட்டின் நீச்சல் திறமையில் எல்லோருக்கும் நம்பிக்கை இருந்தது.

"உந்த மட்டுமட்டு நீச்சல் பெடியள் வந்து சேந்திட்டாங்களாம், டேவிட் ஏன் வரமாட்டான்?"

எல்லோரும் நம்பிக்கையுடன் காத்திருந்த போதும், அரி வைத்தியசாலையில் கூறிக்கொண்டிருந்தான்: "எங்களை நீந்தச் சொல்லிப் போட்டு அவர் கரிகாலனைத்தான் இழுத்துக் கொண்டு நிண்டவர்". படகில் சென்றவர்களில் கடலுடன் கொஞ்சமும் பரிச்சயம் இல்லாத, நீச்சல் தெரியாதவன் கரிகாலன் மட்டும் தான்.

எல்லோரும் நம்பிக்கையுடன் இருந்த போதும், அரியையும் ரட்ணாவையும் தவிர வேறு எவரும் வரவில்லை...

கரிகாலன் வரவில்லை...

டேவிட்டும் வரவில்லை...

-பொட்டு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# குடாநாட்டு முற்றுகையை முறியடித்த கடற்புலிகளின் கடலாதிக்கம்

இரண்டாவது கட்ட ஈழப்போரின் பிரதான இராணுவ கேந்திர இலக்கு (strategic objective) யாழ்ப்பாணக் குடாநாட்டு முற்றுகை யாகும். இந்த இலக்கு வெற்றிகண்டால் விடுதலைப் புலிகளின் அசைவியக்க ஆற்றலைத் (mobility) துண்டித்து, புலிப்படை வீரர்களை குடாநாட்டுக்குள் முடக்கி, போரைத் தனக்குச் சாதகமான முறையில் நகர்த்திச் செல்லலாமெனச் சிங்கள இராணுவத் தலைமை திட்டம் தீட்டியது.

ஆனையிறவுச் சமரைத் தொடர்ந்து இந்தத் திட்டம் செயல் வடிவம் பெறத் தொடங்கியது. வெற்றிலைக்கேணி இராணுவமுகாம் விஸ்தரிக்கப்பட்டது. வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுத் தளம் வரை, கிட்டத்தட்ட எட்டு மைல் தூரத்திற்கு நீண்டதொரு இராணுவவேலி அமைக்கப்பட்டது. பலகோடி செலவில், பல ஆயிரம் இராணுவத்தினரைக் குடியமர்த்தி, பிரமாண்டமான இராணுவ முற்றுகை வலயம் நிறுவப்பட்டது. இதன் உடனடி விளைவாக ஊரியான் பாதைக்கு மூடுவிழா நடந்தது.

இது ஒருபுறமிருக்க, சிங்கள இராணுவம் பூநகரிப் பிரதேசத்தை ஆக்கிரமித்து சங்குப்பிட்டி-கேரதீவு பாதையை மூடியது. நாகதேவன் துறையிலிருந்து கல்முனைவரை கிட்டத்தட்ட பத்துமைல் வரை இன்னுமொரு இராணுவவேலி நிறுவப்பட்டது. அத்துடன் நீரேரிப் பிரதேசத்தில் போக்குவரத்தை முறியடிப்பதற்காக, நாகதேவன் துறையில் ஒரு சிறிய கடற்படைத் தளமும் அமைக்கப்பட்டது. கடற் பரப்பு நகர்வுகளைக் கண்காணிக்க 'ராடர்' நிலையமும் பீரங்கித் தளமும் நிறுவப்பட்டதுடன், கடல் ரோந்திற்காக பல நீருந்து விசைப் படகுகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

யாழ்ப்பாணத்தின் கழுத்தைச் சுற்றி முள்வேலி இறுக்கப்பட்டது. முற்றுகை வலயம் முழுமைபெற்றுவிட்டதாக இராணுவத் தலைமை எண்ணிக் கொண்டது. வெற்றிலைக்கேணியிலிருந்து கல்முனை வரை யாழ்ப்பாணத்திற்கு விலங்கிடப்பட்டுவிட்டதாக சிங்களப் பேரின வாதம் திமிர் கொண்டது. இந்த நீண்ட, நெடுந்துார முற்றுகையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட துருப்புக்கள் முடக்கப்பட்டன. போராளிகளின் நடமாட்டமும் பொதுமக்களின் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுவிடுமென கொழும்பு எதிர்பார்த்தது. போருக்கு ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் கேந்திர நுட்பம் வாய்ந்த ஒரு பாரிய திட்டத்தைச் செயற்படுத்திவிட்டதாக, முப்படைத் தலைமையகம் திருப்தி கொண்டது.

ஆனால் நடந்ததோ வேறு. முற்றுகை முறியடிக்கப்பட்டது. கிளாலிக் கடற்பரப்பில் புலிகள் இயக்கம் புதிய பாதையைத் திறந்து விட்டது.

கிளாலிக் கடலில் கடற்புலிகள் தமது கடலாதிக்கத்தை நிலை நாட்டினர்.

வரலாற்றில் முதல் தடவையாக, தமிழீழ விடுதலைப் போரில் எமது கடற் பிரதேசத்தின் ஒரு பகுதியில் -அதுவும் கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த யாழ் கடல் நீரேரியில்- கடற்புலிகளின் மேலாதிக்கம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது? புலிகளின் போராட்டப் படிநிலை வளர்ச்சிப் போக்கில் ஒரு முக்கிய வரலாற்றுத் திருப்பமான இந்த நிகழ்வு எப்படி இடம்பெற்றது?

நீண்ட கடற்பரப்பும் நீரிணையும் நீரேரிகளும் கொண்ட எமது பிரத்தியேகமான பூகோள சூழலில் கடலாதிக்கத்தின் முக்கியத் துவத்தை தலைவர் பிரபாகரன் நன்கு உணர்ந்திருந்தார். போராட்டம் முதிர்ச்சிபெற்று இறுதிக்கட்டத்தை நெருங்கும் பொழுது யுத்தத்தின் போக்கை நிர்ணயிப்பது கடலாதிக்கப் போர் என்பதையும் அவர் அறிந்திருந்தார். இந்த மதிநுட்பமான துாரநோக்குப் பார்வையின் பெறுபேறாக கடற்புலி அமைப்பு உருவாக்கம் பெற்றது; போராட்ட

Tamileelam Archive

நிர்ப்பந்தங்களுக்கு ஏற்ப துரித வளர்ச்சியும் கண்டது; கடற்போர்க் கலையில் அனுபவமும் பெற்றது. தரை யுத்தங்களின் வேகம் தணிந்துபோக, குடாநாட்டு முற்றுகை இறுக, கிளாலிக் கடற்பரப்பு போர்க்களமாக மாறியது. வரலாற்றுச் சிறப்பு மிக்க யுத்த காண்டம் தொடங்கியது.

கடந்த 10 மாதங்களாக தமிழீழப் போர் கிளாலிக் கடலில் மையம் கொண்டிருக்கிறது. அங்கு உக்கிரமான கடற்சண்டை நிகழ்ந்து வருகின்றது. 5 கடல் மைல் அகலமும் 15 கடல் மைல் நீளமும் கொண்ட விரிந்த கடற்பரப்பில் சிங்களக் கடற்படையும் தமிழ்க் கடற்படையும் மாறிமாறித் தொடர்ச்சியாக மோதி வருகின்றன. இரவில் வாண வேடிக்கை போன்று நடைபெறும் இந்தக் கடற்சமர்களை எமது மக்கள் கண்டுகளிப்பதும் உண்டு.

கிளாலிக் கடற் சண்டைகளில் கணிசமான இழப்பு ஏற்பட்டிருக் கிறது. இரண்டு மிக நவீனமான நீருந்து விசைப்படகுகள் கடற் புலிகளால் நாசமாக்கப்பட்டுள்ளன. 25 அடி நீளமான ரோந்துப் படகு ஒன்றும் அழிக்கப்பட்டிருக்கிறது. கடற்படையிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. கடற்படையினருக்கு பலத்த உயிர்ச்சேதமும் ஏற்பட்டிருக்கிறது. உயிர்ச்சேத விபரத்தைக் கடற்படைத் தலைமையகம் வெளியிட மறுத்துவருகிறது -கடற்படை யினரின் மனவுறுதி தளர்ந்துவிடும் என்ற அச்சத்தினாலோ தெரிய வில்லை.

இந்த இழப்புகளால் கடற்படை ஆட்டம் கண்டிருக்கிறது. இதனால் கடற்புலிகளுடன் நேரடி மோதலைத் தவிர்த்துக் கொள் வதிலேயே கடற்படையினர் தீவிர அக்கறை காட்டி வருகின்றனர்.

"கடற் சண்டை பெரும்பாலும் 10 அல்லது 15 நிமிடங்கள் வரைதான் நீடிக்கும். அதுவும் தூரத்தில் நின்றுதான் சண்டை பிடிப் பார்கள். எமது சண்டைப் படகுகள் நெருங்கியதும் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓட்டம் பிடிக்கிறார்கள். நாங்கள் கலைத்து அடிப்பதும் அவர்கள் ஓடுவதுமாகவே கடற் சண்டை இடம் பெறுவது வழக்கம்" என்று பெருமிதத்துடன் கூறினான் ஒரு கடற்புலி வீரன்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

''கடற்புலிகள் எந்த ஆபத்தையும் பொருட்படுத்தாது துணிந்து முன்னோக்கி எம்மை நெருங்கி வருகிறார்கள். இது எமக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது.'' இவ்வாறு சமீபத்தில் ஒரு கடற்படை அதிகாரி கூறியிருப்பது கடற்புலிகளின் அபாரமான துணிவை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது.

''மக்களின் பாதுகாப்பு அரணாகவே நாம் கிளாலிக் கடற்பரப்பில் செயற்படுகிறோம். எதிரியின் பிரதான நோக்கம் மக்களைத் தாக்கி அழிப்பதுதான். மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுதான் எமது முக்கிய நோக்கம். மக்களின் பயணப் படகுகளுக்கும் எதிரியின் கொலைப் படகுகளுக்கும் மத்தியில் நாம் நடுவே நின்று போராடுகிறோம். இந்தக் கடற்போரில் நாமும் இழப்புக்களைச் சந்திக்கிறோம். எமது போராளிகள் தமது உயிரைப் பணயம் வைத்தே மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்கள்'' என்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை கூறினார்.

கிளாலிக் கடற்போரில் இதுவரை எட்டு கடற்புலி வீரர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்கள். சமீபத்தில் கூட (24-05-1993 இல்) சாஜகான், சேகர், மணியரசன் ஆகிய வீரர்கள் மக்களுக்காக மடிந்திருக்கிறார்கள். தமது உயிரைப் பணயம் வைத்து புலிகள் மக்களுக்கு பாதுகாப்பு அளித்து வருகிறார்கள் என்ற சூசையின் கூற்றை, இந்தத் தற்கொடைச் சாவுகள் நிரூபித்திருக்கின்றன.

இந்த கடற்போர் ஆபத்து நிறைந்தது. எதிரியின் விசைப்படகுகள் வேகம் மிகுந்தவை. 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்டவை. கடற்படைக்கு பின்தளவசதிகள் உண்டு. ஆகாயப்படையின் பக்கபலமும் உண்டு. கடற்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி நிலைகுலையும் போதெல்லாம் விமானப்படையின் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம். தேவை ஏற்படும்பொழுது தரைத் தளப் பீரங்கிகளும் கைகொடுத்து உதவும்.

இந்தக் கடற்போரில் படையாற்றல் சமபலம் எதிரிக்குச் சாதகமாகவே அமைந்திருக்கிறது. பல நெருக்கடிகள் மிகுந்த போர்ச்சூழலில், வசதிகள் எதுவுமற்ற நிலையில், வரையறுக்கப்பட்ட

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வளத்தில் கட்டப்பட்ட தொழில்நுட்பப் பலத்தில், ஒரு சக்திவாய்ந்த எதிரிக்குச் சவாலாக கடற்புலிகள் வளர்ந்து நிற்பதும், இக் கடற் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டு ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதும் வியக்கத்தக்க விடயமாகும்.

இது எப்படிச் சாத்தியமாகியது என்று சூசையிடம் கேட்ட பொழுது, "விடாமுயற்சி, துணிவு, தன்னம்பிக்கை, போர்த்திறன், எல்லாவற்றிற்கும் மேலாக மக்களுக்காகத் தம் உயிரை ஈயும் அலாதியான அர்ப்பணிப்பு" என்று உறுதியான பதிலளித்தார்.

கடற்புலிகளின் பாதுகாப்புக் கவசம் இருப்பதால் கிளாலிப் பயணம் தொடர்கிறது. யாழ் குடா முற்றுகையின் முதுகெலும்பு கடற்புலிகளால் முறிக்கப்பட்டுவிட்டது.

கிளாலிக் கடற்பயணத்தில் பொதுமக்கள் கொலையுண்ட சம்பவங்கள் பற்றி சூசையிடம் கேட்டேன். "கடற்புலிகளின் பாதுகாப்பு இல்லாத சமயத்தில் இந்தப் படுகொலைகள் நடந்திருக்கின்றன. எமது பாதுகாப்பு இருக்கும் வேளையில் எவ்வித அசம்பாவித சம்பவங்களும் நிகழவில்லை. இப்பொழுது மிகவும் கட்டுப்பாடான ஒழுங்கமைப்பில் பயணிகள் போக்குவரத்து நடக்கிறது" என்று விளக்கினார் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி.

இப்பொழுது கிளாலிப் பயண நாட்களை நிதித்துறையினர் முன்கூட்டியே அறிவித்துவிடுகின்றனர். அந்த நாட்களில் கடற்புலிப் படகுகள் வியூகம் அமைத்து காவல் புரிய கிளாலிப் பயணம் நிகழும். அந்த நாட்கள் எந்த நாட்கள் என்று கடற்படைக்கு தெரியும். நூற்றுக்கணக்கில் படகுகள் நகர்வது 'ராடர்' திரையில் வெண்ணிறப் புள்ளிகளாக அசையும். பகிரங்கப் பிரகடனம் செய்து புலிகள் இயக்கம் கடல் முற்றுகையை உடைப்பதைக் காண சிங்களக் கடற்படைக்கு சினம் எழும். நாகதேவன்துறையிலிருந்து நீருந்து விசைப்படகுகள் புறப்படும். அவற்றின் வரவை எதிர்பார்த்து புலிகளின் கடற்குருவிகள் காத்து நிற்கும். கடற் போராளிகளுடன் மோதுவதைத் தவிர்த்து கடற்பயணிகளைத் தாக்குவதற்குக் கடற்படை முயற்சிக்கும். அந்த நகர்வுகளை இனங்கண்டு கடற் குருவிகள் கடுகதி வேகத்தில் பறக்கும்.

Tamileelam Archive

கால்மணி நேரம் கடற்சண்டை நடக்கும். அதன் பின் ஓட்டப் போட்டி நிகழும். புலிகள் விரட்ட நீருந்துப் படகுகள் பின்வாங்கி ஓட, பூநகரி முகாமிலிருந்து பீரங்கிகள் முழங்க, கிளாலிக் கடல் விழாக் கோலம் கொள்ளும்.

தரையுத்தம் போல அல்லாது கடற்போர் வித்தியாசமானது. தரையில் பொருண்மிய புற நிலைகளைக் கண்டறிந்து செயற்படலாம்; இயற்கையின் கோடுகளைக் கண்டுகொள்ளலாம்; பாதைகளை வரித்துக் கொள்ளலாம். விழுப்புண் ஏற்பட்டு விழும்பொழுது நிலம் தாங்கிக் கொள்ளும். கடல் அப்படியல்ல. எல்லையற்றதாக விரிந்து கிடக்கும். குறிப்புகள் புலப்படாது. இருள் கவிந்து கொண்டதும் பாதைகள் தெரியாது. சதா அசைந்துகொண்டிருக்கும் அதன் முதுகில் சவாரி செய்து கொண்டு சண்டை பிடிப்பது சிரமம். உலுக்கி, தூக்கி எறிந்தபடி படகு கடுகதியில் விரைந்து செல்லும்பொழுது குறிபார்த்துச் சுடுவது இலகுவான காரியமல்ல. படகு தீப்பற்றி எரிந்து வெடித்தால் காயமடைந்தவர்களைக் கடல் விழுங்கிக்கொள்ளும்.

கடற்போர்க்கலை மிகவும் நுட்பமானது. அதற்கு நிறையப் பயிற்சியும் அனுபவமும் தேவை. மீன் போல கடலோடு வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அத்துடன் கடற்போருக்கு அபாரமான நெஞ்சுரமும் வேண்டும். எந்த நேரமும் தயார்நிலையில் இருக்கவேண்டும். எல்லையற்றதாக விரிந்து கிடக்கும் கடற்பரப்பில் எந்த நேரத்தில், எந்த மூலையிலிருந்து எதிரி தலையெடுப்பான் என்று அனுமானிப்பது கடினம்.

"எமது போராளிகள் கடற் போர்க்கலையில் வல்லவர்கள். அபாரமான துணிச்சல் கொண்டவர்கள். எமது துணிவிற்கே எதிரி பயப்படுகிறான்" என்றார் சூசை.

கடற்புலிகளின் வளர்ச்சி பற்றியும், கிளாலிக் கடற்பரப்பில் அவர்கள் நிலைநாட்டியுள்ள கடலாதிக்கத்தின் முக்கியத்துவம் பற்றியும் எமது மக்கள் உணராமல் இருக்கலாம். ஆனால் எதிரி நன்கு உணர்ந்திருக்கிறான். கடற்புலிகளின் வளர்ச்சியும் எழுச்சியும் சிங்கள ஆதிபத்தியத்திற்குப் பெரியதொரு அச்சுறுத்தலாக எழுந்திருப்பது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எதிரிக்குக் கலக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டு முற்றுகை என்ற எதிரியின் போரு பாயத் திட்டம் கடற்புலிகளால் உடைக்கப்பட்டிருக்கிறது. இதனால் இரண்டாவது கட்ட ஈழப்போரை குறித்த இலக்கில் நகர்த்த முடியாது எதிரி திணறிப்போய் நிற்கிறான்.

- பிரமஞானி

ஈழநாதம்

4.6.1993

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கடலலை மீதினில் கரும்புலிகள்

பலர் கருதுவது போல எமது வாழிடமான நிலப்பகுதி மட்டும் தான் தமிழீழத் தாயகம் அல்ல.

பழமையும் பெருமையும் செழுமையும் கொண்ட தமிழீழக் கடலும் தமிழர் தாயகம்தான். எமது விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்த வரை எமது கடலுக்கும் முக்கிய பங்குண்டு.

விநியோகங்களுக்கும் போக்குவரத்திற்கும், வெளி உலகத் தொடர்பிற்கும் இக்கடலே பிரதானப் பாதையாக இருந்துவருகிறது.

இதை நன்கு அறிந்த சிங்கள அரசு கடற்பயணங்களைத் தடுத்து விடுதலைப் போராட்டத்தை நசுக்கத் திட்டமிட்டது.

அதன் பிரகாரம் 1984 ஆம் ஆண்டு திரு. லலித் அத்துலத்முதலி பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றபின் இந்தக் கடல் எமதும் எமது மக்களினதும் பாவனையிலிருந்து தடை செய்யப்பட்டது. ‘கடல் கண்காணிப்பு வலயம்’ என்ற பெயரில் தமிழீழக் கடல் சிங்களக் கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டது.

இந்தக் கண்காணிப்பு வலயத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில், தமிழீழக்கடலில் நிரந்தரமாகச் சில கப்பல்கள் நங் கூரமிட்டன. இவை தாய்க் கப்பல்கள் அல்லது கட்டளைக் கப்பல்கள் என அழைக்கப்பட்டன. சாதாரண சரக்குக்கப்பல்களை கடற்கண் காணிப்புக்கு ஏற்றபடி சிறு மாற்றங்களைச் செய்து, சில சாதனங்களையும் பொருத்தி, கட்டளைக்கப்பல்களாக சிங்கள அரசு மாற்றியுள்ளது. ‘ராடர்’ சாதனங்களும் சிறுரகப் பீரங்கிகளும் கனரக இயந்திரத் துப்பாக்கிகளும் இதில் பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் கப்பல்களின் பணி கடலில் தமிழர்களின் படகுகள் எவையாவது தென்படுகின்றனவா என்பதை வேவு பார்ப்பதும், அப்படித் தென்பட்டால் அந்தச் செய்தியை கடற்படையின் அதிவேக விசைப் படகுகளுக்கு அறிவித்து குறித்த படகுகளை மூழ்கடிப்பதுமாகும்.

Tamileelam Archive

இவ்விதம் இக்கட்டளைக் கப்பல்கள் தமிழீழக்கடலில் நங்கூரமிட்ட பின், கடலில் பயணம் போன நூற்றுக்கும் மேற்பட்ட புலிவீரர்கள் கடலிலே வீரச்சாவடைந்தனர். 14.04.1985 அன்று புலிகள் இயக்கம் கடலிலே தனது முதலாவது இழப்பைச் சந்தித்தது. அதில் 14 புலிகள் வீரச்சாவடைந்தனர். அத்துடன் பல நூற்றுக்கணக்கான மீனவர்களும் பிரயாணம் செய்த மக்களும் கடலிலே பலியானார்கள். இந்த இழப்புகளுக்கெல்லாம் குடா நாட்டைச் சூழவுள்ள கடலில் நிறுத்தப் பட்டிருந்த இரண்டு கட்டளைக் கப்பல்களே மூலகாரணிகளாகும். 'அபித்தா' 'எடித்தாரா' என்று பெயர் சூட்டப்பட்ட இந்த இரண்டு கப்பல்களில் ஒன்று காங்கேசன்துறைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் உள்ள கடலில் நிறுத்தப்பட்டிருக்கும். மற்றையது வெற்றிலைக்கேணிக்கு நேரே நிறுத்தப்பட்டிருக்கும். இந்த இரண்டு கப்பல்களையும் அப்புறப்படுத்தாவிட்டால் தொடர்ந்தும் புலிவீரர் களை இழக்க நேரிடுவதுடன் போராட்டப்பணிகளும் பெருத்த சிரமங்களையும் தடைகளையும் எதிர்கொள்ள நேரிடும்.

ஆனால், புலிகள் இயக்கத்திடமிருக்கும் சிறிய படகுகளின் உதவியுடன் இக்கட்டளைக் கப்பல்களை அடித்து விரட்ட முடியாது. எனவேதான் கரும்புலித்தாக்குதல்கள் மூலம் அந்த 'கடல் திமிங்கிலங் களை' அகற்றப் புலிகள் தீர்மானித்தனர்.

10.07.1990 அன்று வடமராட்சிக் கடலில் நங்கூரமிட்டிருந்த 'எடித்தாரா' என்ற பெயருடைய கட்டளைக் கப்பல் மீது ஒரு கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகிய கரும்புலிகள் பங்கேற்றனர்.

இதைப்போன்று 04.05.1991 அன்று 'அபித்தா' என்ற பெயருடைய கட்டளைக்கப்பல் மீது ஒரு கரும்புலித்தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இத்தாக்குதலை கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் ஆகிய கரும் புலிகள் செய்து முடித்தனர். 'அபித்தா' கப்பல் முற்றாகச் சேதமாக்கப் பட்டது. இக் கப்பல் கடற் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு, இப்போது திருகோணமலைத் துறைமுகத்தில் கைவிடப்பட்டுள்ளது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# சிறீலங்கா கடற்படை பதவிக்காலங்கள்

சிறீலங்கா கடற்படையினர் தமது நடவடிக்கைகளையும் ஒழுங்குமுறைகளையும் பிரித்தானிய நாட்டுக் கடற்படையான 'றோயல்' நேவி மூலமே கடைப்பிடித்து வருகின்றனர். காரணம் சிறீலங்கா கடற்படை, விமானப்படை என்பன 1960 ஆம் ஆண்டளவில் பிரித்தானியராலேயே முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டன. எனவே அன்றிலிருந்து இன்றுவரை பிரித்தானிய நாட்டு வழிமுறைகளையே சிறீலங்கா இராணுவத்தினர் கடைப்பிடித்து வருகின்றனர்.

இதன்படி ஒருவர் சிறீலங்கா கடற்படையில் சேர வேண்டும் எனில் அவர் 18-25 வரையான வயதெல்லையை கொண்டிருப்பதுடன் 8 ஆம் தரம் வரையாவது கல்வி பயின்று இருத்தல் வேண்டும். இதைத்தவிர உயர்தரம்- பட்டப்படிப்புத் தகுதியுடையவர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் ஆகியோரும் கடற்படையில் சேரலாம்.

8 ஆம் தரம் கல்வி பயின்ற ஒருவர் கடற்படையில் சேர்ந்தவுடன் 'ரெக்ரூட்' என அழைக்கப்படும் அடிப்படைப் பயிற்சிக்கு அனுமதிக்கப் படுவார். இவர்கள் தமது 18 மாத பயிற்சியின் பின்பு, 'ஓடினறி சீமன்' எனப் பதவி உயர்த்தப்படுவர். ஓடினறி சீமனில் இருந்து இரண்டு வருட காலத்தின் பின்பு இவர்கட்கு சில பரீட்சைகள் நடைபெறும். அத்துடன் குறித்த நபர் ஏதாவது கடல் நடவடிக்கையில் பங்கு பற்றியும், தனது கடமையில் ஒழுங்காகவும் இருந்தாரெனில் அவர் உடனடியாக 'ஏபிள் சீமன்' எனப் பதவி உயர்த்தப்படுவார். இவ்வாறு அவர் படிப்படியாக பல்வேறு பரீட்சைகள், பல்வேறு தனிப்பட்ட பயிற்சிகள் மத்தியில் 'மாஸ்டர் சீவ் பெற்றி ஒவ்விசர்' வரை பதவி உயர்த்தப்படுவார். இப்பரீட்சைகள், பயிற்சிகள் போன்றவற்றில்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

சித்தியடையாதவர்கட்கு மீண்டும் ஆறு மாத காலம் படிப்பதற்கு அனுமதிக்கப்படும். அதிலும் சித்தியெய்யாதாதவர் வேலையில் இருந்து (கடற்படையில்) உடனடியாக நீக்கப்படுவார்.

ஆணை பெறாத அதிகாரிகளுக்கென்று கடற்படையில் ஒரு விசேட பரீட்சை உண்டு. (Highest Naval Educational Test) H.N.E.T எனும் பரீட்சையில் அவர் தோற்றி, அதில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அப்பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் கடற்படைத் தளபதியால் நடாத்தப்பெறும் நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்டு, அதிலும் குறித்த நபர் தேர்ந்தெடுக்கப்பட்டார் எனின் அவர் அதிகாரிகள் பயிற்சிக்கு அமர்த்தப்பட்டு, 'ஆணைபெற்ற அதிகாரியாக' சப் லெப்ரினன்ட் பதவியில் சேர்க்கப்படுவார்.

இப்படியானவர்களை பொதுவாக 'ராங்கர்' (Ranker) என கடற் படையில் அழைப்பர். இவர்களைவிட உயர்தரம், பட்டப்படிப்புகள், மருத்துவம், பொறியியல், கணக்கியல் போன்றவற்றைக் கற்றவர்கள் தத்தம் தராதரத்திற்கேற்ப விண்ணப்பப் படிவமூலம் லெப் கொமாண்டர், லெப்ரினன்ட், சப் லெப்ரினன்ட் போன்ற பதவிகளில் தொடர்பு கொண்டு அவரவர் பயிற்சிகட்கு அனுமதிக்கப்படுவர். ஆனால் அவ்வாறு பயிற்சி பெற்ற அனைவரும் ஒரு நாட்டின் கடற்படைத் தளபதியாக வரமுடியாது. அவ்வாறு வரவேண்டும் எனின் சப் லெப்ரினன்ட் ஆகத் தொடர்பு கொண்டு படிப்படியாக வளர்ந்து பிற நாடுகளில் பயிற்சிகள் பலவும் படிப்புகள் பலவும் பயின்றிருத்தல் வேண்டும்.

மேலும் குறித்த நபரது குடும்ப அந்தஸ்து மிகவும் முக்கியமாகக் கருதப்படும். பெரும்பாலும் அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் உடன்பிறப்புகளும், அவர்களது பிள்ளைகளுமாகவே இவர்கள் இருப்பார்கள். மேலும் ஒரு நாட்டின் கடற்படைத் தளபதியானவர் மூன்று வருடங்கட்குமேல் தனது பதவியில் இருந்து கட்டாயமாக ஓய்வு பெறுதல் வேண்டும். பொதுவாக சிறீலங்கா கடற்படையைப் பொறுத்தவரையில் கடற்படைத் தளபதிக்கு கீழான அடுத்த பதவியில் உள்ள 'சீவ் ஒவ் ஸ்ராவ்' என்பவரே அடுத்த கடற்படைத் தளபதியாக நியமிக்கப்படுவார்.

Tamileelam Archive

# சிறீலங்கா கடற்படையினரின் பதவியுயர்வுகட்கான கால இடைவெளிகள்

1. ரெக்ரூட் -ஒடினறி சீமன் - 2 வருடம் (பரீட்சை)

2. ஒடினறி சீமன் -ஏபிள் சீமன் - 2 வருடம் (பரீட்சை)

3. ஏபிள் சீமன் -லீடிங் சீமன் - 4 வருடம் (பரீட்சை)

4. லீடிங் சீமன் -பெற்றி ஒவ்வீசர் - 4 வருடம் (பரீட்சை)

5. பெற்றி ஒவ்வீசர் - சீவ் பெற்றி ஒவ்வீசர் - 1 வருடம் (பரீட்சை)

6. சீவ் பெற்றி ஒவ்வீசர் - பிளீட் சீவ் பெற்றி ஒவ்வீசர் - 1 வருடம் (பரீட்சை)

7. பிளீட் சீவ் பெற்றி ஒவ்வீசர் - மாஸ்ரர் சீவ் பெற்றி ஒவ்வீசர் - 1 வருடம் (பரீட்சை)

1. சப் லெப்ரினன்ட் - லெப்ரினன்ட் - 2 வருடம் (பரீட்சை)

2. லெப்ரினன்ட் - லெப்ரினன்ட் கொமாண்டர் - 2 வருடம் (பரீட்சை)

3. லெப்ரினன்ட் கொமாண்டர் - கொமாண்டர் - 2 வருடம் (பரீட்சை)

4. கொமாண்டர் - கப்டன் - 4 வருடம் (பரீட்சை)

5. கப்டன் - கொமடோர் - 4 வருடம் (பரீட்சை)

6. கொமடோர் - றியர் அட்மிரல் - 4 வருடம் (பரீட்சை)

7. றியர் அட்மிரல் - வைஸ் அட்மிரல் - 3 வருடம் (பரீட்சை)

8. வைஸ் அட்மிரல் - அட்மிரல் - 3 வருடம் (பரீட்சை)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பூநகரிப் பெருந் தாக்குதலும் அதில் கடற்புலிகளின் பங்கும்

ஈரூடகத் தாக்குதல் திட்டத்தைக் கொண்ட பூநகரி கூட்டுத்தளம் மீதான 'தவளை' இராணுவ நடவடிக்கையில் கடற்புலிகள் ஆற்றிய பங்கும் - பணியும் மிக முக்கியமானதாக இருந்தது.

நாகதேவன்துறையில் அமைக்கப்பட்டிருந்த சிங்களக் கடற் படையின் படகுத்துறையைக் கைப்பற்றுவதுடன் இந்தச் சண்டை முடியும் வரை பூநகரி கூட்டுத்தளத்திற்கு கடல்மூலம் உதவிகள் கிடைக்க விடாது தடுப்பதும் கடற்புலிகளின் விசேட பணியாக இருந்தது. அதேவேளை காயப்பட்ட போராளிகள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படுவதற்கும், சண்டையிடும் போராளிகளுக்கான உணவு தொடக்கம் சகல விநியோகங்களுக்கும், நடந்த குடாக் கடலூடான, கடற்போக்குவரத்திற்கும் கடற்புலிகளே பாதுகாப்பைக் கொடுத்து அப்பணியைத் திறம்படச் செய்தனர்.

11.11.1993 அன்று அதிகாலை தாக்குதல் தொடங்கிய பின் நாகதேவன்துறை படகுத் தளத்தினுள் ஊடுருவிப்பாய்ந்த கடற்கரும்புலி மேஜர் கணேஸ் வெடிமருந்து நிரப்பப்பட்ட தனது படகை எதிரியின் நிலைமீது மோதி கடற்படையினரை நிலைகுலைய வைத்தான். அதைத் தொடர்ந்து கடல்வழியாக கடற்புலி வீரர்கள் தொடுத்த அதிவேகத் தாக்குதல்களால் எதிரியின் ஐந்து நீருந்து விசைப்படகுகள் கைப்பற்றப்பட்டன. நாகதேவன்துறை புலிகளின் கையில் வீழ்ந்தது.

அன்றைய இரவு விடிந்ததும் மன்னார் கடலிலுள்ள பாலைதீவுப் பக்கமிருந்து கல்முனை - பள்ளிக்குடா கரையோரமாகத் தரையிறங்க எதிரி முயன்றான். இத் தரையிறக்க முயற்சியில் எதிரியின் இரண்டு தரையிறக்கும் கலங்கள் (Landing Craft) ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

(ஒரு தரையிறக்கும் கலம் ஒரே தடவையில் 600 சிப்பாய்களை அவர்களது ஆயுதங்களுடன் ஏற்றி-ஒரு அடி ஆழத் தண்ணீர்வரை வந்து தரையிறக்க வல்லது.)

இத்தரையிறக்க நடவடிக்கைக்கு உதவி புரிய 'வீரயா', 'சூரயா' (இதன் விபரம் இந்நூலின் 54 ஆம் பக்கத்தில் உள்ளது) வகையைச் சேர்ந்த இரண்டு மோட்டார் பீரங்கிப் படகுகளும் அதேவேளை நான்கு 'டோரா' சண்டைப் படகுகளும் கரையை நோக்கியும் , கடலில் நின்ற கடற்புலிகளின் படகுகளை நோக்கியும் குண்டுமழை பொழிந்து கொண்டிருந்தன. இதேவேளை வானில் வட்டமிட்டபடி உலங்கு வானூர்திகளும் குண்டுவீச்சு விமானங்களும் கடற்புலிகளின் படகுகள்மீது தாக்குதலை நடாத்தி சிங்களப் படையின் தரையிறக் கத்திற்கு உதவ முயற்சித்துக் கொண்டிருந்தன.

ஆனாலும் பூநகரித் தளத்தைவிட்டு புலிகள் வெளியேறும்வரை (13 ஆம் திகதி மாலைவரை) வானிலிருந்தும் கடலிலிருந்தும் எதிரி பொழிந்த குண்டுத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்தபடி துணிச்ச லுடனும் சாதுரியத்துடனும் போரிட்ட கடற்புலிகள், எதிரியின் தரை யிறக்கத்தை தடுத்து நிறுத்தி தாக்குதல் வெற்றிக்கு முக்கியகாரணியாக இருந்தனர்.

சிங்களக் கடற்படையைச் செயலிழக்கச் செய்வதன் மூலம்தான் இம்முகாம் தாக்குதலின் முழுப்பலனையும் பெறமுடியும் என்பது புலிகள் வகுத்த தாக்குதற் திட்டத்தின் ஒரு பிரதான அம்சமாகும். அதைக் கடற்புலிகள் செவ்வனே செய்து ஒரு சாதனை படைத்து விட்டனர்.

பூநகரி கூட்டுத்தளமானது தனது சொந்தப் பாதுகாப்பிற்கு சிங்களக் கடற்படையையே பெரிதும் நம்பியிருந்தது. யாழ். நீரேரியை ஒரு புறத்திலும் மன்னார்க் கடலுடன் தொடர்புடைய நிலத்தை மறு பகுதியிலும் கொண்டு இந்தக் கூட்டுத்தளம் அமைந்திருந்தது. கடற்பலத்தைப் பொறுத்தளவில் சிங்களப் படையானது ஒரு அதீத நம்பிக்கையுடனேயே இருந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்

கடல்வழி மூலமான ஒரு கெரில்லாத் தாக்குதலுக்குரிய சக்தியை

கடற்புலிகள் கொண்டிருந்தாலும் பட்டப்பகலிலும் தொடர்ந்து நடைபெறும் ஒரு கடற்சண்டைக்குரிய திறனை கடற்புலிகள் கொண்டிருக்கவில்லை என்றே படைத்துறையின் உயர்பீடம் கருதியது. இதனால் பூநகரி முகாம் புலிகளால் தாக்கப்பட்டாலும் கடல்மூலமான உதவிகளைப் பெற்று தாக்குதலை முறியடிக்கலாம் என்றே படைத்துறை உயர்பீடம் நம்பியிருந்தது.

ஆனால் பூநகரி கூட்டுத்தளம்மீது தொடர்ந்து தாக்குதல் நடந்த மூன்று நாட்களும் கடற்புலிவீரர்கள் பூநகரியைச் சுற்றியுள்ள கடலை முழுமையான கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தனர். விமானப் படையின் உதவியுடன் சிங்களக் கடற்படை கடலிலே நடாத்திய மரபுவழி யுத்தத்தை எதிர்கொண்ட கடற்புலிகள் திறமையாகப் போரிட்டு எதிரியே ஆச்சரியப்படும் அளவுக்கு சாதனை புரிந்துள்ளனர்.

கடற்கெரில்லாக்கள் என்ற நிலையிலிருந்து தொடர்ச்சியாக நடைபெறும் கடற்சண்டைகளுக்கும் கடற்புலிகள் தயாராகி விட்டார்கள் என்ற உண்மையை 'தவளை' இராணுவ நடவடிக்கை வெளிப்படுத்தியுள்ளது.


நாகதேவன்துறை படகுத்தளம் மீதான தாக்குதலின் போதும் அடுத்து நடந்த மூன்று நாள் கடற்சண்டைகளின் போதும் விழுப்புண்ணடைந்து வீரச்சாவடைந்த கடற்புலிகளின் மகளிர் படை அணியைச் சேர்ந்த லெப். கேணல் பாமா கடற்கரும்புலிகள் மேஜர் கணேஸ், மேஜர் கோபி உட்பட 30 கடற்புலி வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.

'தவளை' இராணுவ நடவடிக்கையில், கடற்புலிகள் வெளிப் படுத்திய போர்த்திறன் ஒருபுறமிருக்க, இந்தத் தாக்குதலில் கடற் புலிகள் கைப்பற்றிய ஐந்து நீருந்து விசைப்படகுகளும் கடற்புலிகளின் பலத்தை பெருமளவு அதிகரிக்கச் செய்து விட்டன.

இதுவரை காலமும் சாதாரண படகுகளுடன் ஆழங்குறைந்த கிளாலிக் கடல் நீரேரிப்பகுதியில் மேலாதிக்கம் செலுத்திய கடற்புலிகள் இனி நீருந்து விசைப்படகுகளுடன் கிளாலி நீரேரியை முழுமையான

ka

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




-இராணுவ முகாம்கள். ×××× – இராணுவ வேலிகள். – – – – பிரதான வீதி. ……படகு சேவை நடைபெறும் ப

rt

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் அதேவேளை, பெருங்கடலிலும் சிங்களக் கடற்படைக்குப் பெரிய சவாலாக அமைவார்கள் என்று நம்பலாம்.

தனித்த நிலையில் இருந்தாலும், கடற்கரையோரம் அமைக்கப் பட்ட இராணுவத் தளங்கள் பாதுகாப்பானவை என்றே இதுவரை காலம் படைத்துறைத் தலைமை எண்ணியிருந்தது. 'தவளை' இராணுவ நடவடிக்கையுடன் அந்த எண்ணம் தகர்ந்துவிட்டது. மன்னார் மாவட்டத்திலிருந்த சிலாவத்துறை முகாம் அண்மையில் அகற்றப்பட்டதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

'தவளை' இராணுவ நடவடிக்கையின் இராணுவப் பரிமாணத் தையும், நாகதேவன்துறையில் கடற்புலிகள் கைப்பற்றிய நீருந்து விசைப்படகுகளையும், அவற்றின் சக்தியையும் எடைபோடும் ஒரு இராணுவ வல்லுனன், 'குடாநாடு மீதான இராணுவ முற்றுகை என்பது இனிமேல் சாத்தியமற்றதொன்று' என்ற முடிவுக்கே வருவான்.

இது தமிழீழவிடுதலைப் போராட்டத்தின் ஒரு வளர்ச்சிக் கட்டத்தை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டுகின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வங்கக் கடல் தமிழன் கடலாகும்

நீல வானத்தில் முழுநிலவு ஒளிக்கதிர்களைப் பரப்பிக்கொண்டிருக்கிறது. கடலரசியோ ஆர்ப்பரித்து தனது ஆயிரமாயிரம் அலைக்கரங்களை நீட்டி நிலவைத் தழுவ முயன்று கொண்டிருக்கிறாள். இந்த அழகிய பின்னணியில் மட்டக்களப்பிலிருந்து யாழ் நோக்கிப் படகில் பயணமாகிக்கொண்டிருக்கிறோம். எனது அருகில் கவிஞர் காசி ஆனந்தன் அமர்ந்திருந்தார். ஒரு கவிஞனும் ஒரு ரசிகனும் சேர்ந்துவிட்டால் அதுவும் எழிலார்ந்த சூழ்நிலையில் சேர்ந்து விட்டால் பேசிமகிழ்வதற்குக் கேட்கவா வேண்டும்!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றிப் பேசினோம். இதே வங்கக்கடல் எத்தனை விடுதலைப் புலிகளையும் தமிழீழ மக்களையும் கொள்ளை கொண்டுவிட்டது என்பதை வேதனையோடு நினைவு கூர்ந்தோம். நாங்கள் பயணம் செய்த படகின் முகப்பில் விடுதலைப் புலிகளின் கொடி கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தது. பொங்கி எழும் அலைகளின் மீது ஏறி ஏறி இறங்கும் போது சடசடவென புலிக்கொடி ஆடிப்பறந்த அந்தக்காட்சி என்னை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னே கொண்டு போய்விட்டது.

சோழப் பேரரசர்களான இராசராசனும் இராசேந்திரனும் ஆண்ட காலத்தில் புலிக்கொடி பறந்த கப்பல்கள் வங்கக் கடலில் இப்படித்தான் சென்றிருக்க வேண்டும் எனக்கவிஞரிடம் கூறினேன். அவரும் பெருமிதத்தோடு "ஆம்" என ஆமோதித்தார்.

இந்தியாவின் புகழ்பெற்ற வரலாற்று அறிஞரான கே.ஏ. நீலகண்டசாஸ்திரி அவர்கள், தான் எழுதியுள்ள சோழ வரலாறு பற்றிய நூலில் பின்வருமாறு கூறுகிறார்: "வங்கக்கடலில் சோழர்கள்

ஆதிக்கம் செலுத்தினர். உண்மையில் வங்கக்கடல் சோழர்களின் ஏரியாகத்தான் திகழ்ந்தது.''

சாஸ்திரியின் மேற்கண்டகூற்று வெறும் புகழ்ந்துரையல்ல; வங்கக்கடலில் மட்டுமல்ல, கீழைக்கடல் முழுவதிலும் சோழர்களின் ஆதிக்கம் பரவியிருந்தது. பர்மா, மலேசியா, இந்தோனேசியா, சீனா வரையிலும் புலிக்கொடி தாங்கிய கப்பல்கள் தங்குதடையின்றிச் சென்று வந்தன.

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, புலிக்கொடி தாங்கிய கல மொன்றில் பயணம் செய்யும் பேறு எங்களுக்குக் கிடைத்தது குறித்து இருவரும் மகிழ்ந்தோம்.

தம்பி பிரபாகரன் அவர்களை மறுநாள் சந்தித்தபோது மேலே குறிப்பிட்டவற்றை அவரிடம் கூறினேன். அப்போது அவர், 'கடற் புலிகள்' என்ற பெயரோடு தனியான கடற்படை அமைக்கப்போகும் திட்டம்பற்றிக் கூறினார்.

'தம்பி' யின் முகத்தில்தான் எவ்வளவு தன்னம்பிக்கை! எவ்வளவு பெருமிதம்! நினைத்ததை முடிக்கும் 'தம்பி' யின் காலத்தில், வங்கக் கடலில் தமிழர் கொடி மீண்டும் பறக்கப்போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்பதை அந்தக் கணத்தில் உணர்ந்தேன்.

– பழ. நெடுமாறன்

நன்றி: உலகத் தமிழர்

15.03.1993

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



Printed by VASAN LITHO PRINTER Tel: 0181 - 640 4366 U.K